விவேக போதினி

டங்களுடன்கூடிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

THE VIVEKA BODHINI

An Illustrated Tamil Monthly

தொகுதி 21] ஆடிமீ :: July, 1929 [பகுதி 7

R011-110 1222



திருத்தணிகைக் காட்சி

பதிப்பாசிரியர்கள்:- அல்லயன்ஸ் கம்பெனியார்,
ஷண்முகவிலாசம், மயிலாப்பூர், சென்னை.

PUBLISHERS:- The Alliance Company,
"Shanmuga Vilas" Mylapore, Madras.

இதுவரை வெளிவராத அரிய நூல்

- ஸ்ரீ அருணகிரி நாதர் -

திருப்புகழ்

விருத்தியுரை

சுவாமிமலை, பழநி, : : :

: : : : திருச்செந்தூர்

ஆகிய திவ்ய ஸ்தலங்களில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுள்மீது, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய திருப்புகழ்ப் பாடல்களும், அவற்றிற்குத் தெளிவான பதவுரை, விருத்தியுரை முதலியனவும் கொண்டது.

552-பக்கங்கள் : : **11**-போடோ படங்கள்

உயரிய கிளேஸ் பதிப்பு ரூ. **6-0-0** : : பெதர்வேயிட் பதிப்பு ரூ. **8-0-0**

☞ நூலின் கௌரவத்துக்குத் தக்கபடி மிகவும் நேர்த்தியான பைண்ட்

சில முக்கிய அபிப்பிராயங்கள்

இந்து சாதனம் :—* மிக நுட்பமாகவும் விரிவாகவும், பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கிறது.

குமரன் :—* பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக்கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

ஸமரஸ போதினி :—* திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது.

ஸ்வராஜ்யா :—* பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் போவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

லோகோபகாரி :—* இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத் குறை நெடுநாளாக இருந்துவந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

சுதேச மித்திரன் :—* முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதா னிருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, ஷண்முக விலாசம், மயிலாப்பூர், சென்னை.

தேசிங்கு ராஜன்

சரித்திர ரூபமான வசனம்

சதாவதானம்
தே. கிருஷ்ணசாமிப் பாவலர் இயற்றியது

4 - சித்திரப் படங்கள் கொண்டது

விலை அணா 10

போருளடக்கம்

1. தென்னிந்தியாவின் நிலைமை
2. செஞ்சிக்கோட்டையின் வரலாறு
3. சிரோப்சிங்கின் மற்றொரு மகன்
4. தேஜஸ்சிங்கின் வீரச்செயல்கள்
5. ஷா - ஆலமும் குதிரையும்
6. தேஜஸ்சிங்கின் பிரயாணம்
7. குதிரையேற்றமும் விவாகமும்
8. தேவநாதன் பட்டணத்தில் குழப்பம்
9. தேஜஸ்சிங்கின் ஆளுகை
10. சததுல்லாகானின் கலகம்
11. செஞ்சி ராணுவத்தில் கலகம்
12. புதிய வீரன்
13. குடிகள் முறையிடும், தேஜஸ்சிங்கின் [பூஜையும்
14. மகமத்கானின் விவாகம்
15. தேஜஸ்சிங் ராணியைப் பார்த்தல்
16 செஞ்சியின் சிதைவு

இந் நூலைப்பற்றி இந்துநேசன் எழுதுவது :— தமிழ் நாட்டுப் பழமைக் கதைகளுள் பாமரர் பலராலும் பரிவுடன் கூறப்படும் கதை **தேசிங்கு ராஜன்** கதையேயாகும். தென்னிந்தியச் சரித்திரத்தில் மிகவும் பிராபல்யப் பெயர் பெற்று விளங்கிய செஞ்சிக் கோட்டையை நம்மவர் அறியாதவரல்லர். மோஹலாய சக்கரவர்த்தியான அவுரங்கஜீப்பின் காலத்திலும் அவனுடைய புதல்வனான ஷா ஆலம் காலத்திலும் தென்னிந்தியாவின் கண்ணுள்ள கர்னாடக ராஜ்யத்திலே-செஞ்சிக் கோட்டையானது விசேஷ முக்கியத்துவத்தோடு கூடி விளங்கியது.

:விவேக போதினி:

தொகுதி 21] சுக்கில ஆடி மீ [பகுதி 7

போருளடக்கம்

முருகன் வழிபாடு ... 242
கிராமச் சீர்திருத்தம் ... 243
மின்சாரக் கம்பி விளக்குகளும் அவைகளை உபயோகிக்கும் வகையும் ... 246
நமது சிறு கதை—ஸ்வப்னமோ ? ... 248
பண்டைத்தமிழர் இசையும், இசைக் கருவிகளும் ... 252
பேகன் பிரிவாற்றாத கண்ணகி ... 257
விவேகநாதன் அல்லது சரஸ்வதி பீடத்தின் மர்மம் — ஒரு துப்பறியும் நாவல் ... 263
நித்திய விதி ... 272
சிறுவர்க்கான பக்கங்கள் ... 273
ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... 275
பிரபஞ்ச வர்த்தமானம் ... 280

சித்திரப்படங்கள்.

1. திருத்தணிகைக் காட்சி
2. ஸ்ரீமந் நாராயணன்—முகப்புப் படம்
3. சிறுவர்க்கான பக்கத்திற்கு ஐந்து சித்திரங்கள்

சோழ மன்னர்களால் பேராண் என்று மதிக்கப்பட்டு வந்த அந்தக் கோட்டையையும் அதை அணுகிய பிரதேசத்தையும் பரிபாலித்து வந்த தேசிங்கு ராஜனது திக்விஜயத்தை நம்மவர் தெள்ளிதில் அறிந்து தெளியுமாறு இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதிலுள்ள ஒவ்வோர் அத்தியாயத்தையும் கவனிப்போமானால் சரித்திரானுஸாரமானதும் உவப்பைத் தரக்கூடியதும் ஆன செய்திகள் பல தெரியவருகின்றன. நன்றாக ஆராய்ச்சி செய்து நற்றமிழில் தொகுக்கப்பெற்று இது 124-பக்கங்களோடு பிரகாசிக்கின்றது. வெண்மைக் காகிதத்தில் பெரிய எழுத்துக்களில் அச்சிடப் பெற்றிருக்கும் இக்கதை இடையிடையே சித்திரப் படங்களோடு விளங்குவதல்லாமல் பள்ளிக் கூட மாணவர்களும் உபயோகித்தற்குரியதென்று டெக்ஸ்ட் புக் கமிடியார் அங்கீகரித்திருக்கிறார்கள். நம் நாட்டுச் சிறுவர்களும் சிறுமியர்களும் பரிவுடன் படித்துப் பாங்குடன் பலன்பெறும் லட்சியத்தை யடையுமாறு இந்நூலுக்கு ரெவரெண்ட் ஜே. லாஸரஸ் முகவுரை எழுதியிருப்பதனாலேயே இதன் உபயோகத்தைக் குறித்து நாம் அதிகம் சொல்லவேண்டிய தனாவசியம். தமிழர்கள் இதற்குப் போதிய ஆதரவளிப்பாராக.

ஷண்முகசுந்தரம் :: துப்பறியும் நாவல்களுள் எவ்விதத்திலும் சிறந்தது :: 8 படங்களுடன், ரூ.

:: சந்தாதார்க்கு மாத்திரம் ::

- - மிகக் குறைந்த விலை - -

நெம்பர்.	புத்தகங்களின் பெயர்	புத்தகத்திற்கு ஏற்பட்ட விலை	சந்தாதார்க்கு இப்போது கொடுக்கப்படும் விலை.
1.	ஸ்திரீரத்னம் - தேசபக்தி புகட்டும் அரிய நாவல்	1 4 0	0 12 0
2.	சற்குணசந்திரன் - உயரிய நாவல்	0 10 0	0 7 0
3.	சங்கநிதி அல்லது செல்வ ராஜன் - ஆரணி குப்புசாமி முதலியார் எழுதியது	0 12 0	0 9 0
4.	ஹிமார்ஜுனை	0 8 0	0 4 0
5.	கிரிஸெல்டா அல்லது பொறுமையுள்ள மனைவி	0 3 0	0 2 0
6.	புலவர் சரித்திரத் திரட்டு	0 12 0	0 6 0
7.	பீமலா அல்லது திவான் மகள்	0 8 0	0 4 0
8.	ஜகஜ்ஜோதி - சரித்திர சம்பந்தமான நாவல்	0 10 0	0 6 0
9.	ஸ்ரீ ராமாயண வினாவிடை - (100 புத்தகங்களை கைவசமிருப்பவை)	1 8 0	1 4 0
10.	ஹனுமப் பிரபாவம்	0 3 0	0 2 0
11.	ஸ்ரீபாரத வினாவிடை-பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய சௌப்திக, ஸ்திரீ பர்வங்க ளடங்கியது	1 4 0	0 12 0
12.	ஸ்ரீ பாரத வினாவிடை சாந்தி, அனுசாஸன, அசுவமேத, ஆச்ரமவாசிக, மௌஸல, மஹாப் பிரஸ்தான, ஸ்வர்க்காரோஹண பர்வங்க ளடங்கியது.	1 4 0	0 12 0

குறிப்பு.—சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிராதவர்களுக்கு மாத்திரமே மேற்கண்ட புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். சந்தாவை பாக்கியில் வைத்திருப்பவர்கள் மேற்கண்ட புத்தகங்களைக் குறைந்த விலைக்குப் பெற விரும்பினால், தங்கள் சந்தா பாக்கியை அனுப்பி, பின்னர் புத்தகங்களைக் குறைந்த விலைக்குப் பெறலாம் சந்தாதாரர்கள் புத்தகங்களுக்கு ஆர்டர் செய்கையில், தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விலாசம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

ஸ்ரீமன் நாராயணன்

7

விவேகபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

Roll-110
1222

தொகுதி 21 } சுக்கிலஹு ஆடிமீ :: 1929-ம் ஹு ஜுலைமீ { பகுதி 7

விவேக போதினி

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்கள் க்ஷேமத்துக்காக சென்ற 21-ஆண்டுகளாக உழைத்துவரும் ஒரு மாதப் பத்திரிகை. பற்பல கவர்ன்மெண்டுகளும், பள்ளிக்கூடங்கள், உபாத்தியாயர்கள், மாணவர்கள் உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும், முனிசிபாலிடிகளும், பொதுமக்கள் உபயோகத்துக்காக பஞ்சாயத்துக்களும், "விவேக போதினி" யை வாங்கி ஆதரித்து வருகின்றன.

தபால் செலவுடன், சந்தா விபரம்

	உள் நாடு	வெளி நாடு
ஒரு வருஷத்துக்கு	ரூ. 3 8 0	ரூ. 4 8 0
தனிப் பிரதி	ரூ. 0 5 0	ரூ. 0 6 0
மாதிரிப் பிரதி	ரூ. 0 2 0	இனம்.

போஷகர்களுக்கு ரு. நூறு

ஜீவிய சந்தா (ரு. 50) ரூபாய் ஐம்பது

சந்தாத் தொகை, விளம்பரக் கட்டணம் இவைகளை ஒரு ஏஜண்டினிடமும் கொடுக்கக்கூடாது. சகல தொகைகளும் எங்கள் காரியாலய மானேஜருக்கு அனுப்பிவிடல் வேண்டும். சந்தாதார்கள், குறைந்த விலைக்கு புத்தகங்கள் ஆர்டர் செய்கையில், தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும்.

ஒப்பந்த விளம்பர விகிதம்

ஒரு வருஷத்துக்கு முழுப் பக்கத்துக்கு	ரூ. 125 0 0
ஒரு வருஷத்துக்கு அரைப்பக்கத்துக்கு	ரூ. 75 0 0
ஒரு வருஷத்துக்கு கால் பக்கத்துக்கு	ரூ. 45 0 0

வியாசம் எழுதுபவர்களுக்கு

வியவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவைகளைப்பற்றிய வியாசங்களும், அழகான சிறு கதைகளும் தேவை. அவைகள் எளிய தமிழ் நடையில், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் மையினால் எழுதியனுப்பப்படல் வேண்டும். ஒப்புகொள்ளப்பட்ட வியாசங்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். இப்பத்திரிகைக்கு அநேகம் பெண் பாலரும் விஷய தானம் செய்துவருவது கவனிக்கத்தக்கது.

சம்பாவனை செய்யப்பட்ட வியாசங்களை, மறுபடி புத்தக ரூபமாகப் பிரசுரிக்கும் பாத்தியதை, இப்பத்திரிகையின் பிரசுரகர்த்தர்களைச் சேர்ந்ததாகும்.

THE VIVEKA BODHINI

An Illustrated Tamil Monthly devoted to diffusion of knowledge and popular education, Published for the past 21 years. The Viveka Bodhini is subscribed for by the Governments, several Local Boards, Panachayats & Municipalities for the use of Teachers and others in the schools etc., under their control.

Rates of Subscription (Post Free)

	Inland Rs. A. P.	Foreign Rs. A. P.
Per annum	3 8 0	4 8 0
Single copy	0 5 0	0 6 0
Sample copy	0 2 0	Free.

For Patrons Rs. One Hundred

:: Life Subscription (Rs. 50.) Rs. Fifty ::

Rates of Advertisement

Full Page ...	Rs. 125 0 0	per annum
Half Page ...	„ 75 0 0	per annum
Quarter Page ...	„ 45 0 0	per annum

The above rates are all net and subject to no discount whatever. Advertisement orders should be accompanied with advance.

Notice to Contributors

The Editor solicits contributions on all subjects relating especially to Science, Agriculture, Industry and Commerce and neatly written short stories. Articles should be written in simple colloquial Tamil and on one side of the paper only and in ink. Accepted articles will be paid for on publication. It is distinctly understood that the Publishers may at their discretion publish in book form, Articles and Short Stories which have been paid for at the time of publication in the columns of the Bodhini.

No moneys should be paid to our agents. Concession rates on book orders are allowed only to *Subscribers who are not in arrears.* Subscribers when ordering for books at concession rates will kindly mention their Register Number. All remittances, letters &c., should be addressed to the Manager, Viveka Bodhini.

விவேகபோதினி, பிரதி இங்கிலீஷ்மாதம், கடைசித் தேதியில் வெளிவருகிறது.

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

கந்தரநுபூதி

[சதுர்வேதி சிவத்தியாநாநந்த மஹர்ஷி]

கல்வியில் மேச்ச

3. வானே புனல்பார் கனல் மாருதமோ
ஞானே தயமோ நவில்நால் மறையோ
யானே மனமோ எனையாண்ட இடம்
தானே பொருளாவது சண்முகனே.

படிப்பிற் பலநும் தன்னைப் புகழ்ந்து பேச ஜபிக்கும் மறை இது. இச் செய்யுள் குருவாக அநுக்கிரஹம் செய்ய என்னும் தலைப்போடும் சில பிரதிகளிற் காணப்படுகிறது. யாவதுங் கற்ருேர் அறியாப் பிரத்தியக்ஷ அறிவைப் பெறுவதற்கு உபயோகமாவதும் இதுவே.

ஸ்துதி: சண்முகனே !

தந்திரம்: இந்திரியத்தையும் கரணத்தையும் கடந்த பிரஹ்ம ஸாட்சாத்காரத்தைப் பெறும் உணர்வு பெறல்.

பிரயோகம்: முன்னபிப்பிராயங்களை யெல்லாம் நீக்கி, உள்ளொளியைத் திறந்து விட்டு, இறைவனது அருளொழுகும் நெறியில் மனத்தை நிறுத்தி, உலக நடப்பை யறிந்து, அந்நடையின் மேன்மை பெற்று விளங்குமாறு தனது கூர்ந்த அறிவை யுபயோகித்தல்.

உரை: வியாப்பிய முகத்தோடு கூடியவனே! ஐந்து பூதங்களோ, (அவற்ருலான இந்திரியங்களுக்கு மேற்போந்த) ஞான உதயமோ, பலரும் பெருமைப்படுத்திக் கூறும் நான்கு வேதங்களோ, யான் என்னும் ஆத்மதத்வமோ, (எனது அறிகருவியாகிய) மனமோ, (முப்பத்தைந்து தத்துவங்களும் அல்லவென) என்னைப் பற்றிக்கொண்டு உன்னிலையை யளித்த அப்பூமிகையோ யான் இலக்காகக் கொள்ளத் தகுந்தது எது? (நீ புகல்வாயாக.) ஆருதார தேவதைகளின் உருவையும் ஓரிடத்தே நினைவுறக்காட்டி நிற்பதைத் தோற்றச் சண்முகனே என்ருர். ஷடானகம் என்பதன் கருத்தும் அதுவே. பின்னர் 5-வது மறையின் உரை நோக்குக. பூமிகை, நிலை.

துறவுபெற

4. வளைபட்டகை மாதொடு மக்க ளெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூர் உரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவேலவனே.

உலக அல்லல்களின் ஒழிவு பெற உதவும் மந்திரம் இது.

ஸ்துதி: கிளைபட் டெழுசூர் உரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடு வேலவனே !

தந்திரம்: மனைவி மக்களிடத்து உள்ள ஆசாபாசங்களாகிய பந்தத்தை மனத்தினின்று ஒழித்து நிற்கும் ஸூட்சும வுணர்வை மனங்கொளல்.

பிரயோகம்: தெய்விக வாயிலாக வந்த இல்வாழ்க்கையிற் பற்றற நின்று, அன்பிற்கெதிர்காட்டும் அன்பு என்னும் அவிநயம் மட்டிலாக நடந்து, இட்டார்க்கு இட்டபடி யென்னும் எண்ணத்தோடு ஆகாமியமியையா நெறியைக் கைப்பற்றி ஒழுகுதல்.

உரை: கடலில் மாமரமாகக் கிளைகளோடு எழுந்த சூரபன்மனது நெஞ்சும், கிரௌஞ்சமலையும் தொளைபட்டு நிற்க ஊடுருவிச் செல்லுமாறு ஓச்சுகின்ற வேலாயுதத்தை யுடையவனே! வளையணிந்த முன்கையோடு கூடிய மாதாகிய மனைவியினிடத்தும் அவளது விளக்கமாக நிற்கும் தகைசால் புதல்வர் புதல்வியரிடத்தும் எற்படும் பாசமாகிய கட்டு என் மனத்தைப் பிணிப்பதனல் யான் மனம் வருந்துதல் முறையாகுமோ? (சொல்வாயாக.)

"மாண்ட குணத்தொடு .....கற்றறிந்தார்" ஆகவின் இல்லறத்தைக் கைக்கொள்ளா திருக்கவேண்டிய யான் உன் கொடையாகக் கிடைத்த ஸம்ஸார வாழ்க்கையின் பற்றின்கட்பட்டு வருத்தமுறுமாறு செய்தல் முறையோ எனக்கேட்ட மாத்திரையானே உள்ளத்துறவு உண்டாகும் என்னும் உண்மை விளங்க நின்றது. பலவிதமாகக் கிளைத்தெழும் நடுக்கத்தோடு (சூரோடு) கூடிய எனது மனமும், ஒன்றையும் உணரவல்லதல்லாத என் மனக்கல்லும் கரைய வேலைத்தொட்டு எனது பிரமரந்திரத்தைத் தொளைத்த என்னும் நுண்பொருள் தொனிப்பது காண்க.

About onr Desingu Rajan, M. S. H. Thompson Esq., B.A., Inspector of European & Government Training Schools, writes :—The story of Prince De-Sing by Sathavathanam T. Krishnaswamy Pavalar is a simple, straightforward account of the Prince whose name figures in the popular ballad sung with such interest by the masses. The book gives a correct account, as gathered from the records of Fort St. George, of the Prince and of his exploits, and is *a most entertaining little work. Books of this type are a real contribution to popular literature.*

கையிலே மஞ்சள் ஆனல் காரியம் மஞ்சுர்தான்,

கிராமச் சீர்திருத்தம்

VILLAGE RECONSTRUCTION

கிராம உபாத்தியாயர் செய்யக்கூடிய வேலை

ஒரு கிராமத்தின் நிலைமையை அறிவதற்கு அக்கிராமத்துக் குடிகளின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம் என்று முன் சொன்னோமல்லவா? அவ்விதப் பொருளாதார ஆராய்ச்சி செய்வதற்கு கிராம உபாத்தியாயர்களே தகுந்தவர்கள். அவர்கள் ஒவ்வொருநாளும் தம் மாணவர்களுடனும், கிராமவாசிகளுடனும் சேர்ந்து பழகிவருகின்றனர்; அவர்கள் கிராமவாசிகளின் கஷ்டங்களை அறிந்திருப்பர்; அரசாங்க அதிகாரிகள் அறியமுடியாத பற்பல விஷயங்களைக் கூட உபாத்தியாயர் சுலபமாக அறியமுடியும். ஆராய்ச்சி முடிந்தவுடன், கிராமவாசிகளின் குறைகள் இன்னின்னவென்று ஒருவாறு தேர்ந்து தெளிதல் சாத்தியமாகும்.

குறைகளை நீக்கி கிராமவாசிகளுக்கு நலம் புரிய வேண்டின், கிராமவாசிகளும் தமக்குள்ள குறைகளை உணரவேண்டிய தவசியம்; உணர்ந்தபின் அக்குறைகளைத் தீர்க்கும் வழி தேடுதல் வேண்டும். கிராமவாசிகளின் வாழ்க்கை சிறப்புற்றோங்க ஆங்காங்கே கிராமங்களில் ஐக்கியச் சங்கங்கள் ஏற்படவேண்டும்; விவசாயப் பொருள்களை வாங்கும்போதும் விற்கும்போதும் தரகர்களுடைய சகாயமின்றித் தாமே முதலாளிகளிடம் பழகப் போதுமான கல்வியறிவும் ஐக்கிய மதியும் கிராமவாசிகள் பெற வேண்டும்; அரசாங்கத்தில் பல இலாகாக்கள் விவசாயிகளுக்குச் செய்யும் உதவியைப்பற்றி விவரமாக கிராமவாசிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்; அப்போதப்போது அரசாங்கத்தார் பிரசுரிக்கும் பல துண்டுப்பத்திரிகைகளை வரவழைத்து கிராமவாசிகளை வாசிக்கச் சொல்ல வேண்டும்; விவசாயத்தைத் தவிர்த்து வேறு யாதாயினும் ஒரு சிறு தொழில் வீட்டிலேயே நடத்திவருதல் லாபகரமானதென்று ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்; பொதுவாக கல்வி அபிவிருத்தியை நாடவேண்டும்.

இக்காரியங்களை கிராம உபாத்தியாயர்தான் சிறப்புடன் செய்யமுடியும். ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தபக்ஷம் ஒரு செகண்டரி கிரேட் உபாத்தியாயராவது இருக்கும்படி ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வுபாத்தியாயர் கிராமச் சீர்திருத்த முறையில் பயிற்சிபெற்று, தன்னுடனிருக்கும் மற்ற உபாத்தியாயர் உதவியைக்கொண்டு மேலே கூறப்பட்ட இரண்டுவித வேலைகளையும் ஆரம்பித்துவிட்டால், கிராமங்களின் நிலைமை மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

பொதுவாக நோக்குமிடத்து கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்கு கல்விதான் அடிப்படை என்று கூறுதல் மிகையாகாது. கிராமத்திலுள்ளோர் தமது குறைகளை உணர்வதற்கும், அவைகளைத் தீர்த்துக்கொள்ள வழிதேடுவதற்கும் கல்வி இன்றியமையாதது. மனிதன் மேலும் மேலும் முன்னேறுவதற்குக் கல்வியே காரணம். தன் நிலையை உயர்த்திக்கொண்டு சிறப்புடன் வாழுமாறு மனிதனைத் தூண்டுவது கல்வியே. மூட நம்பிக்கைகளைக் களைந்து அஞ்ஞானமாகிய இருளை ஓட்டச் செய்வது கல்வியென்னும் ஒளியே. சமயச் சண்டைகளை ஒழித்து நாட்டில் அமைதியும் தேசபக்தியும் நிலவச் செய்யவல்லது கல்வியே. ஏய்ப்போர் கையிலும், நயவஞ்சகர் கையிலும், சிக்குண்டு வருந்தும் கிராமவாசிகள் தைரியமாகவும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்குக் கல்வியே மிகச்சிறந்த மருந்து. ஐரோப்பா கண்டத்தில் கல்வியறிவு ஜனங்களுக்கு ஏற்பட்டவுடன், தாம் நெடுங்காலமாக அனுபவித்துவந்த இன்னல்களைக் களைந்துகொண்டு புது வாழ்க்கையை ஜனங்கள் நடத்தலாயினர். சமரசத்திலும் ஜனநாயக ஆட்சியிலும் ஜனங்களுக்கு ஆசை யுண்டாய்விட்டது. கைத்தொழில் விருத்தி யடையலாயிற்று. சுகாதார வாழ்க்கை ஏற்பட்டது. ஆகையினால் கிராமத்தின் சகல இன்னல்கட்கும் கல்வியே கைகண்ட மருந்து என்று சொல்லுவது மிகையாகாது.

'கல்வி' என்பது விரிந்த பொருளையுடைய சொல். கிராமங்களில் கல்வி அபிவிருத்தி செய்யப் பல வழிகளுண்டு. எண்ணும் எழுத்

கொடுத்தவருக்கு எல்லாம் உண்டு; கொடாதவருக்கு ஒன்றும் இல்லை,

தும் சிறுவர்களுக்குக் கற்பிக்கலாம். கிராமங்களில் எழுதப் படிக்கத் தெரியாத பெரியோர் பெரும்பாலோர். அவர்களுக்கு வாசிப்பதற்கும் எழுதுவதற்கும், சிறு கணக்குகள் போடுவதற்கும் சொல்லிக்கொடுக்க வேண்டும். கிராமப் பாடசாலைகளில் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதைத் தவிர, வாரத்திற் கொருமுறை ஜனங்களைக்கூட்டி பொதுவாக எளிய தமிழில் பிரசங்கங்கள் நிகழ்த்தவேண்டும். சுகாதாரம், கடன்படல், கள் உண்ணாமை, ஐக்கிய சங்கங்களின் நோக்கங்கள் முதலிய விஷயங்களைப் பற்றியும், தேச சரித்திரம், உலக சரித்திரம், மனிதன் எவ்வாறு நாளுக்குநாள் முன்னேற்றமடைந்தான் என்பவைபற்றியும் விவரமாக எடுத்துக்கூறுதல் நலமாகும். அப்போதப் போது படக்காட்சிகளுடன் வியாதிகள் பரவும் விதத்தை எடுத்துச்சொல்லலாம். கிராமத்தில் பஜனைகோஷ்டி ஏற்படுத்தி தேசபக்தி, ஈசுவர பக்தி முதலியன மலிந்துகிடக்கும் பாடல்களை பாடச் செய்யவேண்டும். காலத்துக்கேற்ற புது முறையில் கூத்துகள் நடப்பிக்கலாம். தேவாரம், திருவருட்பா, தாயுமானவர் பாடல், திருப்புகழ், பாரதியார் பாடல்கள் சிறுவர்முதல் பெரியோர்வரை அனைவரும் பாடத் தேர்ச்சி பெறவேண்டும். விழாக்காலங்களிலும், பண்டிகை நாட்களிலும் ஹரிகதைகள் நடப்பித்து ஜனங்களுக்கு பக்தியிலும் ஒழுக்கத்திலும், நேர்மையிலும் ஆசையுண்டாக்கி வரவேண்டும்.

மேலும் கிராமத்தில் சிறு வாசகசாலைகள் ஏற்படுத்தி, தினசரிப் பத்திரிகைகள், மாதாந்திரப் பத்திரிகைகள் வரவழைத்து விவஹார ஞானத்தைப் பரப்பவேண்டும். சுகாதாரம், சரித்திரம், பூகோளம் முதலிய விஷயங்களைப்பற்றி எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும் நூல்களைச் சேர்த்து சிறு புஸ்தகசாலையொன்று நிறுவி, படிக்கத் தெரிந்தவர்களை வாசிக்கச் செய்யவேண்டும். இந்தப் புஸ்தக சாலையில், ஜில்லா கெஜட், கிராமவாசியின் பஞ்சாங்கம், விவசாய இலாக்காவில் பிரசுரிக்கப்படும் பல துண்டுப் பிரசுரங்கள், கால்நடை வியாதிகளைப்பற்றிய விவரங்கள், தொத்துவியாதிகளைத் தடுக்கும் வழிகளைச் சொல்லும் பத்திரிகைகள் முதலியவைகளை உபாத்தியாயர் தருவித்து வைப்பது அவசியம். இந்த வாசகசாலை சிறுவர்கட்கும், பெரியோருக்கும் பெரும் பயன் தருமென்பதில் சந்தேகமில்லை.

சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதைவிடப் பெரியோருக்குக் கல்வி கற்பிப்பதுதான் இக்காலத்தில் முக்கியமாகக் கருதப்படுகின்றது. ஆகையினால் கிராம உபாத்தியாயர் பெரியோர்கள் கல்வியைப் பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டும். பள்ளிக்கூடம் சென்று கல்வி பயிலும் பருவத்தைக் கடந்த யுவர்களும், பெரியோரும் நூற்றுக் கணக்காக கிராமங்களில் வசிக்கின்றனர். அவர்கள் விவசாயத்திலும், கூலிவேலையிலும் இறங்கி தம் குடும்பத்திற்கு வேண்டிய சிறிது திரவியத்தை சம்பாதிப்பதில் காலங் கழிக்கின்றனர். அவர்கள் தமது தினசரி வாழ்க்கையில் கல்வியறிவின்மையால் பலவித நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகின்றார்கள். தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தாங்களே தேடவும், குடும்பத்தை ஒழுங்காக நடத்தவும் வேண்டிய பொறுப்பு ஏற்றுக் கொண்ட கல்வியறிவில்லாத இப்பெரியோர்கள் எவ்வாறு தமது குடும்ப வாழ்க்கையை அமைதியாகவும் இலாபமுடனும் ஒழுங்காக நடத்த முடியும்? ஊர் விவகாரங்களிலும், ஓட்டு கொடுப்பதிலும், விவசாயத்தொழிலிலும் எவ்வாறு அறிவுடன் நடந்துகொள்ள முடியும்? ஜன நாயக ஆட்சி நாட்டில் நிலவி வருங் காலத்தில் ஒவ்வொரு பிரஜையும் தன் ஓட்டை தகுந்த வழியில் உபயோகிக்க வேண்டுமாகையால், கல்வி யறிவில்லாத பெரியோர்கள் நாட்டின் நலனையே முதன்மையாகக்கொண்டு நடந்துகொள்ளுதல் அவசியமன்றோ? ஆனால் வாழ்க்கையில் இறங்கிப் பகலெல்லாம் உழைக்கும் பெரியோர் பாடசாலை சென்று கல்விபெற முடியாது. அவர்களுக்கு ஒழிந்த நேரத்தில் விவகார ஞானத்தை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். இப்படிப்பட்டவர்களை உபந்நியாசங்களின் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், ஹரி கதா காலக்ஷேபங்களின் மூலமாகவும் அறிவாளிகளாகச் செய்வது சுலபம். பெரியோர்கள் வாசிக்கவும் எழுதவும் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும் ஆற்றல் உடையவர். அவர்களுக்கு எழுத்தறிவித்தபின் தகுந்த புஸ்தகங்களைக் கொடுத்து வீட்டில் வாசிக்கச்செய்ய வேண்டும். விவசாயம், கைத்தொழில், வியாபாரம், சுகாதாரம், பொருளாதார நூல், சரித்

கொடுக்கிறதையும் கொடுத்து, குஷ்டரோகி காலில் விழுவானேன்?

திரம் முதலிய விஷயங்களைப் பற்றி விரிவாக பல உபந்நியாசங்கள் நிகழ்த்தி புது அறிவு ஊட்டி, இக்காலத்தில் நடந்துவரும் இயக்கங்களைப்பற்றியும், புது முறைகளைப் பற்றியும், அறிந்துகொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு உண்டாக்க வேண்டும். படக் காட்சிகளின் மூலமாக அயல் நாட்டு ஜனங்களின் வாழ்க்கையைப்பற்றியும் கள்ளுண்ணுமையைப் பற்றியும் விளங்கக் கூறவேண்டும்.

பல விஷயங்களைப்பற்றிக் கூறி கிராமவாசிகளின் அறிவை வளரச் செய்தபின், வாழ்க்கையில் புதுமுறைகளை அனுசரிக்கவேண்டி விவசாயம், வியாபாரம், சுகாதாரம் முதலியவற்றில் புதுமுறைகளை கையாளச் செய்யவேண்டும். கிராமத்தில் ஐக்கிய நாணயச் சங்கம் ஒன்று ஏற்படுத்தி ஜனங்களுக்கு கடன் தொல்லையை நிவர்த்திக்கலாம். பகரூல் காலங்களில், தானியங்களைச் சேமித்து வைத்து நல்ல விலை வரும்போது மொத்தமாக விற்கவும், உழவுக்கு வேண்டிய எரு, விதை முதலியவற்றை மொத்தமாக வாங்கவும் சங்கத்தை உபயோகிக்கலாம். குடும்பச் செலவுக்கு வேண்டிய சாமான்களையும் துணிமணிகளையும் சில்லரைக் கடையில் வாங்காமல் மொத்தத்தில் வாங்கி கிராமவாசிகள் பங்கிட்டுக் கொள்ளுவது லாபகாமானதென உபாத்தியாயர் நடத்திக் காண்பிக்கலாம். இவ்வித ஐக்கிய சங்கம் கிராமவாசிகளிடையில் ஐக்கியமதி யுண்டாக்கும். கிராமம் முழுவதும் ஒரு பெரிய குடும்பமென கிராமவாசிகள் நினைத்துக் கொள்ளுவதே கிராமத்திற்கும் நன்மை தரும்; கிராமவாசிகளுக்கும் நலனளிக்கும்.

மேலும் உபாத்தியாயர் அடிக்கடி நிகழ்த்தும் உபந்நியாசங்களைத் தவிர, முக்கியமான பண்டிகை காலங்களில் கிராமவாசிகளுக்கு சுகாதாரத்தில் உற்சாக முண்டாக்கலாம். சங்கிராந்தி அல்லது பொங்கல் பண்டிகை வரும்போது கிராமத்திலுள்ள அசுத்தமான இடங்களை சுத்தமாக்கலாம். தண்ணீர் நிறைந்த குட்டைகளை சுத்தப்படுத்துதலும் கிணற்று ஜலத்தை இறைத்துப் புதுப்பித்தலும் ஆகிய காரியங்களை கிராமவாசிகளின் உதவியைக்கொண்டும் மாணவர்களுடைய உதவியோடும் நடத்துதல் சாலச் சிறந்தது. கார்த்திகை தீபம், போகிப் பண்டிகை, தீபாவளி, காமன் பண்டிகைகளின்போது குப்பைகளைத் திரட்டி எரித்து கிராமத்தை சுத்தமாக்கலாம். அவ்வித நாட்களில் மேளதாளமும், பாட்டுகளும் ஒலிக்க, கிராம தேவதையை பரிசுத்தப்படுத்தப்பட்ட இடத்திற்குக் கொண்டு செல்லுதலும், பஜனை ஹரிகதா முதலியவைகளை நடப்பித்தலும் கிராமவாசிகளின் மனதில் பக்தியை யுண்டாக்கும். கோகுலாஷ்டமி தினம் சுவாமியை அலங்கரித்து ஊர்வலம் கொண்டு வந்து 'காளிங்க மர்த்தனம்' கதையைச் சொல்லி அசுத்தம் பயம், பொய்மை முதலிய பாம்புகளை எவ்வாறு மர்த்தனம் செய்து கிராம வாழ்க்கையைச் சிறக்கச் செய்யலாமென்று கதைகள் மூலமாகச் சொல்லலாம். 'வசந்த உற்சவம்' தொடங்குங்காலை பாடசாலையிலும், கோயிலிலும் மலர்ச் செடிகளை நடுதலும், புதுக் தோப்புகளை உண்டாக்குதலும் பயன் தரத்தக்க வேலையாகும்.

இவ்வாறு பற்பல விதங்களிலும் கிராம வாழ்க்கையைச் சீர்திருத்துவது கிராம உபாத்தியாயர் கடமை. ஆனுல் இக்காரியத்தை சிரத்தையுடன் செய்யும் உபாத்தியாயர்களுக்கு ஜில்லா போர்டார் அல்லது தாலூக்கா போர்டார் நல்ல சம்பளமும், போதிய சாதனங்களும் அளித்தல் வேண்டும்; பொருளாதார சாஸ்திரம், விவசாயம், சுகாதாரம், சரித்திரம் முதலிய விஷயங்களைப்பற்றிய நல்ல புஸ்தகங்களை உபாத்தியாயர்களுக்கு அளித்து அவர்தன் அறிவை வளர்த்துக்கொள்ள சௌகரியம் செய்யவேண்டும்; படங்கள் காண்பிக்க 'மாஜிக் லாண்டர்னு'ம், உபந்நியாசம் செய்யும்போது ஜனங்களுக்குக் காண்பிக்க பலவித படங்களும் கொடுத்து உதவவேண்டும். சீர்திருத்த வேலை செய்யும் உபாத்தியாயர்களை அடிக்கடி வேறு ஊர்களுக்கு மாற்றிவிட்டால் ஒருவிதப்பயனும் உண்டாகாது.

இவைகளும், இவைகளைப் போன்ற பிற முறைகளும் கிராமங்களில் கையாளுவதன்றி அரசாங்கத்தாரும், ஸ்தல ஸ்தாபனங்களும் கிராமச் சீர்திருத்த வேலையில் செய்யக் கூடிய வேலை அதிகமுண்டு. இவ் விஷயத்தைப் பற்றியும், மேல் நாடுகளில் அரசாங்கத்தார் நடத்தும் சீர்திருத்த முறைகளைப்பற்றியும் தொடர்ச்சியாகப் பின்னர் எழுதுவோம்.

மின்சாரக் கம்பி விளக்குகளும் அவற்றை உபயோகிக்கும் வகையும்

ELECTRIC LIGHTS AND HOW TO USE THEM

மனிதர்கள் உயிரோடிருப்பதற்கு சுத்தவாயு, நல்ல ஜலம், மித உணவு இவை அத்தியாவசியமானவை. அவர்கள் சௌக்யமாய் வாழ்வதற்கு ஐம்புலன்களும் சுகாதார விதிப்படி உபயோகிக்கப்பட வேண்டும். வீடுகளில் சுவர்களில் பலகணிகளையும் கூரைகளில் கண்ணாடி பில்லைகளையும் அமைத்து வஸ்துக்களைப் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் வேண்டிய வெளிச்சம் உள்ளே செல்லும்படி கட்டுகிறார்கள். பகற்காலத்தில் சூரிய வெளிச்சமே போதுமெனினும், ஜனநெருக்கமுள்ள நகரங்களிலும் குளிர் அதிகமான பட்டணங்களிலும், வீடுகளை அதிக வெளியிடையின்றிக் கட்டுவதால், அம்மாதிரி வீடுகளில் பகலிலும் விளக்குகளை உபயோகிக்க நேரிடுகிறது. மின்சார சக்தியை கட்டுக்குட்படுத்திச் செட்டாகச் செலவழிக்கும் இக்காலத்தில், மின்சார விளக்குகளை உபயோகிக்கிறார்கள். இவ்விளக்குகளின் குணாதிசயங்களை இங்கு எடுத்தெழுதுவோம்.

ஜனங்கள் நெருங்கிய அறைகளிலும் பலகணிகளில்லாத இடங்களிலும், எண்ணெய் விளக்குகளை உபயோகிப்பதில் ஜாக்கிரதைக் குறைவினால் அபாயங்கள் நேரிடுகின்றன. எண்ணெய் எரியும்போது சுத்த ஆகாயம் உபயோகப்பட்டுக் குறைந்து போவதுடன் கரிய மலவாயுவும் மற்ற வேறு விஷ வாயுவும் உண்டாகின்றன. இவை அதிகரித்து வெளியேறாவிட்டால், சுவாசம் விடுவது கஷ்டமாய்விடும். மின்சார விளக்குகளில், உஷ்ணமும் வெளிச்சமுமே மாத்திரம் வெளிவருகிறதே தவிர கெட்டவாயு ஒன்றும் உண்டாவதில்லை. இதைத் தெரிந்தவர்கள் மின்சார சக்தி கிடைத்தால் அவ்விளக்குகளை உபயோகிப்பார்களென்பதில் ஐயமில்லை.

காந்தவிளக்கில் முக்கிய சூக்ஷ்மம் என்னவெனில், சன்னக் கம்பிகளின் வழியே மின்சாரம் ஓடுவதால் அவைகள் சூடேறி வெளிச்சத்தைத் தருகின்றன. வெளிச்சம் தருவதற்கு உஷ்ணத்தின் மானம் அல்லது டிக்ரி அதிகரித்திருக்கவேண்டும். டிக்ரி அதிகரிக்க அதிகரிக்க வெளிச்சமும் அதிகரிக்கிறதென்று பௌதிக சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் டிக்ரி அதிகரித்தால் தாமிரம் முதலான உலோகக்கம்பிகள் உருகிப்போகின்றபடியால், இவ் உலோகக்கம்பிகளை உபயோகப்படுத்த முடியாது. பிளாடினம் என்னும் உலோகம் வெண்மை நிறமுடையது. சீக்கிரம் உருகாது. இதை முதல் முதலில் உபயோகித்துவந்தார்கள். இது சீக்கிரம் உருகாவிடினும் வெளிச்சத்தைக் கொடுக்கும் போது உருகும் டிக்ரிக்குப் பக்கத்திலேயே இருப்பதால், சில சமயங்களில் காந்தசக்தி கொஞ்சம் அதிகரித்தால் உடனே கம்பி உருகிவிடும். மேலும் பிளாடினம் அதிக விலையுள்ளது. சாதாரணமாக ஜனங்கள் வழங்குவதற்கு விலை சரசமானதல்ல.

சீக்கிரம் உருகாதவைகளுள் கரி ஒன்று. மூங்கிலிலுள்ள சன்ன நரம்புகளை, காற்றுப் படாதபடி சுட்டுக் கரியாக்கி கம்பியாகவே உபயோகிக்கத் தொடங்கினார்கள். கரி சுலபமாய் உடையுமானதால் கரிக்கம்பிகள் செய்வது கஷ்டமே. என்றாலும் இப்போது வேண்டிய அளவு சன்னமான கரிக் கம்பிகளைத் தயார் செய்யச் சிறந்த வகைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் கரி சீக்கிரம் காற்றினால் எரிந்துபோமாகையால் அதைக் காற்று இல்லாத அல்லது "வேகுவம்" உள்ள கண்ணாடிக் கோளங்களில் அமைத்து உபயோகிக்க வேண்டியிருக்கின்றது. இவ் விளக்குகளிலுள்ள கரிக்கம்பிகள் உருகாவிடினும் டிக்ரி அதிகரிக்க ஆவியாகி கண்ணாடியின் உட்புறத்தில் குளிர்ந்த பாகங்களில் இலேசாகப் படிந்து கண்ணாடியைப் புகை யடைந்ததுபோல் மங்கலாக்கி விடுவதால், வெளிச்சம் குறைந்துவிடும். மேலும் கம்பியும் தேய்ந்து, சீக்கிரம் விளக்கும் உபயோகமற்றுப்போம். மின்சார சக்தியின் அழுத்தமும் வித்தியாசப் பட்டுக்கொண்டேயிருந்தால் வெளிச்சமும் வித்தியாசப்படுவதுடன் கண்ணுக்குத் துன்பமும் விளக்குக்கு நாசமும் உண்டாகும். ஆகையால் ஒரேவிதமான அழுத்தத்துடன் அல்லது வோல்டேஜுடன் (Voltage) தான் மின்சாரம் பரவ

வேண்டியதென்று சட்டம் விதித்திருக்கிறார்கள். விளக்குகளின் மேல்புறம் 220-V என்று எழுதியிருப்பது இந்த அழுத்தத்தின் அளவே. 110-V என்ற விளக்கை, 220-V என்ற விளக்கை உபயோகிக்கும் இடத்தில் உபயோகித்தால், கம்பி திடீரென்று உருகிப் போய்விடும்; விளக்கு எரியாது. இக் கணக்கில் V என்பது, வோல்ட்ஸ் என்னும் ஒருவித அளவை. சின்ன பாடரிகளுக்குத் தக்க 4 அல்லது 6—V இலக்கமுள்ள கம்பி விளக்குகள் உபயோகப் படுத்தவேண்டும். கம்பி தேயத் தேய, விளக்கின் "ஆயுள்" குறைந்து போகிறது; வெளிச்சமும் குறைகிறது.

இவ்விளக்குகளினால் அதிக பிரயோசனம் இருந்தும் பணம் அதிகம் செலவாகிறபடியால், அநேகர் உபயோகிக்கத் தயங்குகிறார்கள். இக் கரிக்கம்பிகளின் தோஷங்களைப் போக்குவதற்கும் விளக்குகளின் செலவைக் குறைப்பதற்கும் வேண்டிய சாதனங்களைக் கண்டுபிடிக்க சோதனை சாலைகளில் யத்தனித்து இப்போது அதிகமாய் உபயோகத்திலுள்ள "ஆஸ்ராம்" வகை விளக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இவ்விளக்குகளிலுள்ள கம்பிகள் வெண்மையாய் இருக்கும். இக் கம்பிகள் "டங்ஸ்டன்" (Tungsten) என்னும் உலோகத்தால் ஆனவை. ஒரு இஞ்சில் 1200-ல் ஒரு பங்கு அளவுள்ள கனமானவையாக இழுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுலோகம் 2300 டிக்ரி வரையில் உருகுவதில்லை. ஆதலால் இவ்வளவு தூரம் காய்ச்சினால் அதிக வெளிச்சம் தரும் என்பதை வெகுநாள் முன்னமே கண்டிருந்த போதிலும், வேண்டிய அளவு சன்னமாகவும் நீளமாகவும் இழுக்கமுடியாமலிருந்ததால் உபயோகப்படவில்லை. உறுதியான சன்னக் கம்பிகளை இழுக்கக் கண்டுபிடித்தது முதல், இக்காலத்து சரசமான விளக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இவ் விளக்குகளில் உள்புறம் மழுங்குவதில்லை, வெளிச்சமும் அதிகம். ஆனால் இக்கம்பிகள் வெகு சீக்கிரம் உடைந்துபோவதால் மின்சார ஓட்டம் பரவச் சக்தியற்று விளக்குகள் உபயோகமற்றுப் போகின்றன. இந்த விளக்குகளைக் கழற்றி மேஜையின்மேல் கொஞ்சம் சப்தமாகும்படி வைத்தாலும் போதும்; அல்லது அவற்றைத் திடீரென்று இடம் விட்டு இடம் மாற்றினாலும் போதும். அக் கம்பி உடனே அறுந்துபோகும். அற்ப பலமுள்ளதாகையால் அதை மிகவும் ஜாக்கிரதையாய் உபயோகப்படுத்த வேண்டியது. அடிக்கடி எடுத்துச் செல்லவேண்டிய விளக்குகளில் ஆஸ்ராம் விளக்குகளை உபயோகிக்காமல் கரிக்கம்பி விளக்குகளையே உபயோகிப்பது நல்லது. ஆஸ்ராம் விளக்கில் இன்னொரு விசேஷகுணம் உண்டு. ஒரேவிதமான வெளிச்சந்தரும் டங்ஸ்டன் விளக்குகளுக்கு உபயோகிக்கும் மின்சார வோட்டம் கரிக்கம்பி விளக்குகளை விடக் குறைந்ததாகையால் இவைகளை உபயோகிப்பதால் செலவு குறையும். ஒரு கரிக்கம்பி விளக்குக்கு வேண்டிய செலவில் 8 ஆஸ்ராம் விளக்குகளை உபயோகிக்கலாம். இவ்விளக்குகளில் கண்ணாடி கோளங்களில் உள்ள காற்றை முழுவதும் போக்கி வாகுவம் செய்யாமல், உப்பு வாயு அல்லது நைட்ரொஜன் வாயுவை அடைத்தும் விலை சரசமான விளக்குகளைச் செய்கிறார்கள்.

இவ் விளக்குகளை உபயோகிக்கும்போது அதிக வெளிச்சம் தரும்படி செய்து மற்ற வேளைகளில் மங்கலாகச் செய்ய ஏற்பாடு செய்வதால் லாபம் ஒன்றும் கிடையாது. வெளிச்சத்திற்குப் பதிலாய் மின்சாரசக்தி உஷ்ணமாக மாறி செலவாகிவருகிறது. இராக்காலத்தில் படுக்கையறையில் மங்கலான வெளிச்சம் தரும்படியான புதுவிதமான விளக்கைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளில் நீயான் என்னும் காற்றை அடைத்துச் செய்கிறார்கள். இவ் விளக்கில் செலவும் குறைவு; வெளிச்சமும் குறைவு; படிக்கும்போது "ஆஸ்ராம்" கம்பி விளக்குகளையும் நள்ளிரவில் கொஞ்சமாய் வெளிச்சமிருப்பதற்காக நீயான் விளக்குகளையும் உபயோகப்படுத்துவது உசிதமானது.

About our Desingu Rajan

Rev: J. Lazarus, B.A., D.D., writes:— *

* Many new facts and incidents, not generally included in bazaar publications, are supplied, I believe, for the first time. Indian heroism is the moral pointed. The story itself is written in simple sentences and in a good, grammatical style, so as to be understood by young people, whether boys or girls. Its perusal by them is sure to awaken in the rising generation a growing desire for courage, truth and patriotism.

நமது சிறு கதை
OUR SHORT STORY
ஸ்வப்னமோ?

[ஸ்ரீமான் C. N. G. சர்மா, பி. ஏ., பி. எல்.]

தென்னிந்தியாவில் தழைத்தோங்கும் அநேக ஊர்களில் அகண்ட காவேரிக்கரையினருகே அமையப்பெற்ற கிராமங்களின் அழகு வேறெங்கிலும் வாய்ப்பதில்லை. அப்புண்ணிய நதியின் இரு கரைகளிலும் வைதிகானுஷ்டான சீலர்களும், தர்ம சிந்தனை நிரம்பிய கிரகஸ்தர்களும் அநேகர் இன்றும் வசித்துவருகின்றனர். அவர்களுள் கிருஷ்ணமூர்த்தி சிரௌதிகள் என்ற பெரியார் ஒருவர், பால்ய முதல் செல்வந்தராயும், யாவருக்கும் உபகாரம் செய்யுமெண்ணம் நிரம்பப்பெற்றவராயும், சாஸ்திர சம்பன்னராயும், 'புலியூர்' என்ற ஊரையொட்டிய மகேசபுரத்தில் வாழ்ந்து வந்தனர். எந்த சன்னியாசி வந்தாலும் பிக்ஷை செய்து வைப்பார். சத்திரங்களுக்கு மாதாமாதம் நெல் அனுப்புவார். கோவில்களில் அநேக நாட்களில் உற்சவங்கள் நடத்தி வைப்பார். இவைகளையெல்லாம், படாடோபத்தை யுத்தேசித்தும், பெருமையை யுத்தேசித்தும் செய்தவரல்லர். ஆயின் அவர் மோக்ஷத்திற்கு இவையொன்றுதான் நேரான வழி என்று நம்பினவராதலால், தான் செய்யும் தான தர்மமே சாஸ்திர சம்மதமென்றும், மோக்ஷம் தனக்கு மிகவும் எளிதென்றும் பூர்ணமான நம்பிக்கை வாய்ந்தவராய், அப்பதவி வேறெந்த விதத்திலும் கிடைக்காதென்ற நிச்சயபுத்தி யுடையவராய் இருந்தார்.

இப்படி இருக்க, ஒருநாள் அவரது தமக்கையின் பெண் மங்களம் என்பவள் மிகவும் பரபரப்புடன் தனது பெரிய மாமாவும், சிரௌதிகளின் இறந்த தமயன் ஈசுவர சிரௌதிகளின் ஏக புதல்வனுமான, ஹாலாஸ்யம், மதராசிலிருந்து திரும்பி வருவதாக, தனது இளைய மாமா சொன்னதை உத்தேசித்து வாசலில் போவதும், வண்டி ஏதாவது வருகிறதா என்று பார்ப்பதும், உள்ளே நுழைவதுமாக விருந்தாள். வெகு நேரமாகியும் வண்டி வரக்காணோம். இப்பெண் மங்களத்திற்கு, தாய் தகப்பன் இளமையிலேயே விண்ணுலகேகினர். ஹாலாஸ்யத்திற்கும் அப்படியேதான். அவனிடத்தில் இவளுக்குக் குழந்தைப்பருவ முதலே தன்னையறியாத ஒரு அன்பு நாளுக்கு நாள் விருத்தி யடைந்துகொண்டே வந்தது. அவர்கள் இருவருமாக மிகவும் நெருங்கிப் பழகி வந்தார்கள். அவளது இளைய மாமா கிருஷ்ணமூர்த்தி சிரௌதிகளே இவ்விருவர்களுக்கும் கார்டியனா யிருந்ததுடன், அவளுக்கு அவளது தகப்பனாரிட மிருந்து உயில்படி கிடைத்த ரொக்க ரூபாய் இருபதினாயிரத்தையும் இதர சொத்துக்களையும் விருத்தியாம்சம் செய்து வந்தார். ஆனால் ஹாலாஸ்யத்திற்கோ யாதொரு ஐவேஜியும் இல்லை. ஈசுவர சிரௌதிகள் தானிறக்கும் சமயத்தில் தனது தம்பியை யருகாமையி லழைத்து, கண்ணீர் ததும்ப, 'கிட்டு! நாம் முன்னரே விபத்ராகி விட்டோம். எனது பங்கையும் நான் என் அந்தஸ்திற்குமேல் வாழ்ந்ததனா லிழந்துவிட்டேன். என் மனைவியும் என்னைவிட்டு முன்னரே இறந்தனள். எனக்கிருப்பது ஹாலாஸ்யம் ஒருவனே. அவனை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவந்து விடுவதாக வாக்களித்தால் உனக்குக் கோடிபுண்ணியமுண்டு.' என்று சொன்னதும், 'அவ்விதமே ஆகட்டும்' என்று வாக்குறுதி செய்த சிரௌதிகள் அன்று முதல் இருபது வருஷ காலமாக ஹாலாஸ்யத்தைத் தன் குமாரன் விசுவனாதனுடன் ஒரே மாதிரியாக வளர்த்து வந்தார். விசுவனாதன் பெரியவனாகையால் சீக்கிரம் வாசித்து தாசில் உத்தியோகத்தி லமர்ந்துவிட்டான். வயது இருபத்தெட்டானாலும் அவனுக்கு விவாகம் மட்டும் ஆகவில்லை.

இப்படியிருக்க ஹாலாஸ்யத்தின் வரவை எப்பொழுதும் அன்புடன் எதிர்பார்த்திருக்கும் கிருஷ்ணமூர்த்தி சிரௌதிகள் அன்று மிகவும் கோபத்துடன் ஏதோ கட்டுக் கடிதாசுகளை புரட்டிக்கொண்டு, வாசலை யடுத்த அறையில் தனிமையாக உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த விசுவனாதன், 'நமக்கென்ன', என்று நினைத்துக் கொண்டு, தனது தாயாருடன் கூடத்தி லுட்கார்ந்திருந்த மங்களத்தைக்கண்டு, 'ஏது, மங்களம்! அத்தான் வரவைப்பார்க்க ஆவல்கொண் டிருக்கிறப்போ லிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே, ஸ்னானம் செய்வதற்காக காவேரிக்குப் போய்விட்டான்.

இதனடுவில் வாசலில் வண்டியும் வந்துநின்றது. இறங்கினான் ஹாலாஸ்யம். மங்களத்துக்கு அபார சந்தோஷம். வந்தவுடன் தன்னை யருமையா யழைப்பானென்பது அவளுக்குத் தெரியும். அவன் மதுரவாக்கை எதிர்பார்த்த மங்களம் தனது மாமியிடமே உட்கார்ந்திருந்தாள். ஆனால் ஹாலாஸ்யம் கால் சட்டை முதலியன அணிந்து தலையையும் கத்தரித்துக்கொண்டு, பாழ் நெற்றியுடன் உள் நுழைவதைக் கண்டாளே யாயினும், அவளுக்கிருந்த சந்தோஷத்தில் அவள் அதையும் மறந்து தலைகுனிந்து கடைக்கண்ணால் வாசற் படியைப் பார்த்துக்கொண்டே யிருந்தாள். அரைமணி நேரமாகியும் ஹாலாஸ்யம் கூடத்துள் பிரவேசிக்கவில்லை. வாசலிலும் காணோம். காரணமும் தெரியவில்லை. சுற்றி முற்றிலும் பார்த்தாள். மாமியும் எழுந்து அடுப்பங்கரை சென்றுவிட்டாள். மெதுவாக எழுந்த மங்களம் வாசலறையண்டை வர, அவ்வறை சாத்தப்பட்டிருந்ததுடன், அவ்வறைக்குள் ளிருந்து மிகவும் கோபத் தொனியுடன் தனது மாமாவின் குரல் அவள் காதில் விழுந்தது. அவை பின்வருமாறு: “குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பே! இதென்ன துர்நடத்தையடா இது. மதராஸில் என் பணத்தைக் கொட்டி நான் வாசிக்க வைத்ததற்கு நமது குலத்தின் பெயருக்கே ஹானிவரும் காரியங்களை நடத்திவிட்டனையே. யாருக்குத் தாங்கும் உன் துர்ச்செயல்கள்! பிராமணனுக் கடுக்காத காரிய மெல்லாம் செய்ததுடன், என் பணத்தை ஜலம் போல் நினைத்துச் செலவுகள் செய்துவிட்டு, இன்னும் இந்தக் கடுதாசிகளில் கண்ட கடன்களையும் என் பேரில் சுமத்தி விட்டாயே. அயோக்கியப் பயலே. உன்னை நான் சோறு போட்டு வளர்த்ததே மகாபாதகம். எந்தப் பிராயச்சித்தம் செய்தாலும் அது போகாது. இந்த வேஷத்துடன் என்முன் நில்லாதே. சதாசிவ சிரௌதிகள் வம்சத்துக் குழந்தை என்றும், எங்கள் பெயரையும் இனி யாரிடமும் சொல்லாதே. எனக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை. உன்னப்பன் உனக்கு யாதொரு செல்லாக் காசும் வைக்கவில்லை தெரியுமா? எச்சல் பொறுக்கும் நாயே! இத்துடன் வீட்டைவிட்டு வெளியேறு. உள்ளே நுழைந்தால் காலை யொடித்து விடுவேன். உனக்கும் ஸ்நானம் செய்து எள்ளுந் தண்ணீருமாய் இன்றே இறைத்துவிடுகிறேன்” என்று சொல்லி ஹாலாஸ்யத்தைக் காலாலுதைத்து வெளியில் தள்ளி கதவையும் தாளிட்டுவிட்டார்.

பார்த்தாள் மங்களம். யாதும் தோன்றாது பிரமை யடைந்து விட்டாள். தன் மாமா பிடித்த முயலுக்கு மூன்றேகாலென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். என்ன சொன்ன போதிலும் அவரிடம் பலியாது. அதுதான் தனது ‘தர்மம்’ என்று பதிலுரைப்பாரானால் யார் எந்த பிரயத்தனத்தாலும் அசைக்கமுடியாது. சிரௌதிகளோ கௌரவஸ்தர். சம்பாதிப்பதிலும் தீரர்; தானசீலர். தான் எள்ளளவும் தர்மவிரோதமாக நடந்ததில்லை யென்றும், ஆதலால் தனக்குத்தான் மோக்ஷத்திற்கு உரிமை யென்றும் அவர் முழுவதும் நம்பியிருந்தார். என்ன செய்வாள் அபலை!

திடீரென்று வீட்டின் புறக்கடைப் பக்கம் ஓடினாள். அதற்குள் ஹாலாஸ்யமும் பெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு அடுத்த தெரு திரும்புவதைப் பார்த்தாள். நல்ல வேளையாக விசுவநாதனும் காவிரியிலிருந்து திரும்புவதைக் கண்டாள். அவனையும் வரச் சொல்லி அவள் அதிவிரைவாக ஹாலாஸ்யத்தினிடம் சென்று, ‘அத்தான்! இது என்ன?’ என்று அழுதாள். ஹாலாஸ்யம் பெட்டியைத் தோளிலிருந்து ரஸ்தாவில் வைத்துவிட்டு, ‘மங்களம்! சித்தப்பா சொன்னதில் எதுவும் தவறில்லை. அவர் செய்தது தான் சரி. இதோ போகிறேன். இனி இங்கு வரவும் மாட்டேன். வேறு உலகத்தில் நாம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்வோம். என்னை மறந்து விடாதே. மணஞ் செய்து கொண்டு சௌக்கியமாக வாழ்ந்திரு’ என்று சொல்லி விசுவநாதன் நெருங்குவதைக் கண்டவனாய்ப் பரபரப்புடன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அதிவிரைவாய் போய்விட்டான். மங்களத்தைத் தடவிக் கொடுத்து ஆனந்தத்தை அவள் மறப்பதற்குள் ஹாலாஸ்யத்தைக் காணோம். அவளோ குழந்தை. விசுவநாதனும் அவளுமாகத் திரும்ப வீடுசென்றார்கள். மாமாவிடம் நடுக்கமாதலால் இருவரும் அவரை யொன்றும் கேட்கவில்லை. அவரும் இரண்டாமுறை ஸ்நானம் செய்துவிட்டு எப்பொழுதும் போல் ஜபம் செய்துகொண்டிருந்தார்.

கைப்பொருளில்லா வழிப்போக்கன் கள்வர்முன் படலாம்.

இப்படியாக மூன்று நீண்ட வருஷங்களாயின. மங்களத்தின் மாமா வீட்டில் ஹாலாஸ்யத்தைப்பற்றின ஒரு வார்த்தையும் யாரும் பேசுவதில்லை. சிரௌதிகள் அன்று சொன்ன வார்த்தைக்குப் பங்கமின்றி அவனை மறந்தே விட்டார். மங்களம் நல்ல யுவதிப் பருவத்தை யணுகினவளா யிருந்தாள். மிகவும் அழகான நாரீமணியாயும், வீட்டின் சகல வேலைகளையும் பொறுப்பாகப் பார்ப்பதில் தேர்ந்தவளாயும், விவேகியாகவும் ஆகிவிடவே, அவளுக்கு சரியானபடி விவாகம் செய்துவைக்கவேண்டிய கடமை சிரௌதிகளைப் பொறுத்துவிட்டது. ரூபாய் இருபதினாயிரமும் சொத்தும் உயில்படி இவளை மணக்கும் புருஷனுக்குத்தான் கிடைக்கக்கூடியது. இவ்வளவு பணத்தையும் தன் வம்சத்தைவிட்டுப் பிறருக்குக் கொடுப்பதில் சிரௌதிகளுக்கு மனமே வரவில்லை. என்ன சொன்னாலும் விசுவனாதன் விவாகப்பேச்சையே காதில் போட்டுக்கொள்வதுமில்லை. அதற்கு முன்வருஷந்தான் சிரௌதிகள் மனைவியும் இறந்துவிட்டாள். அவள் இறக்குமுன்னர் அவளும் எவ்வளவோ சொல்லியாய் விட்டது. இதையெல்லாம் யோசித்த சிரௌதிகள் ஒருநாள் விசுவனாதனைப் பார்த்து, ‘குழந்தாய்! இன்றுதான் வருஷப்பிறப்பு. இத்துடன் உனக்கு இருபத்தாறுவது வயது ஆகிவிடுகிறதே. ஏன் விவாகம் செய்துகொள்ள மாட்டேனென்கிறாய்?’ என்று வினவினார். விசுவனாதன், ‘நியூஸ் பேப்பர்’ பார்த்தவண்ணம் வாய்திறவாமல் இருந்தான். ‘ஏனடா! நான் கேட்பதற்கு இதுதான் பதிலா?’ என்று சிரௌதிகள் இரைச்சல்போட்டுவிட்டு, ‘இதோ பார்’ இன்றுமுதல் பத்துநாட்களுக்குள் மங்களத்தை உனக்கு மணஞ் செய்விக்கப் போகிறேன். லீவுக்கும் எழுதிவிடு’ என்றார். அதற்கு விசுவனாதன், ‘அப்பா! மங்களத்திற்கு என்னை மணம் செய்துகொள்வதில் இஷ்டமில்லை. அது எனக்குத் தெரியும்’ என்று பதிலுரைத்தான். சிரௌதிகளுக்கு இது ஒன்றும் அர்த்தமாகவில்லை. ‘என்னடா! இருபதினாயிரம் சொத்தையும் விட்டுவிடுகிறேனென்கிறாயா? மிகவும் புத்திசாலி. நீங்களெல்லாம் படிப்பானேன்? ‘பாஸ்’ பண்ணுவானேன்’ என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். தான் ஒன்று அபிப்பிராயப்படுவது அதற்கு நேர் விரோதமாக மற்றவர்கள் சொல்வதாவது நடப்பதாவது என்ற எண்ணம் அவர் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. மங்களமோ முன்போல் யாதொரு ஆபரணமும் அணியாதவளாயும், அலங்கரித்துக் கொள்ளாதவளாயும், வெளியிடாத அடங்கின துக்கமுள்ளவளாய் சென்ற மூன்றுவருஷங்களாகவே இருந்தும், சிரௌதிகள் அதெல்லாம் தனது மனைவியின் வியாதியினாலும், மரணத்தினாலும் வந்த துக்கம் என்று நம்பியிருந்துவிட்டார். அவருக்கு ஏதாவதொன்று நிச்சயமென்று தோன்றிவிட்டால் பிறகு அவரதைப் பற்றிப் புனராலோசனை செய்வதே வழக்கமில்லை. விசுவனாதன் மேற்குறித்த பிரகாரம் சொல்லியது முதல், இவருக்கும் கொஞ்சம் சந்தேகம் வந்துவிட்டது. ‘ஏதோ அனர்த்தம் வந்துவிட்டது’ என்று யோசித்த வண்ணம் சந்தியாவந்தனம் செய்துவிட்டுப் புராண சிரவணத்திற்குப் போய்விட்டார். திடீரென்று மாத்திரம் ஹாலாஸ்யத்தின் எண்ணம் ஏதோ மனதிலுதித்துப் பாதித்தது. புராணமும் கேட்கவில்லை.

திரும்பிவந்து இராப்போஜனமும் முடித்து நித்திரைபோய்விட்டார். அதன் நடுவில் கீழ் வருமாறு அவருக்கு ஒரு ஸ்வப்னம் ஏற்பட்டது. அதில் ஹாலாஸ்யம் வருவதுபோலும், வீட்டின் கதவைத் தட்டுவதுபோலும், எங்கும் வானம் இருண்டு மழை பொழிவதுபோலும் கண்டார். வந்த ஹாலாஸ்யம் கிழிந்த வஸ்திரமணிந்து, ‘என் சிற்றப்பனே! மன்னியும். புத்தி வந்துவிட்டது. மிகவும் பசிக்கிறது’ என்று கெஞ்சினான். இவர், ‘ஏனடா இங்கு வாராதே யென்றேனே! நீ யாரோ எனக்குத் தெரியாது போ’ என்று உதைத்து மழையில் தள்ளிவிட்டார். பிறகு அவர் காலஸ்னானத்திற்காக காவிரிக்குப் போனதுபோ லிருந்தது. அங்கு காவேரிக்கரையில் வெள்ளத்தினால் ஒதுக்கப்பட்டு ஹாலாஸ்யத்தின் பிரேதம் கிடக்கக் கண்டார். அதைப் பார்க்காமலே திரும்ப யத்தனிக்கையில் இவருக்கும் மாரடைப்பதுபோலும், கண் சுழலுவதுபோலுமிருந்து அவனருகாமையில் விழுந்து இறந்து போய்விட்டார். அப்பொழுது எமபடர்களும் சாம்பசிவமூர்த்தியுமாகவந்து, ஹாலாஸ்யத்தின் ஆவியைக் கைக்கொள்ளுகிறார்கள். இவரை

மூர்த்தி கடைக்கண்ணாலும் பார்க்கவில்லை. இவர் உடனே, 'பிரபோ! என்னையும் அழைத்துப் போகவேண்டும்' என்று கெஞ்ச அந்நீலகண்டமூர்த்தி, 'ஜீவா' உனக்குக்கருணை யில்லை. என் லோகத்திற்கு வரவும் நீ அர்ஹ னல்ல' என்று மொழிந்ததைக் கேட்டதும் சிரௌதிகள், 'ஜகதீசா! என்னை மன்னியும். தெரியாம லிருந்துவிட்டேன். தான தர்மங் கள் எதேஷ்டமாகச் செய்திருக்கிறேன்' என்று கதற, ஈசன், 'பிறரை மன்னித்தாயா?' என்று சொல்லி, தனது பயங்கரமான தூதர் களிடம் அவரை ஒப்புவித்து மறைந்தார். திடுக்கிட்டு திடீரென்று எழுந்தார் சிரௌதிகள். சரியாக காலை ஐந்து மணியிருக்கும். காவிரி யைக் காணோம். தனது படுக்கை அறைதா னிருந்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டு, 'ஓகோ! இது ஒரு ஸ்வப்னம்' என்று நிச்ச யப்படுத்திக் கொண்டாலும் மனதின் துக்கம் மாறவில்லை. உடம்பிலும் நடுக்கம் ஜாஸ்தியா கவே நின்றது. தான் ஹாலாஸ்யத்திற்குச் செய்த தீங்கெல்லாம் நினைத்துக் கதறினார். 'ஐயோ' கைக்குள் மோக்ஷமிருக்கிற தென்று நினைத்து இறுமாந்தேனே. ஒரு குணமான கருணையில்லாவிடில் மற்று எல்லாம் நிறைந் திருந்தும் என்ன பயன்? வாசிக்கும் அஷ்ட குணங்களுள் மேன்மையானதும், எவ்வாசிர மிகளுக்கும் முதன்மையானதும் இது வே என்று தெரியாத மூடனானேனே' என்று பிதற்றிக்கொண்டு, 'காவேரிக் கரையில் என்ன விபத்தோ' என்ற சந்தேகத்துடன் அறையை விட்டு வெளியேறினார்.

அந்த சமயத்தில் அவசரமான ஒரு தந்தி வந்தது. அதை அவர் ஒன்றுந் தோன்றாதவ ராய்ப் பிரித்துப்பார்க்க அதில், 'பெரியோரே! வெளியூர்களிலிருந்து திரும்புகையில் எனக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டது. உங்களை மன் னிப்புக் கேட்டு மரிக்கவேண்டுமென்று 'ரயில் வே ஸ்டேஷன் வெய்டிங் ரூமில்' ஆவியை நிறுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். தங் களது கிரகத்திற்கு வா நான் பாக்கியம் பெற வில்லை. என்னை ஒரு முறை பார்த்தாலன்றி எனது ஜீவன் பிரியாது -ஹாலாஸ்யம்' என்று எழுதப்பட்டிருந்தது. 'ஜகதீசா! இப்பொழு தாவது என் பாபத்தைத் துலைக்க வழிகொடும்' என்று பிரார்த்தித்தவராய், சிரௌதிகள் வேக மாய் எட்டு மைல் தூரத்திலிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல அங்கு ஹாலாஸ்யம் பிரக்ஞை தவறி மரணாந்த சமயத்திலிருந்தான். அவனை வாரியணைத்தார். மிகவும் ஜாக்கிரதை யாக தனது வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தார். அன்னாகார மின்றி நிபுணர்களை வரவழைத்து சிகிச்சைகள் செய்வித்தார். ஒரு முறையாவது அவன் கண்திறந்தால் மன்னிப் புக் கேட்டுக் கொள்ளலாமென்று எண்ணினார். நான்கு நாட்களுக்குப் பிரக்ஞையே வரவில்லை ஹாலாஸ்யத்திற்கும். மங்களம் அவனருகா மையை விட்டு இராப்பகலாக நகரவில்லை. ஈசனை அவர்களிருவரும் விடாது அகோராத் திரமாய்ப் பிரார்த்தித்தார்கள். 'கருணா மூர்த்தி! இம்முறை என்னை மன்னியும்' என்று கதறி னார் பிராமணன்.

கருணாவாரிதியான பரமேசன் கடைசியாக இவர்களது பிரார்த்தனைக் கிரங்கி ஹாலாஸ்யத் திற்கு உயிர்ப்பிச்சை கொடுத்து அவர்கள் பாபத்தையுங் களைந்தார். ஹாலாஸ்யம் கண் விழித்தான். பார்த்தான் இருவரையும். 'சித் தப்பா! உமது கிரகத்திற்கு நான் வரக் கூடாதே. நல்ல மனது பண்ணி இங்கு வந்தீர் களே. நான் இளமையி லறியாது செய்த குற் றத்தை மன்னியும். மங்களம்! இதோ இருக்கிறது எனது 'பாங்க்' புஸ்தகம். நான் சம்பாதித்திருக்கும் பதினெண்ணாயிரம் ரூபா யில் சித்தப்பாவிற்கு நான் கொடுக்க வேண் டிய எண்ணாயிரம்' என்பதற்குள், மங்களம், 'நாதா! எனக்காக உயிருடனிருங்கள். ஈச னுக்குமுன் உங்களையே நான் பர்த்தாவாகக் கோரிவிட்டேன்' என்று அழுதாள். உடனே ஹாலாஸ்யம், 'அப்படியா கண்ணே. ஈசனே! நானே வெறுத்த ஆயுளை எனக்கு மறுபடியும் அளியும். மங்களம்! நான் எப்படியாவது பிழைத்துவிடுவேன்' என்று சொல்லி அமை தியான நித்திரையி லாழ்ந்தான்.

சிரௌதிகள் மனம் பட்ட பாட்டை என்ன வென்று சொல்லிமுடியாது. தனது பாபத் தைப் போக்கடிக்க பரமனருளிய உபதே சத்தை 'ஸ்வப்னமோ' என்று சந்தேகித்தோமே என்று நொந்துகொண்டவராய் ஹாலாஸ்யம் குணமடைந்தவுடன், அவனுக்கும் மங்களத் திற்கும் சுப முகூர்த்தத்தில் மணம் முடித்து, ஈசனது தியானத்தி லாழ்ந்தவராய், யாவரிட மும் தயையுள்ளவராய் அப்பெருஞ் செல்வங்க ளுடன் வாழ்ந்து கைவல்யத்தை யடைந்தனர்.

பண்டைத்தமிழர் இசையும், இசைக் கருவிகளும்

THE MUSIC AND MUSICAL INSTRUMENTS OF THE ANCIENTS

[மகாமகோபாத்தியாய ப்ரம்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் இந்திய சங்கீதப் பள்ளிக்கூடத்தினுதவில் ஒய். எம். ஸி. ஏ. கட்டிடத்தில் செய்த பிரசங்கம்.]

நான் சொல்லப்போகும் விஷயங்களை ஐந்து பிரிவாகப் பகுத்துக்கொள்ளுகிறேன். அவை இசையின் பெருமை, தமிழர் இசை, இசை வகை, இசைக்கருவிகள், பிற்கால சங்கீதம் என்பனவாம்.

இசையின் பெருமை

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே முத்தமிழுள் இசைத்தமிழை நடுநாயகமாக வைத்திருக்கிறார்கள். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாலியன்றன. அவை இசையுடனேயே பயிலப்படவேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாததென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி ஆங்கிலம், தெலுங்கு முதலிய பாஷைப் பயிற்சி முதலியன உடையாரால் அவ்வக் கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனால் இசையோ கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைய தமிழ் இலக்கியங்களில் இருதிணை யுயிர்களும் இசையின் வயப்பட்டு நின்றனவென்று பல விடங்களிற் கூறப்பட்டுள்ளன.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும் பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் பேரரும்பு 'போது' என்று தமிழில் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவர்களும் பிறரும் சிலசில போதுகள் மலர்வதால் காலத்தையறிந்துவந்தனர். நள்ளிருள்நாறி யென்றொரு மலர் உண்டு. அது நடுயாமத்திற்றான் மலரும். சூரியன் மறைந்திருப்பினும் அவை மலர்தலாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின் போதெனப் பெயர்பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட அவை மலரும் 'முல்லை, வரிவண்டூத வாய்நெகிழ்ந்தனவே' என்பது குறுந்தொகை பாட்டு இசைக்கு அடங்கும் என்றும் கூறப்படுகிறது. மதம் பிடித்த தலையும் யானைகளும் இசையினால் அடங்கிவிடும்; பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்கமுடியாத ஒரு யானை வீணையிசைக்கு அடங்கிவிடுவது உவமானமாக கலித்தொகை யென்ற சங்கநூலிற் கூறப்பட்டிருக்கிறது. 'காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு' இன்னும் "அணியிழை மகளிரும் யானையும் வணங்கும், மணி யொலி வீணையும்." என்று பெருங்கதையிலும், "மகரயாழ்வல்ல மைந்தனொருவனைக் கண்ட மத்தப் புரசு முகக்களிற்றின்" என்று மேரு மந்தர புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அக நானூற்றில் ஒரு செய்தி காணப்படுகின்றது; குறிஞ்சி நிலத்தில் தினைக் கொல்லையைக் காக்கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பரணின்மேல் நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிசுந்த களிப்புடன் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில் தினைக் கதிரை யுண்பதற்காக அங்கே வந்த யானை யொன்று அந்தப் பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரை யுண்ணாமல் தான் கொண்ட பெரும் பசியையும் மறந்து மயங்கி நின்றது. இந்தக் காட்சியையே, "ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி, பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக், குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது, படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென, மரம்புகன் மழகளி றுறங்கும் நாடன்" என்ற அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் நளகிரி யென்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி அதன் மேல் ஏறி ஆயுதங்களை அதையே யெடுத்துத் தர வீதி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகிறது. இசையினால் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில், 'குருவினிடத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யன்போல யானை படிந்தது' என்னும் பொருள்பட "வீணை யெழீஇ

விதியினடப்ப ஆனை யாசாற் கடியுறை செய்யு மாணி போல மதங்களிறு படிய'' என்று பாடியுள்ளார். இதே நிகழ்ச்சியைக் கூறும் 'உதயண குமார காவியம்' செய்தவர் இங்கே தந்தையைக் கண்டு வணங்கும் ஓர் உத்தம புத்திரனை உவமை காட்டுகிருர்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளையாடிக்கொண்டிருந்த கண்ணபிரான் மாலைக்காலத்தில் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிச்செல்ல வேறு ஏதும் செய்வதில்லை. குழலை யெடுத்து ஊதுவார். உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு கண்ணன்பால் வந்து சேரும். இதனையே "ஆக்குவித்தார் குழலாலரங்கேசர்" என்று திவ்ய கவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்ருர். பெரிய புராணத்திற் கூறப்படும் நாயன்மார்களுள் ஆயை நாயனருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன.

அசுணமா வென்பதொரு விலங்குண்டு. அதைப் பறவை யென்பாருமுளர். அது இசையை அறிவதிற் சிறந்தது. இனிய இசையைக் கேட்டுக் களிக்கும். இன்னுவிசையைக் கேட்பின் மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை "இருஞ்சிறைத் தொழுதியார்ப்பயாழ்செத்து, இருங்கல் விடாளை யசுண மோர்க்கும்'' என்ற அக நானூற் றடிகளாலும், "இன்னளிக்குரல் கேட்ட வசுணமா, வன்னளாய் மகிழ் வெய்துவித்தாள்'' என்ற சிந்தாமணிப் பாட்டாலும், "யாழ்கறை யடுத்த வசுண நன்மாச் செவி, பறையடுத்தது போலும்'' என்ற கம்பர் வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க வெண்ணினவர்கள் செடி மறைவிலிருந்து யாழ்வாசிப்பார்க ளென்றும் அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்குமென்றும் அப்பொழுது அதனைப் பிடித்துக்கொள்வார்க ளென்றும் தெரிகிறது. அவர்கள் கை முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை நற்றிணையில் உவமையாக எடுத்தாள்கையில், "அசுணங்கொல்பவர் கைபோ னன்றும், இன்பமுந் துன்பமு முடைத்தே'' என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிருர்.

கின்னரப் பறவையும் இத் தன்மையதே. வண்டிமாடு, ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்பொழுது 'தெம்மாங்கு' முதலிய பாடல்களைப் பாடுவதையு மவைகளைக்கேட்டு அவ் விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்து வருவதையும் இன்றும் காண்கிறேம். அந்தத் தெம்மாங்கு தேன் பாங்கு போலும். குழந்தைகள் அன்னையின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகையோய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்?

வன்மனக் கள்வர்களும் தம் கொடுஞ்செயலை மறந்து இசைவயத்த ராவார்கள். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று காணப் படுகிறது. பாலை நிலத்தில் ஆறலை கள்வர்கள் வழிவருவோர் பொருளையும் உயிரையும் கவர்வார்கள். பொருள் இல்லையெனினும் வாளால் வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வார்கள். அத்தகையவர்கள் முன் பொருநர்கள் பாலைப் பண்ணைப் பாடினல் அக்கள்வர்கள் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவவிட்டுத் தங்கள் வன்றொழிலை மறந்து அன்புற்று இசைக்கு உருகுவார்களாம். இதனையே, "ஆறலை கள்வர் படைவிட வருளின், மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை'' என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவகசிந்தாமணியின் கதாநாயகனகிய சீவகன் ஆண்களைப் பார்ப்பதுமில்லை யென்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று இசைபாடி அவளை வயப்படுத்தினன். அவன் இசையைக்கேட்ட பெண்கள் யாவரும் 'வேடன் பறவைபோற் கத்தூர் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப்போல் விரைந்து வந்தனர்' என்று கவி அவ்விடத்தில் வருணிக்கிருர்; "கள்ளமூப்பினந்தணன் கனிந்த கீதவீதியே, வள்ளிவென்ற நுண்ணிடை மழை மலர்த் தடங்கணர், புள்ளுவம்மதி மகன் புணர்த்த வோசை மேற்புகன், றுள்ளம்வைத்த மாமயிற் குழாத்தி னேடியெய்தினர்'' என்பது அந்தப் பாட்டு. இசை பிறரைத் தம் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக்காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிர

கொடுத்ததைக் கேட்டால் அடுத்துவரும் பகை.

புரம் மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்வதுண்டு. சிறந்த சங்கீத வித்துவானும் மிக்க சிவபக்தரும் ஆகிய கோபாலகிருஷ்ண பாரதியவர்கள் தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனைக்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினுர்கள். அதில் பிழைகள் காணப் பட்டமையால் சிறப்புப் பாயிரம் தரமாட்டேனென்று பிள்ளையவர்கள் மறுத்துவிட்டார்கள். மறுத்தும் மேற்படி பாரதியார் முயன்றே வந்தார். ஒரு நாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியவர்கள் பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறுர்களென்பதை யறிந்து எழுப்புதல் கூடாதென்றெண்ணிப் புறத்தேயிருந்து தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள "கனக சபாபதி தரிசனம் ஒருநாள் கண்டாற் கலி தீரும்" என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும்வரையில் இருந்துகேட்டு மனமுருகி, "இதற்குச் சிறப்புப்பாயிரம் கொடாம லிருப்பது முறையன்று" என்று உடனே வந்து சிறப்புப்பாயிர மொன்றை வழங்கினுர்கள்.

ஈசுவரனே இசையின் வடிவமாயிருப்பவரென்றும், இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லி யிருக்கின்றுர்கள். "ஏழிசையா யிசைப்பயனுய்," "இயலவன் இசையவன்," "இயலிசைப் பொருள்களாகி," "ஏழிசையை" என வரும் தேவாரப் பகுதிகள் பரமசிவன் இசையுருவின ரென்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினுல் அனவரதமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டுக் கம்பளர் அசுவதரர் என்ற இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதில் குழையாக வைத்தருளி யிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். "இசை விருப்பும் கூத்தனுர்" என்பதும் இறைவனுடைய இசைவிருப்பத்தை வெளியிடும். ஈசுவரன் கையில் வீணையை வைத்து வாசித்துநின்புறுவதாகப் பெரியோர் கூறுவர்; 'எம்மிறை வீணைவாசிக்குமே' என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி "வீணுதக்ஷிணு மூர்த்தி" என்று வழங்கப் படுவார். கண்ணன் வேய்ங் குழலோடும் விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? கடவுளாலேயே விரும்பப்படுவது இசை யென்பதை இன்னும் விரிக்கிற் பெருகும்.

இசை கடவுளுக்கு விருப்பமாவதறிந்து பல தொண்டர்கள் இசையாலேயே இறைவனை வழிபட் டிருக்கின்றுர்கள். நாயன்மார்களுள் ஆனைய நாயனுர், திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பரமனையே பாடுவார் முதலியவர்கள் இசையால் வழிபட்டுப் பேறு பெற்றுர்கள். ஆனைய நாயனுர் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைக் குழலில் இசைத்தூதி வழிபட்டார். மதுரையில் பாணபத்திரரென்னும் அடியார் யாழ்வாசித்துச் சிவபெருமானை வணங்கிவந்தார். அவருக்காகச் சோமசுந்தரக் கடவுள் விறகு சுமந்து இசைபாடி அவருடைய எதிரியைப் பயந்தோடச் செய்தார். திருமாலடியார்களுள்ளும் திருப்பாணுழ்வார், நம் பாடுவார் முதலியோர் இசைபாடித் திருமாலை வழிபட்டவர்கள். இன்னவகையார் இன்னும் பலருளர். கடவுளைத் துதிக்கும் தோத்திரங்களெல்லாம் இசைப்பாட்டாக அமைந்து விளங்குதல் கடவுளுக்கு இசையிலுள்ள விருப்பத்தை விளக்குமன்றே? தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்யப் பிரபந்தமும், திருப்புகழும், தத்துவராயர் பாடுதுறை முதலியனவும் இசைப்பாட்டுக்களாலாகிய நூல்களே. தேவாரங்களின் பண்கள் முன் கூறப்பட்ட திரு நீலகண்ட யாழ்ப்பாணர் பரம்பரையில் வந்த ஒருவரால் அமைக்கப்பட்டன. அது போலவே திவ்யப் பிரபந்தத்திற்கும் பண்கள் அமைக்கப்பட் டிருக்கவேண்டும். இவற்றைத் தெரிவிக்கும் நூல் தேவகான மென்பர். எல்லாரும் அநுசந்திக்க இயலுமாறு ஒருவித இசையுடன் இப்பொழுது பயிலப்பட்டு வரினும் திவ்யப் பிரபந்தத்தில் ஒவ்வொரு பதிகத்திற்குமுரிய பண்கள் முன்பு அமைந்திருக்க வேண்டும். இப்பொழுது பதிப்பிக்கப்பட்டுள்ள திவ்யப் பிரபந்த புத்தகங்களில் பலவித ராகங்களைப் பொருத்தமின்றிப் பிணைத் திருக்கின்றுர்கள். ஒரே பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிற்கும் தனித் தனி இராகங்கள் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. அவ்வாறு இருப்பது முறையன்று.

இதுகாறுங் கூறியவை இசையின் பெருமையை நன்கு புலப்படுத்தும். இனித் தமிழர் இசையை எவ்வாறு வளர்த்தனர் என்பதை ஆராய்வோம்.

தமிழர் இசை

பழைய காலத்தில் தமிழ்ச் சங்கங்களில் மூன்று தமிழையும் ஆய்ந்து வந்தார்கள். இசைத்தமிழாராய்ச்சியும் இசைப் பயிற்சியும் அப்பொழுது ஏனைய இயல் நாடகங்கள் போல மிகச் சிறந்து விளங்கின. இசைத் தமிழ்ச் சங்கங்களே தனியாக அமைக்கப்பட்டுப் பல இசை வல்லார்கள் இசைத் தமிழை வளர்த்து வருவதற்கு நிலைக்களனாக இருந்தனவென்று தெரியவருகிறது; "ஏழிசைச் சூழல் புக்கோ" என்று வரும் திருச்சிற்றம்பலக் கோவையாரால் இசைச் சங்கங்களும் இருந்தன வென்பதனை அறியலாம். கடைச் சங்கத்துப் புலவர்களுள்ளும் இசையையே சிறப்பாகப் பயின்று ஆராய்ந்து நூல்கள் இயற்றிய புலவர்களும் இருந்தார்கள். அவர்கள் கண்ணகனார், கண்ணனாகனார், கேசவனார், நந்நாகனார், நல்லச்சுதனார், நன்னாகனார், நாகனார், பித்தாமத்தர், பெட்டகனார், மருத்துவனல்லச்சுதனார் முதலியோர். இவர்களையன்றி நெடும்பல்லியத்தனார் என்றொருவர் இருந்தார். அவர் பல வாத்தியங்களிலும் பயிற்சியுடையவராதல்பற்றி அப்பெயர் பெற்றார்போலும். அவர் பாட்டிற் பல வாத்தியங்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் புதுக்கோட்டைத் தசவாத்தியம் கிருஷ்ணய்யர் என்ற ஒரு சங்கீத வித்துவானுடைய ஞாபகம் வருகிறது. அவர் பத்து வாத்தியங்களை வாசிப்பதில் வல்லவர். கூடாரம்போல் ஓர் இடம் அமைத்து அதில் இருந்துகொண்டு சுற்றிலும் பல வாத்தியங்களை வைத்து வாசிப்பார்.

இனி, கடைச் சங்க காலத்தில் இருந்த இசைத்தமிழிலக்கண இலக்கிய நூல்கள் பல. இப்பொழுது சிலப்பதிகார உரைகளே அந்த நூல்களின் பெயரையும் அவற்றிற் சிலவற்றிலிருந்து சில பகுதிகளையும் தெரிவிக்கின்றனவேயன்றி அந்நூல்கள் அகப்படவில்லை. அந்தச் சிலப்பதிகாரத்தால்தெரிந்த இசைத்தமிழ் இலக்கண நூல்கள் பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசைநுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினாறுபடலம், தாளவகையோத்து, இசைத் தமிழ், செய்யுட்டுறைக்கோவை முதலியன. பிற்காலத்தில் எழுந்த சுத்தானந்தப்பிரகாசம் முதலிய சில நூல்களும் இசை இலக்கணத்தைக் கூறுவனவே. பழைய இசைத்தமிழிலக்கியங்கள் சிலப்பதிகாரம், கலித்தொகை, பரிபாடல் முதலியனவாம். சிலப்பதிகாரம், இலக்கணங்களையும் கூறும். சீவகசிந்தாமணி, சூளாமணி, கல்லாடம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், அதிவீரராம பாண்டியரியற்றிய நூல்கள் முதலிய பிற்கால நூல்களிலும் இசைத்தமிழிலக்கணவமைதி காணப்படுகிறது.

குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலிய பிற்காலப் பிரபந்தங்களும் இசையைச் சேர்ந்தனவே.

இசைத்தமிழிலக்கண நூல்கள் இவ்வளவு இருந்தனவென்பதனால் அக்காலத்தில் இருந்த இசையமைப்பின் விரிவு உணரப்படும். சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் இசையைப்பற்றித் தெரிந்தவைகளிற் சில கூறுவேன்.

இசை வகை

இசையில் பண்களென்றும் திறங்களென்றும் இருவகை உண்டு. பண்கள் 7 நரம்புகளுங்கொண்டன. நரம்பு என்பது இங்கே ஸ்வரம். ஏழு ஸ்வரமும் கொண்டவை சம்பூர்ண ராகம். அதுவே பண்ணும். வடமொழியில் மேளகர்த்தாவென்று கூறப்படுவதும் அஃதே. ஏழு ஸ்வரங்கள் வடமொழியில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று கூறப்படும். அவற்றையே தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்குவர். யாவருக்கும் இயல்பான குரல் ஷட்ஜம் ஆகும். அதனைக் குரலென்றே வழங்கிய பெயரமைதி வியக்கற்பாலது. ஏழு ஸ்வரங்களுக்கும் ச, ரி, க, ம, ப, த, நி என்று இப்பொழுது பயிலப்படும் எழுத்துக்களைப் போலவே தமிழ் முறையில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு நெடிலையும் ஸ்வரங்கட் கெழுத்துக்களாகக் கொண்டு பயின்றனர். இந்த ஏழு நரம்புகளும் நிறைந்த ராகம் பண்ணென்று முன்னரே சொன்னேன். ஜனகராகமென்பதும் அதுவே. அப்பண்களிலிருந்து திறங்கள் பிறக்கும். அவை இப்பொ

கைப்பொருள் அற்றால் கட்டுக்கழுத்தியும் பாரான்.

மூது ஜன்ய ராகங்களென்று வழங்கப்படும். "நிறை நரம்பிற்றே திறமெனப் படுமே" என்ற திவாகர சூத்திரத்தால் பண்கள், திறங்கள் முதலியவற்றின் இலக்கணம் விளங்கும். பண்களுக்கு இனமாகத் திறங்கள் கூறப்படும். யாப்பிலக்கணத்திற "பண்ணுந் திறமும்போற் பாவுமினமுமாய், வண்ண விகற்ப வகைமையால் - பண்ணின், திறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவ, லிசைமருட்கு மில்லையினம்" என்று காணப்படும் இலக்கணத்தில் இது விளக்கப்பட்டிருத்தல் காண்க.

இப்படிப் பிறக்கும் பண்ணுந் திறமுமாம் இசை வகைகள் ஒரு வழியிற் ரெருக்கப்பட்டு 11,991 என்று கூறப்படுகின்றன.

பண்கள் பல வகைப்படும். குறிஞ்சி, பாலை முல்லை, மருதம், நெய்தல் எனப்பெரும் பண்கள் ஐந்து. இவைகளின் வகையாகும் பண்கள் பல. இவைகளுள் பகற் பண்கள் முதலியனவும், அவ்வப் பொழுதிற்கமைந்த பண்களும், யாமங்களுக்குரியனவும், சுவைகட் குரியனவும் வருணத்திற் குரியனவு மெனப் பல வகை யுண்டு. புற நீர்மை முதலிய பன்னிரண்டு பண்கள் பகற் பண்க ளெனப்படும். தக்கராக முதலிய ஒன்பது பண்களும் இராப் பண்களென்பர். செவ்வழி முதல் மூன்றும் பொதுப் பண்களாம். காலைக்குரிய பண் மருதம். மாலைக்குரியது செவ்வழி என்பாரும் உளர். இந்தப் பண்களால் இசை வல்லோர்கள் சில குறிப்பினை யறிவிப்பதுண்டு. ஒருவர் தம் நண்பனை மாலையில் வரவேண்டி மாலைப் பண்ணைப் பாடினரென்று ஓரிடத்திற் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இரங்கற் பண் விளரி. அதைப் பாடிப் பிறர் பால் இரக்கம் உண்டாக்கினர்கள். பரமசிவனல் கைலையின் கீழ் அமிழ்த்தப்பட்ட இராவணன் அவருக்கு இரக்கம் உண்டாக விளரியைப் பாடினன் என்ற பொருள்பட "விராய்மலர்ப்பூங் குழலிபாகன் மகிழ்விளைக்கும் வெள்ளிமலைக் கீழ்க் கிடந்து விளரிபாடும், இராவணனர்" என்று ஒரு கவி பாடியுள்ளார். இச் செய்யுட் பகுதி விளரி இரங்கற் பண் என்பதை நன்கு தெரிவிப்பது காண்க.

இத்தகைய பண்களை யமைத்துப் பாட்டுக்கள் செய்யப்படும். பொருட் கேற்றனவும், சுவைக்கேற்றனவுமாய பண்களை யமைத்துப் பாடிய இசைப்பாட்டுக்களையே புலவர் பாடினர். பண்ணும் பாட்டும் இயைந்திருத்தல் வேண்டும்; "பண்ணென்னும் பாடற்கியைபின்றேல்" என்ற குறள் இதனை வலியுறுத்தும். பண்ணமைந்த இசைப்பாட்டுக்கள் உருக்கள் வரிகளெனக் கூறப்படும். இக்காலத்துக் கீர்த்தனங்களைக் குறிக்க வழங்கும் உருப்படிகள் என்ற சொல் உரு என்ற பழைய வழக்கிலிருந்து வந்திருக்க வேண்டுமென்றே எண்ணுகிறேன். அவ்வுருக்கள் பத்து வகையென்று ஒரு சாரார் பகர்வார். அவைச் செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகுமண்டிலம் என்பனவாம். தாளக்கிரியையுடன் பொருந்தும் பாட்டுக்கள் ஒன்பதென்பர்; அவை சிந்து, திரிபதை, சவலை, சமவாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறு தேவபாணி, வண்ண மென்பனவாம்.

இவைகளேயன்றி இசைப்பகுதியில் கந்தர்வ மார்க்கமென்ப தொன்றுண்டு. அது இடைமடக்காகப் பாடுவது. காந்தர்வ சாஸ்திரமென்கிறது சங்கீத சாஸ்திரத்திற்குப் பெயர். பூலோக கந்தர்வ நாராயணசாமி ஐயர் என்ரெருவர் பெரிய சங்கீத வித்துவான் இருந்தார். அவர் உடையார்பாளையத்திற்கு வந்தார். அக்காலத்து உடையார் பாளைய சமஸ்தான ஜமீன்தாராகவிருந்த யுவரங்க னென்பவர் சங்கீதத்திற் சிறந்த பயிற்சியும், பிரியமும் உடையவர். யாராவது வித்துவான் வந்தால் அவருக்கு ஓர் இடத்தை ஏற்படுத்தி வேண்டிய சௌகரியங்களெல்லாம் அமைத்துப் பலநாளும் உயர்ந்த விருந்துணவு செய்வித்து அவர்களாகக் களித்துத் பாடுங்கால் அதனை ஒற்றரால் அறிந்து சென்று கேட்டு மகிழ்வாராம். இந்த நாராயணசாமி ஐயருக்கும் இவ்வாறே வசதிகள் அமைக்கப்பட்டன. ஒருநாள் ஜமீன்தார் உத்திரவின் மேல் ஒருவர் சந்தனுதித் தைலங் கொண்டு வந்து இவரை இருக்கச்செய்து தேய்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுண்டான சுகத்தினலும் சில நாளாகத் தாம் அங்கே அடைந்திருக்கும் சௌகரியக் களிப்பினலும் தம்மையறியாமலே நாராயணசாமி ஐயர் பாட ஆரம்பித்தார்: மிக்க மனேல்லாசத்துடன்

பாடினாராகலின் அவர் பாடியது அவருக்கே இன்பத்தைத் தருவதாயிற்று. அப்பொழுது இடையில் "அடாடா, இப்பொழுது யுவராங்கன் இந்தப் பாட்டைக் கேட்க இல்லையே" என்று சொல்லி வருத்தப்பட்டார். உடனே அங்கு முன்னரே இவர் பாடுவதை ஆட்கள் மூலம் அறிந்துவந்து மறைவிலிருந்து இந்தப் பாட்டைக்கேட்டு அளவற்ற இன்பத்தி லாழ்ந்திருந்த யுவராங்கன், 'இதோ கேட்டுக்கொண்டே யிருக்கிறேன்" என்று முன்வந்தார். நாராயணசாமி ஐயர் திடுக்கிட்டுப் பாடுவதற்கு ஏற்றவண்ணம் உடை முதலியன அணிந்து பின்னும் மனமாரப் பாடி இன்புறுத்தினர். அந்த யுவராங்கன் வியந்து காந்தருவர்களின் இசையை யொத்துப் பாடின காரணம்பற்றி அவருக்குப் பூலோக கந்தருவ நாராயணசாமி ஐயரென்ற பட்டத்தையும், அளவற்ற பரிசுகளையும் அளித்தார். கந்தருவம் இசையென்றபொழுது இது ஞாபகம் வந்தது.

பாடுங்கால் இவ்விவ் விலக்கணங்களோடு பாடவேண்டும் என்ற விஷயங்களை மிக விரிவாக இசைநூல்கள் கூறும். குற்றம் சில வகைப்படும்; இக் குற்றங்கள் பாடுவோர்பால் இருத்தல் கூடாவென விலக்கியும் நூல்கள் கூறும்; "வயிறறு குழிய வாங்கலழுமுகங் காட்டல் வாங்குஞ், செயிரறு புருவமேறல் சிரநடுக்குறல் கண்ணுடல், பயிறரு மிடறுவீங்கல் பையென வாயங்காத்தல், எயிறது காட்ட லின்ன வுடற்றொழிற் குற்றமென்ப" என்று திருவிளையாடற் புராணம் தெரிவிக்கின்றது.

கங்கையில் ஜலமும் காலராவும்

"கங்கை நதியின் ஜலத்தில், காலராக் கிருமிகள் வளர முடியா; எனெனில் அதில் அவற்றுக்கு ஏற்ற உணவுப்பொருள்க ளில்லை. மேலும் அதில் இக் கிருமிகளை அழிக்கவல்ல ஒரு பாஷாணம் இருக்கிறது. அப்பாஷாணத்தின் உற்பத்தியின் காரணம் சொல்லமுடியவில்லை; அது எப்படி இக்குணமடைந்துள்ளது என்றும் சொல்லமுடியவில்லை" என்று டாக்டர் ஈ. எச். ஹாக்கின்ஸ் எழுதுகிறார்.

ஓர் உத்தம புருஷனின் உண்மை மொழிகள்

GEMS OF THOUGHT

1. ஆயிரக்கணக்கான வார்த்தைகளினல் ஆத்ம திருப்தி உண்டாகிறதில்லை; உள்ளும் புறமும் ஒன்றாயுள்ள ஒழுக்கமும் உண்மையும் பொறுமையுமே ஆத்ம திருப்தியை அளிக்க வல்லன.

2. நீ எவ்வளவுதான் அறிந்திருந்த போதிலும் இன்னும் நீ அறியாதவை எவ்வளவோ இருக்குமென்று நீ அறிந்துகொள்.

3. எவன் எல்லா வஸ்துக்களையும் ஒன்றாகப் பார்க்கின்றானே, எவன் ஒன்றில் எல்லா வஸ்துக்களையும் பார்க்கின்றானே, எவன் ஒன்றை எல்லா வஸ்துக்களிலும் பார்க்கின்றானே, அவனே உபசாந்தியடைந்த புருஷன்.

4. ஈசுவரா! என் இந்த ஜீவகோடிகள் இப்படிக் கதறுகின்றார்கள்? நீ என்னுள்ளேயே ஒன்றியிருந்துகொண்டு அதி ரகஸ்யமாக என்னிடத்துக் கூறுகின்ற அமிருத மொழியைக் கேட்கவொட்டாது ஏன் இவர்கள் இப்படிப் பெருங்கூச்ச லிடுகின்றார்கள்? ஏ! படிப்புப் பித்தேறிய பாதகர்களே! ஏ! பேரிடிமுழக்கம்செய்து பிதற்றுகின்ற பித்தர்களே! சற்று வாய்மூடுங்கள். என் உயிர்க்குயிரான உத்தமன் பேசுகின்றான். என்னைக் கேட்கவிடுங்கள்.

5. தாழ்ந்த பள்ளங்களிலேதான் தண்ணீர் தங்கும்; அதுபோல தாழ்மையுள்ளவர்களிடத்தில்தான் ஜகந்நாதனுடைய தண்ணருள் தங்கும்.

6. நாம் நமது கைகளினல் உலக விஷயங்களைப் பிடித்துக்கொண்டிருக்கும் வரையில், ஈசுவரனை யடைய முடியாது. பிடிப்புக்களை விட்டு விட்டுக் கைகளை உதறி விரித்துவிட்டால் தான் கடவுளை அடையலாம்.

7. அகங்கார மமகார முள்ளவர்கள் ஒரு போதும் ஆநந்தமடைய முடியாது. அடங்கிய மனத்தினரே ஆநந்தத்திற்குப் பாத்திரர்.

8. ஆட்சி செய்வதிலும் அடங்கியிருத்தல் நலம். பலவந்தக் கட்டுப்பாடுகட்கு அடங்கி

யிருப்பவர்களே அதிருப்தி மிகுந்திருப்பார்கள். தர்மத்திற்கு அடங்கியிருப்பவர்கள் திருப்தி யடைந்தவர்கள்.

9. எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களையே உடைத்தாயிரு; உயர்ந்த விஷயங்களையே பேசு; சாதாரண ஜனங்களுடன் சகவாஸம் செய்.

10. உனது வாய் எப்பொழுதும் மூடி இருக்கட்டும்; உனது காதுகள் எப்போதும் திறந்திருக்கட்டும்; பேசும் பொழுது பிரசங்கம் செய்யாதே; சில வார்த்தைகளையே பேசு; ஆனால் எத்தனைபேர் சொன்னாலும் எவ்வளவு சொன்னாலும் எல்லாவற்றையும் நன்றாகக் கேட்டுக்கொள்.

11. நீ உத்தம பதவியை அடைய வேண்டுமாயின், உலகக் கட்டுகளினின்றும் தப்பித்துக் கொண்டு ஓடிவிடு; இல்லையேல் மேன்மேலும் பலமான கட்டுக்களால் நீ கட்டப்படுவாய்.

12. பிறர் காரியங்களைப்பற்றி நாம் பேசத் தலைப்படாமல் நமது காரியங்களை மாத்திரம் நாம் சரிவரக் கவனித்துக்கொண்டால், நமக்கு இத்துணை மனத்துன்பம் உண்டாகாது.

13. ஈசுவரா! நீ எவரும் அறியாமல் வந்து ஏழைகளுடைய ஹிருதயத்தைக் கொள்ளை கொள்கின்ற கள்வன்; உன்னை உடனே பிடித்துச் சிறையிலிட்டுவிட வேண்டுமென்று சாது ஜன அரசாங்கத்திலிருந்து உத்தரவு ஆய்விட்டது. எத்தனையோ தீரர்கள் அவ்வப்பொழுது உன்னைப் பிடித்துச் சிறையிலிட்டும், நீ அவர்களை ஏமாற்றித் தப்பித்துக்கொண்டாய். உன் திருட்டுத்தனம் என்னிடம் பலிக்காது. உன்னைப் பிடித்து என்னகத்துள் அடைத்துவைத்துக்கொண்டு ஏழைகளுடைய துன்பத்தை நிவர்த்திசெய்து, தீராதிதீரன் எனப் பெயர் பெறத் துணிந்தேன்.

14. ஈசுவரா! சீச்சீ! நீ ஒரு விளையாட்டுப் பிள்ளை. நீ மனிதனுக்குத் துன்பத்தையும் கொடுக்கிறாய், இன்பத்தையும் கொடுக்கிறாய். குழந்தையின் தொடையையும் கிள்ளி விடுகிறாய், தொட்டிலையும் ஆட்டிவிடுகிறாய்.

15. மூளைக்கு வேலைகொடுக்கும் முயற்சியைவிட ஹிருதயத்தை நெகிழச்செய்யும் முயற்சி மிகமிகச் சிறந்தது. அறிவானது மனிதனைச் சின்னபின்னப் படுத்திச் சிதற வடித்துப் பல பல துண்டுகளாகப் பகுத்துவிடுகிறது. அன்பு எல்லாவற்றையும் கரைத்துக் கரைத்து உருக்கி ஒன்றாக்கிவிடுகிறது. வேற்றுமை துக்கத்திற்குக் காரணமாயிருத்தலால், வேற்றுமைக்குக் காரணமான அறிவும் துக்கத்திற்குக் காரணமா யிருக்கின்றது. ஒற்றுமை சுகத்திற்குக் காரணமா யிருத்தலால், ஒற்றுமைக்குக் காரணமாகிய அன்பும் சுகத்திற்குக் காரணமாயிருக்கின்றது.

16. தனக்கு நேரிடுந் துன்பங்களை யெல்லாம் மனம் சலியாது சகிக்கும் சமர்த்து உடையவன் எவனோ, அவனே மனச்சாந்தி பெற்றவன். பொறுமையுடன் கூடிய ககன சக்தியே தபஸ் எனப்படும்.

பேகன் பிரிவாற்றாத கண்ணகி

KANNAKI THE FORLORN

[பழைய சங்க நூல்களில் காணப்பட்டதோர் கதையினைத் தழுவி எழுதப்பட்டது.]

[ஸ்ரீமான் N. சேதுராமன், பீ.ஏ.]

..............................விளையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தண்
முகை புரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
யெம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்கு புகழ்ப் பேக
னொல்லென வொலிக்குந் தேரொடு
முல்லைவேலி நல்லூ ரானே.

வன்பரணர் : புறநானூறு.

மதுரை நகரிலே கடைச்சங்கத்தார் தமிழாராய்ந்த காலத்தினில் நல்லூர் என்னும் சிற்றூரை தலைநகராகக் கொண்ட மலைநாட்டினை ஆவியர் குடியினில் பிறந்த **கோப்பெரும் பேகன்** என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவனாண்டுவந்த நாடு தற்காலம் பழநிமலை யென வழங்கும் பிரதேசம் என்பர் ஒரு சாரார்.

பேகன் என்பான் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பெருந்தகை யுடையோன். தனது நாட்டினில் வதிந்துவந்த மாந்தர் ஒரு விதத்திலும் துன்பமடைதல் ஒண்ணாது என்னும்

கொடி சுற்றிப் பெண் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது.

பெரும் எதிர்நோக்கினைக் கொண்டு அதற் கியைய அரசாண்டு வந்தவன். வேட்டையாடி வருங்கால் பனிக்காலத்துக் குளிரால் மெய்நடுங்கி நிற்கும் ஓர் மயிலினைக் கண்டு வருந்தித் தனது விலையுயர்ந்த கம்பளிச்சால்வையை அதற்கீந்து என்றும் அழியாப் பெரும் புகழினை எய்தியவன்.

அத்தகையோனுக்கு வாய்த்த மனைவியாள் கண்ணகி என்பாள். அவள் எல்லாவிதங்களிலும் பேகனுக்கு வாழ்க்கைத் துணையாதற்கு ஏற்றவளே யாவள். அழகிலும் மிக்காள். ஜீவ காருண்ணியம் மிகவும் உடையாள். கணவன் மாட்டுப் பெரிதும் நேசமுடையாள்.

அங்ஙனமாயின் அரசன் பேகனும் அவனது மனையாளும் ஒருயிரும் ஈருடலுமே போல வாழ்ந்து வந்தனர் என்பது சொல்லவும் வேண்டுமோ? பகற்பொழுது முழுவதும் ராஜசபையில் வீற்றிருந்து குடிகளது குறைகளைக்கேட்டு அரசியலியற்றிக் களைத்துப்போய் வாட்டமுற்ற முகத்தோடும் அந்தப்புரத்தினுள்ளே செல்வான் பேகன். கண்ணகியாள் தனது ஆருயிர்நாயக கணவனருகே வந்து இன்சொல் பேசுவாள். பேகனது களைப்பெல்லாம் பறந்தோடி விடும். அவனது முகம் சூரியனைக்கண்டு விகசிக்கும் தாமரை மலரேபோல மலர்ந்து விளங்கும். உண்மைக் காதலின் தன்மை இஃதேயன்றோ?

இவ்விதம் அவ்விருவரும் பலவாண்டுகளை இன்பமாகக் கடத்தினர்கள். பின்பு அவர்களை ஊழ்வினை வருத்தத் தொடங்கியது.

ஆடல் பாடல்களில் தேர்ச்சி பெற்றவளும் அழகினிற் சிறந்தவளுமான ஓர் பரத்தை நல்லூர் நாட்டினிற்கு வந்தாள். அரசனது சபையினில் நாட்டியமாடிச் செல்வம் பெறுவான் அவள் வந்தாள். பேகனும் அவளைக் காணுதற்கு இச்சை கொண்டான். அதுநோக்கி வருத்தமுற்ற கண்ணகி, "காதல, பரத்தையருடன் பொழுது போக்குதல் சிரிய மன்னரது ஒழுக்கமல்லவே? தாங்கள் அறியாததை நான் சொல்லவரவில்லை. தங்களையொத்த அரசர்கள் வேற்படை தாங்கிய போர்வீரர்களுடனும், ஓலையேட்டினைத் தாங்கிய கவிவாணருடனும், அறிவினில் முதிர்ச்சிபெற்ற அமைச்சர்களுடனும் பொழுதுபோக்குதல் நலமேயன்றி கேவலம் விணருடனும், தாசிகளுடனும் அளவளாவுதல் அடாது. அவ்வண்ணம் செய்வதால் தீமையே விளையும். தங்கள் செல்வமும் கீர்த்தியும் அழிவதற்கு ஹேது உண்டாகும். வேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள். அப்பரத்தையின் நாட்டியத்தைக் காணச் செல்ல வேண்டாம். ஏதேனும் பரிசிலீந்து அவளை யனுப்பிவிடுங்கள்" என்று மன்றாடினுள். அவளது நன்மொழிகள் மன்னன் காதினில் புகவேயில்லை. பேகன் அவளை நோக்கிப் புன் முறுவலோடு, "நீ வீணில் பயப்படுகிருய். உன்னிடத்தே கட்டுண்டிருக்கும் எனது அன்பைக் கவர்ந்து செல்லுதற்கு எவராலும் முடியாது. ஆகவே நீ வருந்துதலொழி" எனக் கூறிப் பின் தனது நாயகியைத் தழுவி முத்தமீந்துவிட்டுக் கொலுமண்டபத்திற்குச் சென்ருன்.

அன்றைய பிற்பகல் முழுவதும் அப்பரத்தை அரசனது முன்னிலையில் நாட்டியம், சங்கீதம், அபிநயம் முதலியவைகளில் தனக்குள்ள பயிற்சியைக் காண்பித்தாள். பேகன் அவளது வலையில் சிக்குண்டான். அவளது அழகிலும், சங்கீதத் திறமையிலும் சொக்கிப் போனுன்.

அப்பால் அப்பரத்தையின் ஆடலும் பாடலும் முடிவடைந்தது. நல்லறிவிழந்த அரசன் தனது கழுத்திலிருந்த விலையுயர்ப்பெற்ற முத்தாரத்தைக் கழற்றி, அவளைத் தனது சிங்காதனத்தினருகே அழைத்து அவள் கழுத்தினில் போட்டான். அமைச்சர்கள் திகைத்தனர். பின்பு "அவளுக்கு நல்லதொரு இருப்பிடம் அமைத்துத் தருக"வென்று ஆணையிட்டுச் சில ஏவலரை அனுப்பினன். சுருங்கக் கூறுமிடத்து அன்றிரவு பேகன் வழக்கம்போல அந்தப்புரத்திற்குச் செல்லவேயில்லை. அப்பரத்தைக்குத் தான் அளித்த இல்லத்திற்கே சென்ருன் பேகன்.

பின்பு நாளாவட்டத்தில் அவன் தனது அரசியலையும் மறந்தான். இனிய மனையாளையும் மறந்தான். அப்பரத்தையின் அழகு அவனைப் பாவசமாக்கி விட்டது.

மன்னனுற் றுறக்கப்பட்ட கண்ணகியினது நிலை மிகவும் பச்சாத்தாபப்படத் தக்கதாய்விட்டது. அவள் நல்ல பட்டாடைகளைத் துறந்தாள். தலைமயிரைச் தைலமிட்டுச் சீவி முடித்தற்கு வந்த சேடிமார்களைத் திட்டியனுப்பினள். அணி

கலன்களைக் கழற்றி யெறிந்தாள். வெறுந்தரையிலேயே படுத்தாள். அவள் சதா கண்ணீருங் கம்பலையுமாகவே தோற்றினாள். அவளது தேகம் மெலிந்துபோயிற்று. அவளது துன்பத்தைக் கண்டு வருந்திய அமைச்சர்களும், சேடிமார்களும், "அந்தோ, பாவம். பேகனது மனம் கல்லினும் கடிது போலும்! இரும்பினும் கொடிது போலும்! இம்மாதரசி இப்பெருந்துயர் காரணமாக இறந்தே போவாள். என் செய்வோம்!" என்று கண்ணீர் விட்டுப் பரிதவித்தனர்.

இங்ஙனம் சில நாட்கள் கழிந்து சென்றன. பின்பு ஒரு நாள் தமிழறிவாளர் ஐவர் வையாவிக்கோப்பெரும் பேகனைக் கண்டு செல்லுதற்காக நல்லூருக்கு வந்தனர். அன்னார் கபிலர் பரணர், வன்பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் பெயரினை யுடையோர். அவர்கள் யாவரும் பேகனது ஆப்த நண்பர்கள். அம்மன்னனது அவைக்களத்தே வந்து தமதுகவித்திறனால் அவனது மனத்தினை சந்தோஷிப்பித்துப் பன்முறையும் பரிசில் சுமந்து சென்றோர்.

அவ்வைவரும் பேகனது அரண்மனைக்குள் நுழைந்து ராஜ சபைக்குச் சென்றார்கள். ஆங்கே அவர்களைக் கண்டதும் அமைச்சர்கள் சிலர் விரைந்து வந்து அவர்களை எதிர் கொண்டழைத்துச் சென்று நல்லாசனத்தே யமர்த்தி உபசாரஞ் செய்தார்கள். புலவர்கள் களையாறியதும் மந்திரிகளை நோக்கி, "ஐயன்மீர், எமது நண்பனும் அரசன் எங்குளன்? அவனைக் காணவேண்டியே நாங்கள் இங்கு வந்தோம். எமது வருகையைத் தயை செய்து அவனிடம் தெரிவிக்கவேண்டும்" என்றனர். அப்பிரதானிகள் புலவர்களது மொழிகளைக் கேட்டு, "பேகன் பரத்தையினில்லமே கதியென்றிருப்பதை எவ்வண்ணம் இவர்களிடம் சொல்வது?" என்று திகைத்து வாளாவிருந்தனர். புலவர்கள் அது நோக்கி சந்தேகங் கொண்டு, "ஏன் யோசனை செய்கிறீர்கள்? என்ன சமாசாரம்? எதனையும் விளங்க உரையுங்கள்" என்று கேட்கவே, மந்திரிமார்கள் சகல விருத்தாந்தங்களையும் நவின்று நின்றனர்.

மாதரசியாம் கண்ணகியாள் படும் கஷ்டத்தைப்பற்றிக் கேள்வியுற்றதும் பெரும் வருத்தத்தை யடைந்தனர் அப்புலவர். அவளது துயர் களைதலே கடனென மனதினிற் சங்கற்பித்துக் கொண்டவர்களாய், அக்கவிவாணர் அரண்மனையினின்றும் வெளிப்போந்து பேகன் பரத்தையோடும் வதிந்துவரும் இல்லத்தினை நோக்கிச் சென்றனர்.

அக்கால் இராப்பொழுது வந்தது. அன்று பூர்ணிமை திதியாதலின் சந்திரனது பிரகாசம் மிகவும் ரமணீயமாயிருந்தது. பேகன் மாளிகை மேன்மாடியின் நிலாமுற்றத்திலே ஓர் அழகிய பொற் கட்டிலினிலே தனது காதற் கிழத்தியோடும் வீற்றிருந்தான். அவனது முகத்தினில் மந்தஹாஸம் தவழ்ந்து விளங்கியது. பால் போன்று வெளுத்த சந்திரிகையும், மிருதுவாக வீசிக் கொண்டிருந்த காற்றும், அவன் பக்கலில் வீற்றிருந்த அழகிய நங்கையும், அவள் யாழினை மீட்டுதலால் உண்டான இனிய வோசையுமே சுவர்க்க போகம்போல அவனுக்கு அப்போது தோன்றின.

அங்ஙனம் அவன் இன்புற்றிருக்கையில் பணிப்பெண் ஒருவள் அந்நிலா முற்றத்தினிற் பிரவேசித்து பேகனருகு வந்து கை கூப்பி நமஸ்கரித்து, "அரச, தங்களைக் காணவேண்டி ஐந்து மனிதர்கள் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நெடுந்தூரத்திலிருந்து வந்தவர்களாம், புலவர்களாம். தங்களை ஏற்கனவே அறிவார்களாம்" எனச் செப்பினள். மன்னன் சற்றே அதிருப்தியோடும், "சரி அவர்களை இவ்விடம் அழைத்துவா" என்று சொல்லி அத்தாதியை அனுப்பிவிட்டு அவர்கள் வருகைக்காகக் காத்திருந்தான்.

சிறிது போழ்தினில் அக்கவிவாணர்கள் ஐவரும் வீணையை ஏந்திய கையராய் பேகனது முன்னிலையில் வந்தனர். அவர்களைக் கண்டதும் பேகன் திடுக்கிட்டு, "நாம் பரத்தையோடிருத்தலை இவர்கள் பார்த்து விட்டார்களே? என்ன நினைத்துக் கொள்வார்களோ?" என்று திகைத்துப்போனான். உடனே ஆசனத்தை விட்டு எழுந்து அவர்களை எதிர் கொண்டழைத்துவந்து "கட்டிலினில் அமர" வென்று உபசரித்தனன். அரசன் எழுந்ததும் உடனெழுந்த அவனது காதற்கிழத்தி ஓர்புறம் தானொரஞ் சென்று ஒதுங்கி நின்று வந்த ஐவரையும் வெறுப்போடும் நோக்கினள்.

கொக்குக்குத் தெரியுமா கோழிக்குஞ்சைக் கொண்டு போக.

அப்பெரியார் ஐவரும் பேகனை ஓர் முறை நோக்கினர். அவன் காட்டிய கட்டிலினில் உட்காருதற்கு அவர்கள் மனம் ஒப்பவில்லை. கடுமையான முகத்தோடும் அவர்கள் பேகனை யும் அவனது பரத்தையையும் மற்றும் அங்கு கிடந்த யாழ் முதலியனவற்றையும் ஓர் முறை பார்த்து விட்டு வாளாவிருந்தனர். மன்னன் மறுபடியும் அவர்களை நோக்கி, "ஐயன்மீர், தங்கள் வரவு நல்வரவாகுக. தங்கள் வருகை யால் எனது இல்லம் புனிதமாயிற்று. தாங் கள் இவ்வாசனத்தே அமர வேண்டுகின் றேன்" என நாக்குழறலோடும் பொழிந்தான்.

அக்கால் வந்த புலவர்களில் ஒருவரான கபி லர் என்னும் வேதியர் அவனுக்கு மறுமொழி கூறினர். அவர் பேசிய வார்த்தைகள் பெருங் காப்பியங்களினிடையே காணப்படும் அகவற் பாக்களே போல, யாப்பிலக்கணத்திற்கு ஒத் தவையா யிருந்தன. அவரும் பேசுங்காலை தமது கையகத்தே யிருந்த வீணையினது கம்பி களை மெல்ல மீட்டியவண்ணம் இருந்தார்.

அன்னவர் பேசுவார்:—"மலைநாட்டு குற மாக்களின் வேந்தே! வீர! வள்ளலே! கேளாய். நேற்றையதினம் இம்மலை நாட் டிலே கடு வழி நடந்து வந்தது காரணமாக எனது குடும்பத்தார் பசியாலும் களைப்பாலும் வருத்தமுற்றனர். அதுகண்ட யான் நினது சிற்றூரையணுகி உனது அரண்மனை வாயிற் கண்ணே சென்று நின்றுகொண்டு யாழினை மீட்டி, உன்னையும் உனது மலை நாட்டினையும் பாடினேன். அக்கால் அங்கே ஒரு பெண் தோன்றினள். எனது பாடலைக் கேட் டனள் அவளும். அவள் கண்களினின்றும் நீர் தாரை தாரையாய் வடிந்தது. நைந்து உரு கும் புல்லாங்குழலினைப் போல அவள் துக்கித் தனள். அவள் யாரென்று நீ அறிவையோ? உன் மனையகத்தே இருப்பவள் ஏன் அவ்வண் ணம் துன்புறவேண்டும்? அவட்கு என்னுற் றது?" என்று தழதழத்த குரலில் அப்புலவர் பெருமான் பேசினர்.

பேகன் மனம் வாட்டமுற்றது. அவன் தனது கைகளால் முகத்தினை மூடிக்கொண்டான். இவன் மனதினை உருக்குதற்கு இதுவே சரி யான சமயமென்று வன்பரணர் அப்போதே பேசவாரம்பித்தார்.

"அரச, உலக மெங்கும் இருள் மூடி வரும் அந்திப்பொழுதினிலே எனது சிறிய யாழினை 'செவ்வழி' என்னும் சோக ரஸ த்திலே வாசிக்கும்படியாகச் செய்துகொண்டு யான் உனது காட்டுப் பிரதேசத்தைப்பற்றிப் பாடிவந்தேன். அக்கால் அவள் கண்களி னின்றும் வழிந்தோடிய நீர் அவளது மார்ப கத்தை நனைக்கும் படியாக அவள் துயருற் ருள். அது கண்டு யான் அவளை வணங்கி நின்று, 'இளையோய், எனது நேசனும் மன்ன னுக்கு நீ சுற்றத்தினளாவையோ?' என்று கேட்டேன். அவள் காந்தண்மலரின் மொட் டுப் போன்று தோன்றிய தனது அழகிய விர லினல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, 'ஐயா அவற்கு யான் உரிமை யுடையவள் அல் லேன். கேளாய், புகழாளனும் மன்னன் மற் ருெரு மங்கையினைக் காதலித்து அவளோடும் என்னுளும் தேரேறி இவ்வூரினில் பவனிவரு வன் என இங்குளார் சொல்வார்கள்' என்ற னள். அவளை வெறுத்துளாய் நீ. அந்தோ, இஃது கொடிது கொடிது!" என்றனர் வன் பரணர்.

உடனே பரணர் பேகனுடன் பேசுவான் முன்வந்தார். அவர் "பேக, போரில் பின்வாங்கா வீரன் நீ! பெருந்தகையாளன் நீ! முன்னொ ருக்கால் மயிலினிடத்தே அருள் கொண்டு அதற்கு போர்வை யளித்தனை. உனது மன திளக்கம் உலக மறிந்தது. அத்தகையோனுய நீ அம்மாதரசியிடத்தே மட்டும் ஏன் கருணை காட்டாமல் இருக்கின்ருய்? எனக்குச் சுற்றத் தார் ஒருவருமில்லை. எனது துன்பங் களைதற் காக உன்மாட்டு யான் வரவில்லை. களாப் பழம் போன்று கறுத்ததும் சிறியதுமான எனது யாழினை மீட்டி யாவர்க்கும் இசை யின் பத்தைத்தந்து வருதல் எனது தொழில். இது செய்தற்காக நான் உன்னை இரந்து கேட்கும் பரிசில் ஒனறுண்டு. நீ அறத்தைச் செய்ய வேண்டும். அருளை விரும்புதல் வேண்டும். உனது பிரிவாற்ருமையால் வருந்துபவளை இன்று நீ சென்று காணல்வேண்டும். இஃதே யான் உன்னைக் கேட்டுக்கொள்வது" என்று கூறினர்.

பரணர் பேசிய காலை பேகன் மனம் மிகவும் துன்பமுற்றது. அவன் மறுமொழி யொன்றும்

கூருமல் தலை குனிந்தபடியே நின்றுகொண்டிருந்தான். அது கண்ட அரசியல் கிழார் யாழினை மீட்டி அவனுக்கு நற்புத்தி வரும்படியாக மொழிவார் :—“அவ்வண்ணமே யாகுக. போர்த்திறன் மிகுதியுமுடைய பேக, ஏதேதோ ஆபரணங்களையும், செல்வத்தையும் எங்களுக்கு அளித்து அனுப்பிவிடலாமென்று நீ நினைக்கிறாய். எமக்கு அவை வேண்டுவதில்லை. ‘செவ்வழி’ யென்னும் பண்ணினில் யாழினை மீட்டி உன் மலை வளத்தைப் பாடியதற்காக யாம் விரும்பும் பரிசிலைத் தரவேண்டு மென்று நீ விரும்பினால் இப்பொழுதே உனது இரதத்தில் குதிரைகளைக் கட்டச் சொல்லி நின் இல்லாளினருகே சென்று மெலிந்திருக்கும் அவளது உடலைப் பூரிக்கும்படியாகவும் அவளது கூந்தலினிலே பூமாலைகளை அணியும் படியாகவும் செய்வாயாக.’’

அவரது மொழிகளைக் கேட்டவுடனே பேகன் கண்ணகிமீது அருள் கொண்டவனாய்த் தலையினை நிமிர்த்தித் தன் முன்னே நிற்கும் நற்றமிழ் வல்லார் ஐவரையும் நோக்கினான். அப்பால் அவனது கண்கள் ஓர்புறம் ஒய்யாரமாய் நிற்கும் காதற் பெண்டினை நோக்கின. உடனே பெரிதொரு ஆவல் அவன் மனதினில் உதயமாயது. அவன் அவளருகே செல்ல வெண்ணி காலெடுத்து வைத்தான். அப் பாதத்தையும் அவனைக் கடைக் கண்ணாற் பார்த்து ஆசை காட்டி யழைத்தாள். அந்த நான்கு புலவர்கள் சொல்லிய யாவும் வியர்த்தமாகும்போலத் தோற்றியது. அக்கால் பெருங்குன்றூர் கிழார் அரசனைக் கையமர்த்திச் சொல்வார் :—

“பேக, இம்மலை நாட்டினிலே அருவிகள் பலவற்றையும், மலைகள் பலவற்றையும் கடந்து இங்கு வருவதற்கு யான் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்ச மல்ல. அக்கஷ்டங்கள் யாவையும் பொருட் படுத்தாமல் செவ்வழிப் பண்ணினை வாசித்துவந்த எனக்குப் பரிசில் கொடுத்தனுப்புதற்குப் பின் வாங்குவையோ நீ? நேற்று நான் உனது மனையாளைக் கண்டேன். அவள் வெறி பிடித்தவளைப்போல ஓர்புறத்தே நின்றுகொண்டு மழை பெய்யுங் கண் துளிகள் கீழே விழும் ஓசையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளது கூந்தல் தைல மென்றதையே காணாததாகிச் சடையாகத் தோன்றியது. நான் உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். நீ என்னோடும் நினது இல்லத்திற்கு வந்து சேர். கண்ணகியாளது தலைமயிரை மாசறக் கழுவி நறுமலரால் அலங்கரிக்கச்செய். இச் சிறு காரியத்தை என் பொருட்டாக நீ செய்யக்கூடாதா?’’

இவ்வாறு அப்பெரியார் மனமுருகும்படியாகச் சொல்லுகையில் மன்னன் புலவர்களண்டை நெருங்கி வந்தான். பின்பு அவன் அம்மேலோர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அப்பால் அவ்விலைமாதின் ஜாலவித்தைகளெல்லாம் அவனிடத்தே பயன் படாது போயின. “பெரியீர்! எனது குற்றத்தை க்ஷமித்தில் வேண்டும். அடாது செய்த படுபாவி நான். என்னை நீங்கள்தான் ரக்ஷிக்க வேண்டும்’’ என்று அவன் புலவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

அந்நாள் கண்ணகியின் இல்லத்திற்குச் சென்றவன் மறுபடியும் அவளை விட்டு ஓர் காலத்திலும் பிரிந்து செல்லவேயில்லை. அவ்விரு காதலரும் இணைபிரியாது வாழ்ந்து வருங்கால் எந்நாளும் தங்களை உடன் கூட்டி வைத்த பெரியாரைப் போற்றிவந்தனர். புலவர்களது பெருமை அளவிடற் பாலதோ?

புளியாரை :— இது தோட்டங்களிலும் மற்றும் வெளிப்புறங்களிலும் படர்ந்துவளரும் ஒருகொடி, இதைச் சிலர் துவையல் அரைத்து உபயோகிப்பது வழக்கம். இது ஒருவாறு புளிப்பாயிருப்பதால் எலுமிச்சம் பழத்திற்கும் புளியம் பழத்திற்கும் பதிலாக இதை உபயோகிப்பதுண்டு. இதன் புஷ்பம் மஞ்களாகவும் சின்னம் சிறியதாகவும் இருக்கிம். இதன் இலைகளுக்கு சரிரத்தைக்குளிரச்செய்யுங் குணமும், கப்பல் யாத்திரை செய்பவருக்குண்டாகும் ஒரு வித இரத்த பித்த ரோகத்தைப் போக்கும் தன்மையும் உண்டென்று வெகு நாட்களாகவே கருதப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கு உண்டாகும் சீதபேதியைப் போக்குவதற்கு இது ஏற்ற ஔஷதச் சரக்காகும். பாலுண்ணி, சர்மத்தின்மேல் உண்டாகும் அவ்விதமான இதர சதை வளர்ச்சிகளையும் போக்க இது நல்ல சரக்கென்றும் சொல்லப்படுகிறது மேலுக்கு உபயோகித்தும் ஊமத்தில முதலியவற்றிற்குள்ள விஷத்தன்மையை அடக்க உள்ளுக்கு இதையே முறிவாகவும் உபயோகிக்கலாம்.

விவேகநாதன் அல்லது சரஸ்வதிபீடத்தின் மர்மம்

VIVEKANATHAN — A THRILLING DETECTIVE NOVEL

[ஸ்ரீமான் A. ராமசாமி முதலியார், பி. ஏ.]

232-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுப் :—அவரை நான் நன்ருக அறிவேன். அவரிடம் இரண்டு மூன்று கேஸ்களில் வக்காலத்து வாங்கியிருக்கிறேன். போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள கோபிவர்ண மடித்திருக்கும் மெத்தை விடுதான் அவருடையது. மிகவும், பெருந்தன்மையான குணமுடையவர்; பரோபகாரி, தெய்வபக்தி யுடையவர். பிறர் பொருளில் கிஞ்சிற்றேனும் இச்சையில்லாதவர். இப்பத்திர விஷயமாக அவரை நேரிற் சந்தித்துக் கேட்கவேண்டுமென வெண்ணியிருந்தேன். ஆனல் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

விவே :—ஆதிமூலம் பிள்ளையை முன் பின் அறியாதோர் அவரைப் பார்த்தவுடன் அவர்தானென்பதைக் கண்டுகொள்ளக் கூடியதாக அவருடைய அங்க அடையாளங்களில் ஏதேனு மொன்றிரண்டைத் தங்களாற் சொல்லமுடியுமா?

சுப் :—அவரின் பொதுப்படையான தோற்றத்தைப்பற்றித் தங்களுக்கு முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். அவருடைய கறுத்து நீண்ட தாடியைக்கொண்டே அவரை யெளிதிற் கண்டுகொள்ளலாம்.

விவே :—அம்மாதிரியான தாடியை யுடையோர் எவ்வளவோ பெயர்வழிக ளிருக்கின்றனர். அதைத்தவிர வேறேதேனு முண்டோவென்று கேட்கிறேன்.

சுப் :—அவ்வித மிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.—ஆம். அவருடைய மேல்வரிசைப் பற்களில் முன்னுள்ள இரண்டில் வலப்பக்கமுள்ளது கொஞ்சமுடைந்து கூராகவிருக்கும். இது தேய்ந்த பல்லன்று.

விவே :—இப்பொழுது மணி என்ன விருக்கும்?

சுப்:—சுமார் எட்டுமணி யிருக்குமென நினைக்கிறேன்.

விவே :—ஆகவே இன்ஸ்பெக்ட ரவர்கள் வந்து போயிருக்கவேண்டும். எழுந்திருங்கள்; போவோம். நிலவு வெளிச்ச மிருப்பதால் பக்கத்திலுள்ள அறைகளை யொருமுறை பார்த்துவிட்டு வசந்த விலாஸத்திற்குச் செல்வோம்.

என்னும், இருவருமெழுந்து அடுத்த அறைக்குச் செல்லுங் கதவைத் திறந்து வாயிற்படியைக் கடக்குஞ் சமயம், பின்னல் கதவு திறப்பது போன்ற சத்தங்கேட்கத் திரும்பி நின்ருர்கள். முன்கூறிய பெரிய நீலக் கண்ணுடி, அலமாரியின் கதவைப் போல் திறக்கப்படுவதையும் அதன் பின்புறமிருந்து விளக்கினெளி அறையில் வீசுவதையும் கண்டு இருவரும் வேகமாக வாயிற் படியைக் கடந்து கதவை மெதுவாகச் சாத்திவிட்டுக் கதவினிடுக்கு வழியாகக் கூர்ந்து கவனித்தார்கள். அப்பொழுது அக் கண்ணுடியாலாய கதவைத் திறந்துகொண்டு கையிலொரு லாந்தரைப் பிடித்த வண்ணம் சதானந்தன் மெதுவாக வெளியில் வந்து விளக்கை யணைத்துக் கீழே வைத்துவிட்டுக் கதவை மூடினன். வில்வைத்த பூட்டைப் பூட்டும்பொழு துண்டாகும் சப்தம் போற் கேட்டது. உடனே சதானந்தன் வெளிக்கிளம்பினன். இவனுக்குத் தெரியாமல் இவனுடைய செய்கை முழுவதையும் பார்த்துக்கொண்டிருந்த நமது நண்பர்களிருவரும் சந்தடி செய்யாமல் மெதுவாக நடந்துவந்து தலைவாயிற்படி யண்டை நின்ருர்கள். சதானந்தன் அதிவேகமாகச் செல்வதைக் கண்ட விவேகநாதன் தன்னுடைய ஆப்தனைப் பார்த்து, "நண்ப! இப்பொழுது தங்களுடைய மனதில் ஒன்றன்பின்னென்ருக உற்பத்தியாகும் எண்ணிறந்த வினக்களுக்கு பதிற்கூறவாவது அன்றி யதைக்கேட் டறியவாவது முயற்சி செய்யாமல் இம்மாளிகையின் வலப்புற மிருந்து செல்லும் குறுக்குவழியாக வசந்த விலாஸத்திற்குச் சென்று நாம் அவ்விட மிருந்து வந்த பின் அங்கு நடந்த விஷயங்களைக் குமானிட மிருந்து கேட்டறிந்து கொண்டு அவ்விடத்திலேயே இருங்கள். சதானந்தர் நோக்கிச் செல்வது வசந்த விலாஸ மன்றென்பதை நன்குணர் வேனுதலின் தங்களுக்கு அவ்வகைபிற் சந்தேகம் வேண்டியதில்லை. தாங்கள் அங்குச் சென்றபின் சதானந்தர் எப்பொழுது, எவ்விடத்திலிருந்து வருகிரு ரென்பதைக் கவனித்துக்

கொண்டிருக்க வேண்டும். ஒருகால் நான் அங்கு வருவதன்முன் சதானந்தர் திரும்பி வந்து என்னைப்பற்றி விசாரிப்பாராயின் நெல்லிக்குப்பத்திற்குச் சென்றிருப்பதாகத் தெரிவியுங்கள்'' என்று சொல்லவும் ஆச்சரியத்தாற் பெரிதும் பீடிக்கப்பட்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை எதொன்று முரைக்க வியலாமல் தன் சிநேகிதர் சொன்ன பாதையை நோக்கிப் புறப்பட்டார்.

சந்திர வெளிச்சம் பட்டப்பகல்போலிருந்ததினுல் பாதையின் மத்தியிற் போவது உசிதமன்றெனக் கருதின விவேகநாதன் மரநிழலில் மறைவாகச் சந்தடிசெய்யாமல் சதானந்தனைக் கொஞ்சதூரம் முன்போக விட்டு மெதுவாக அவனைப் பின்பற்றிச் சென்முர். ஆரம்பத்தில் நமது வாசகர்களை யழைத்துச் சென்ற நேர்பாட்டையைச் சதானந்த னடைந்ததும் வசந்த விலாஸத்தை நோக்கிப் போகாமல் அதனெதிர்ப்புறமாக நடந்து அவனிருந்த வாயிலையுங் கடந்து கொஞ்ச தூரம் போய்க் கிளை வழியைப்பற்றி நடந்து இரமணி விலாஸத்திற்கு வந்து சேர்ந்தான். அம்மாளிகையின் தலைவாயிற் கதவு தாளிடப்படாமல் மூடியிருக்கக் கண்டு சந்தோஷ மெய்தினவனுய் மெதுவாகத் திறந்து கொண்டு உள்ளே சென்று வள்ளியம்மை யிருந்த அறைக்குள் நுழைந்தான்.

சதானந்தனைப் பின் தொடர்ந்து வந்த விவேகநாதன் மெதுவாக மாளிகைக்குட் பிரவேசித்து முன்னவன் நுழைந்த அறைக்குள் தானுஞ் சென்று மற்றவர்களுக்குத் தெரியாமல் கதவின் பின்புறத்தில் மறைந்து நின்று கொண்டார்.

சுகுணங்கள் வாய்க்கப் பெற்றுள்ள வனிதா ரத்தினமான வள்ளியம்மை துக்கசாகரத்தில் மூழ்கினவளாய்ச் சோபாவிலுட்கார்ந் திருந்தவள் சதானந்தனைப் பார்த்ததும் வியப்பையும் பயத்தையும் ஒருங்கே அடைந்தவளாய்ச் சட்டென எழுந்து நின்முள். இன்னதுதான் சொல்வதென்று தோன்ருமல் திகைத்தாள்.

"வள்ளியம்மை! செந்தாமரை போற்சிவந்து விகசித்திருக்கும் தன்மையையுடைய உன் முகம் இன்று வெண்டாமரை யன்ன வெளுத்து வாட்டமுற் றிருப்பதின் காரணமென்ன?'' என்று சதானந்தன் கேட்டுக்கொண்டே அருகிலிருந்த நாற்காலியி லமர்ந்தான்.

வள்ளியம்மை:—அத்தான்! தங்களுடைய வினு சொல்லொணு வியப்பைத் தரவல்ல தாயிருக்கிறது. இருபது வருடகாலம் தேசாந்திரஞ் சென்றிருந்த பெரிய மாமா அவர்கள் இன்று திடீரென்று திரும்பிவரவும், மறு நிமிஷத்திலேயே அன்னவர் தற்செயலாகத் துர்மரணமடையவும் அதைப் பார்த்துச் சகிக்க முடியாமற் சின்ன மாமா அவர்கள் ஒருவரிடத்திலுஞ் சொல்லிக் கொள்ளாமல் எங்கேயோ ஓடி விடவுமான இத்தகைய சம்பவங்கள் ஏககாலத்தில் நம் குடும்பத்திற் கேற்பட்டிருக்கும் பொழுது என் துக்கத்திற்குரிய காரணமென்னவென்று தாங்கள் கேட்டதானது நினைத்தற்கு மசாத்தியமான ஆச்சரியத்தை யளிக்க வல்லதா யிருக்கிறது. ஒரு சமயம், இவைகளைப் பற்றித் தங்களுக்கு விசனமில்லை யென்று சொல்லுகிறீர்களோ?

சதானந்தன்:—அவ்விதமன்று. நாம் துக்கப்படுவதா லடையும் பலனென்ன? அன்றி நம் மாற் செய்யக் கூடியதுதான் என்னவிருக்கிறது? பெரியவரோ இறந்துவிட்டார். சிற்றப்பாவும் கொலை புரிந்துவிட்டு ஓடியிருக்கிருர். அவர் இனி இங்கு மீண்டும் வரப்போவதில்லையென்பதை யுறுதியாய்ச் சொல்லலாம். அவ்விதமன்றி ஒருகால் அவர் திரும்பி வருவாராயின் துரைத்தனத்தார் அவரைப் பிடித்துத் தண்டிப்பார்க ளென்பது நிச்சயம். அவ்வாறிருக்க அவரையுன்னிக் கவற்சியுறுவதில் நாமடையும் பிரயோசனமென்ன?

வள்:—அறியாமற்செய்த குற்றத்திற்குங் கூடத் தண்டனையா?

சதா:—அறிந்தோ: அறியாமலோ; குற்றம் குற்றமேயன்றி அது இல்லையென்று போவதில்லை.

வள்:—ஆகவே, மாமா அவர்கள் தப்புவதற்கு மார்க்கமில்லை யென்கிறீர்கள்!

சதா:—ஆம்—மேலும், அவரினு முயிருட னிருக்கிருரென்பதுதான் என்ன உறுதி?

வள்:—என்ன அவ்விதஞ் சொல்லுகிறீர்கள்!

சதா:—போலீஸார்வசம் அகப்பட்டுக் கொண்டு தூக்குத் தண்டனை யடைவதை விடத் தற்கொலை புரிந்துகொள்வது நலமென்று எண்ணுவது இயல்பேயாகும்.

வள் :—"ஆ! மாமா! உத்தமோத்தமான தங்களுக்கும் இக்கதி வரவேண்டுமா? தெய்வத்திற்குக் கண்ணில்லையா?" என்று கதறிக் கண்ணீர் வடித்தாள்.

சதா :—தெய்வத்திற்குக் கண் இருந்ததினுல்தான் இவ்விதம் நடந்தது. மங்கைப்பருவமடைந்த ரமணி மணியான உன்னைக் குரூபியான நாற்பதாட்டைக் கிழவன் மணம் புரிவதென்ருல் எந்தத் தெய்வத்திற்குத்தான் பொருக்கும்? எனக்கென்றே உன்னைப் பிரமன் சிருஷ்டித்திருக்கும் பொழுது ஆதிமூலம் பிள்ளையின் மனுேபீஷ்டம் எவ்விதம் கைகூடும்? நாமொருவரை யொருவர் காதலித்துக் கலியாணஞ் செய்து கொள்ளுவோ மென்றிருக்கையில் அதை எவரால் தடுத்தலியலும்?

வள் :—போதும், அத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். அதிகம் பிதற்றவேண்டாம். தாங்கள் வந்த காரியம் இதுவேயாயின் தயவு செய்து சென்றுவரலாம்.

சதா:-என்? அன்று எனக்களித்த வாக்கை மறந்துவிட்டாயா?

வள்:—நான் இதுகாறும் எவருக்கும் எத்தகைய வாக்கும் கொடுத்தது கிடையாது.

சதா:—என்னைக் காதலிப்பதாக நீ சொல்லவில்லையா!

வள் :—நான்—தங்களை—காதலிப்பதா!—ஆச்சரியத்தினும் ஆச்சரியம்! இதனினும் அசம்பாவிதமான விஷயம் இப்பூவுலகில் வேறென்றும் கிடையாது.

சதா:—இன்றைக்கு முந்தின பத்தாம் நாள் இதே அறையில் நீ எனக்குச் சொன்னதை மறந்துவிட்டனையா?

வள்:—என்னுடைய ஞாபகசக்தி அவ்வளவு கேவலமானதன்று. எனினும் நான் அன்று சொன்னதைத் தாங்களே தெரிவியுங்கள்; கேட்போம்.

சதா:—'எனக்குத் தங்கள்மீது அருவருப்புண்டாகும்படியாகத் தாங்கள் ஒன்றுஞ்செய்துவிடவில்லையே' என்னும் வார்த்தைகள் உன்னுடைய வாயினின்றும் அன்று வாவில்லையா?

வள் :—வாஸ்தவம். இம்மொழிகள் நானுரைத்தவைகள்தான். வேண்டுமெனின் அவைகளை மீண்டும் பகருவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. 'தங்கள்மீது அருவருப்பில்லை' என்னும் வசனத்திற்கு 'தங்களைக் காதலிக்கிறேன்' என்ற பொருள் உண்டென்பதை நான் அறியேன். ஆடவர்களிலும் இத்தகைய மந்தமதியுடையோர்களுண்டென்பதை யுரைக்க ஆச்சரியமுறுகிறேன்.

சதா:—என்மீதுனக்குக் காதலில்லை யென்று சொல்லுகிருயா?

வள்:—அதை நான் தெரிவிக்காமல் தாங்களே அறிந்துகொள்ளக்கூடும்.

சதா:—நானுன்மீது கொண்டிருக்குங் காதல் அவமே கெட்டழிய வேண்டியதுதானு?

வள்:—அக்கேள்விக்குப் பதிற்பகர என்னுல் முடியாது.

சதா:—உன் அந்தரங்கத்தை நான் நன்ருக அறிவேன். சிதம்பரம் சுப்பிரமணியனை நீ காதலிக்கிருயென்னும் விஷயத்தை இன்று காலையில்தான் ஒருவாறு தெரிந்து கொண்டேன். உன் மனம் வேறொருவன்பாற் சென்றிருக்க, ஆதிமூலம்பிள்ளையை விவாகஞ்செய்து கொள்ளச் சம்மதித்தது, நீ ஒருத்தமஸ்திரீ யன்றென்பதை வெள்ளிடைமலையன்ன விளக்கிக்காட்டுகின்றதல்லவா?

வள்:—இதை யுத்தேசித்துத்தான் தாங்கள் இப்பொழுது இங்கு வந்திருக்கிறீர்கள் போலும். மிகவும் சந்தோஷம். இன்னுமதிகமாக இதைப்பற்றிப் பேசாமல் தயவுசெய்து தாங்கள் சென்று வருவது நலம். இல்லையெனின் விரும்பத்தகாத விஷயம் விளையுமென்று ஐயுறுகிறேன்.

சதா:—வள்ளியம்மை! என்னுடைய விரோதத்தை விழையாதே. சதானந்தன் உயிருடனிருக்கும்வரை வேறொருவனை மணந்துவிடலாமென்று நினைத்துவிடாதே.

வள் :—முத்தொழிலையும் புரியவல்ல கடவுளொருவரிருக்கிறு ரென்பதை மறந்துவிடாதீர்கள்.

என்றதும் சதாவந்தன் கோபத்தின் மிகுதியால் பதிலுரைக்க முடியாமல், "சரி, பார்த்துக் கொள்வோம்" என்று மாத்திரஞ் சொல்லிவிட்டு வெளியில் வந்தான்.

இவர்களின் சம்பாஷணை முடிவு பெறுவதையறிந்த விவேகநாதன் அரவஞ் செய்யாமல்

மாளிகையை விட்டு நீங்கி அருகாமையிலிருந்த பெரியதொரு மரத்தின் மறைவில் நின்று கொண்டு சதானந்தனின் வரவை எதிர்பார்த்தவரா யிருந்தார்.

சற்று நேரத்திற் சதானந்தனும் தோன்றலானான். விவேகநாதன் மறைந்து நின்றிருந்த விடத்திற்குச் சுமார் பத்துகஜ தூரத்திற்கப்பால் மர நிழலால் இருண்ட ஓரிடத்தில் நின்றுகொண்டு மெதுவாக முன்முறை சிட்டையடித்தான். கொஞ்ச நேரத்திற்குள் மாளிகைக் கணித்தாயுள்ள ஒரு சிறு வீட்டிலிருந்து வாலிபனொருவன் வெளியில் வந்து நேராகச் சதானந்தனிருந்த விடத்தை யடைந்தான்.

வந்த வாலிபன் :—பகவானின் கிருபை தங்கள் மாட்டுப் பூரணமாயிருக்கிறது. எல்லாம் தங்களுடைய மனோபீஷ்டத்துக் கேற்றவாறே நடந்து வருகின்றன. நாம் இன்று செய்வதாக எண்ணியிருந்த காரியத்தை இனி நடத்த வேண்டிய அவசியமில்லை யென்று நம்புகிறேன்.

சதா :—மதிவாணா! சற்று நேரத்திற்கு முன்வரை நானும் அவ்விதந்தான் நினைத்திருந்தேன். ஆனால் அவ் எண்ணம் வீணென்பதை அச்சிறுக்கியின் வாய்ப்பிறப்பிலிருந்தறிந்தேன். அவள் என்னை விவாகஞ் செய்துகொள்ள முடியாதென்று சொல்லுகிறாள்.

மதிவாணன் :—காரணம் ?

சதா :—செல்வச் செருக்குத்தான்; அடக்குவாரில்லை. மனம்போன போக் கெல்லாம் போக வேண்டியதுதானே.

மதி :—அம்மங்கை தங்களைக் காதலிக்கிறதாகச் சொன்னீர்களே!

சதா :—ஆம். இப்பொழுதும் அவள் என்மாட்டு வைத்துள்ள காதலை மாற்றவில்லை யென்பதை யுணர்வேன். எனினும் மேஷ ரிஷபம் பார்க்கிறாள்.

மதி :—தங்களுடைய ஆலோசனை யென்ன?

சதா :—முன் ஏற்படுத்தியிருந்த பிரகாரம் செய்ய வேண்டியதுதான். ஆனால் இவளை இப்பொழுது இத்தோட்டத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

மதி :—தாங்கள் சொல்வதொன்றும் எனக்கு விளங்க வில்லை. தங்களுடைய ஏற்பாட்டை விவரமாகவும் விரிவாகவும் சொல்லுவதுடன் நான் செய்யவேண்டியதின்ன வென்பதையுந் தெரிவியுங்கள்.

சதா :—இன்றிரவு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வள்ளியம்மையை இவ்விடத்திலிருந்து தென்றல் விலாஸத்திற்குத் தூக்கிக்கொண்டு வரவேண்டும். உங்கள் வரவையெதிர்பார்த்துக்கொண்டு நான் அவ்விடத்திலிருப்பேன். மற்றவைகளைப் பிறகு தெரிவிக்கிறேன்.

மதி :— அச்சமயம் மாளிகையின் வெளிவாயிற் கதவு தாளிடப்பட்டிருக்குமே. நானுட் செல்வ தெவ்விதம்? நான் அவ்வம்மையைத் தூக்கும்பொழுது நித்திரை நீங்கி அரவஞ்செய்தால் என் கதி என்னவாகும்?

சதா :—என்ன இவ்விதம் பயப்படுகிறாய்! நான் உன்னைக் காட்டிக் கொடுப்பே னென்ற சந்தேகம் வேண்டாம். மேலும், இவைகளுக்குத் தக்க ஏற்பாடு செய்யாமல் உன்னை இக்காரியத்தில் நுழைய விடுவேனா? சரியாகப் பன்னிரண்டு மணிக்குக் கதவு திறந்திறக்கும். நீ உள்ளே சென்று வள்ளியம்மையைத் தூக்கிக்கொண்டுவந்து தென்றல் விலாஸத்தில் சேர்க்கும்வரை அவள் கண்விழிக்க மாட்டாள். உனக்கு எவ்விதமான தொந்தரவைக் கொடுக்கவுமாட்டாள். இதற்கென்ன சொல்லுகிறாய்?

மதி :—விஷயந் தெரிந்தது. தடையின்றிச் செய்கிறேன். தங்களை அச்சமயம் இங்கு பார்க்கக் கூடுமென நினைக்கிறேன்.

சதா :—இவ்விடத்தில் என்னைப்பார்க்க முடியாது. தென்றல் விலாஸத்திற் காணலாம்.

மதி :—ஆகவே, வள்ளியம்மையை இம்மாளிகையிலிருந்து தென்றல் விலாஸத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பது தானெனக்கிட்டிருக்கும் வேலை.

சதா :—ஆம். அவ்வளவுதான். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

மதி :—தங்களுடைய ஏவலைச் சந்தோஷத்துடன் புரிவேன்.

சதா :—இதோ இந்த நூறு ரூபாயை வைத்துக்கொள். மற்ற நூறு ரூபாயைக் காரியம் முடிந்தவுடன் தருகிறேன்.

கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.

மதி:—முன்னிருந்ததைவிடத் தங்களுடைய நிலைமை பன்மடங்கு உயர்ந்திருப்பதினுல் கொஞ்சம் அதிகமாகத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். ஆதிமூலம் பிள்ளையின் திரண்ட செல்வமும் தங்களையன்றோ அடையப்போகிறது.

சதா:—சரி. இருநூறு ரூபாய் தருகிறேன். மறுக்காமற் பெற்றுக்கொள். விவாக தினத்தன்று உனக்குத் தக்க வெகுமதி செய்யவும் எண்ணியிருக்கிறேன்.

மதி:—சந்தோஷம். சென்று வாருங்கள். இன்னுமொரு சங்கதி. இடையிற் காவற்காரன் மறித்தால் என்ன சொல்வது?

சதா:—அத்தகைய இடையூறென்று மேற்படாது. மூன்று காவற்காரர்களையும் இன்று முழுவதும் வசந்தவிலாஸத்தி லிருக்குமாறு உத்தாவளித் திருக்கிறேன். விடியும்வரை எவரும் வரமாட்டார்கள். நீ மாத்திரம் தூங்கிவிடாதே.

மதி:—என்னைப்பற்றித் தாங்கள் எவ்விதமான சந்தேகமுங் கொள்ளவேண்டியதில்லை. காரியம் முடிந்துவிட்டதாகத் தாங்கள் நம்பியிருக்கலாம்.

சதா:—எதற்கும் சாக்கிரதையா யிருப்பது நலம். நான் சென்று வருகிறேன்—என்று சொல்லவும், மதிவாணன் விடை பெற்றுக் கொண்டு சென்றுன். சதானந்தன் தென்றல் விலாஸத்தை நோக்கிப் புறப்பட்டான். இவர்களிருவரும் மறைந்தவுடன், இவர்களின் சம்பாஷணை முழுவதையுங் கேட்டுக்கொண்டிருந்த விவேகநாதன் மறைவிடத்தை விட்டு நீங்கி வசந்தவிலாஸத்தை நோக்கி வந்தார்.

அங்கு முன் முற்றத்தில் சுப்பிரமணிய பிள்ளை உலாவிக்கொண் டிருந்ததைக் கண்டு அருகில் வந்ததும், "பாராக் கொடுத்துக் கொண்டிருக்கிற மாதிரி தோன்றுகிறது. ஆனல் தாங்கள் எதிர்பார்க்கும் பெயர்வழி இம்மார்க்கமாக வரமாட்டார்" என்றுரைக்கவும் சுப்பிரமணியபிள்ளை சற்றே ஆச்சரிய மடைந்தவராய், "தாங்கள் நடந்துவந்த மாதிரியிலிருந்து சதானந்தன் வருவதாகவன்றோ நினைத்தேன்" எனக்கூற விவேகநாதன், "தாங்கள் அவ்விதம் ஏமாந்து விடுவீர்களா, இல்லையாவென்பதைப் பரிசோதிக்கவே அவ்வாறு அபிநயித்தேன். இஃதிருக்கட்டும். நாம் தென்றல் விலாஸத்திற்குச் சென்றபின் இங்கு நடந்ததென்ன?" என்று கேட்டார்.

சுப்பிரமணிய பிள்ளை:—நாம் இவ்விடத்தை விட்டகன்ற கொஞ்ச நேரத்திற்குப் பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் சதானந்தனுடன் இங்கு வந்ததாகவும், அவர் தங்களைக் கேட்டதாகவும், கொலை நடந்த இடத்தைப் பார்த்துவிட்டு உடனே சென்றதாகவும், சற்று நேரத்திற்குப் பிறகு அமராவதியம்மாள் இங்கு வந்ததாகவும், அதைத் தெரிந்தவுடன் சதானந்தன் சரஸ்வதீ பீடத்திற்குட் சென்று தாளிட்டுக் கொண்டதாகவும், இன்னும் அவன் வெளியில் வரவில்லையென்றும் குமான் தெரிவித்தான். அவனைக் கூடத்திலேயே இருக்கும்படிசொல்லிவிட்டு நான் இவ்விடத்தில் உலாவிக்கொண்டிருக்கிறேன்.

விவே:—"நான் சந்தேகித்தவாறே இருக்கிறது. இன்றிரவு நீங்கள் செய்யவேண்டிய முக்கியமான காரிய மொன்றுண்டு. அதைச் செவ்வனே முடிப்பீராயின் உம்முடைய காதல் வெற்றி பெறுவதில் யாதொரு ஐயமுமில்லை" என்றுரைத்து, தான் சதானந்தனைப் பின்தொடர்ந்ததும், அவன் இரமணி விலாஸத்தில் நுழைந்ததும், அங்கு அவனுக்கும் வள்ளியம்மைக்கும் நடந்த வாக்குவாதமும், தான் அதை மறைந்திருந்து கேட்டதும், பின் சதானந்தன் வெளியில் வந்து மதிவாணனைச் சைகைசெய்து அழைத்ததும், அவ்விருவருக்கும் நடந்த சம்பாஷணையும், அவர்கள் செய்வதாக நிச்சயித்திருக்கும் தீச்செயலும், ஆகிய இன்னோரன்ன விஷயங்களை விவரமாகக் கூறி, "வள்ளியம்மை தங்கள்மாட்டுப் பெரிதும் காதல் கொண்டிருக்கு முண்மையை நன்குணர்ந்தேன். அன்னவளுக்கு இன்றிரவு நேரிடவிருக்கும் ஆபத்தை நீக்கி அவளைக் காப்பாற்றுவீராயின், தன் கற்பைக் காத்த தங்கள்மீது தான் ஏற்கனவே கொண்டிருக்கும் காதல் அளவு கடந்ததிகரித்துச் சொல்லொணுக் களிப்புடன் தங்களை மணம்புரிந்து தங்களுடைய மனுேபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வாளென்பது திண்ணம். ஆதலின் இரவு சரியாகப் பன்னிரண்டு மணிக்குக் குமானைச் சகாயத்திற் கழைத்துக்கொண்டு இரமணி விலாஸத்தருகிற் சென்று ஓரிடத்தில்

மறைந்திருந்து தங்களுடைய காதலியைக் காப்பாற்றி இவ்விடத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பீராக.''

சுப் :—தங்களுடைய ஏற்பாட்டின் கருத்து எனக்கு முற்றும் விளங்கவில்லை. கையிலிருப்பதைவிட்டுப் பறப்பதைப் பிடிக்க நினைப்பது போலன்றோ இருக்கிறது. இன்னது நடக்கப் போகிறதென்பது தெய்வ சங்கற்பத்தால் நமக்குத் தெரிந்தும் அதை நடைபெறாமல் தடுப்பது நேர்மையான மார்க்கமாயிருக்க, அதை நிகழுமாறுவிட்டு, பிறகு அதற்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடச்சொல்வதின் காரணம் புலப்படவில்லை.

விவே :—அதைத் தாங்களே நாளையதினம் தெரிந்துகொள்வீர்கள்.

சுப் :—தாங்களும் என்னுடன் இருப்பீர்களன்றோ ?

விவே :—அச்சமயம் வேறோரிடத்தில் நான் கவனிக்கவேண்டிய விஷயமொன் றிருக்கிறது. இம்மதிவாணன் என்பவன் யார் ?

சுப் :—காவற்கார முருகனின் மருமகன்—அவனைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது.

விவே :—சதானந்தருடைய குரல் கூடத்திற் கேட்கிறது. நான் இங்கிருக்குஞ் சங்கதி அவருக்குத் தெரியக் கூடாது. ஒரு முக்கியமான காரியத்தை யுத்தேசித்து இப்பொழுது நெல்லிக்குப்பத்திற்குப் போகவேண்டியவனா யிருக்கிறேன். இந்த நிமிஷ முதல் பதினொன்றே முக்கால் மணி வரையிலும் சதானந்தர் தங்களை விட்டுப் பிரியாமற் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவருக்குத் தங்கள்மீது யாதொருவிதமான சந்தேகமு முண்டாகக் கூடாது. பன்னிரண்டடிக்கப் பதினைந்து நிமிஷங்களிருக்கும் பொழுது நித்திரை வருவதாகத் தெரிவித்து விட்டுக் குமரனை யழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றுவிடுங்கள். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு இரமணி விலாஸத்திற்குப் புறப்பட்டுச் செல்லுங்கள். மற்ற விஷயங்கள் தங்களுடைய பொறுப்பு. என்னைப் பற்றிச் சதானந்தர் விசாரித்தால் நெல்லிக்குப்பத்திற்குச் சென்றவர் இதுகாறும் திரும்பி வாராமலிருப்பதால் காலையில்தான் வருவாரென்று தெரிவியுங்கள். அதோபாரும்; அந்த இரண்டு பெண்கள் யார் ?

சுப் :—அமராவதியம்மாளும் முருகனின் குமாரத்தி கருப்பாயியும்; இவளுடைய புருஷன் தான் மதிவாணன்.

விவே :—அவர்களை வழி கூட்டி அனுப்ப வந்த மாதிரி செல்லுங்கள். நான் இம் மரத்திற்குப் பின்னால் மறைந்து நிற்கிறேன்,

சுப் :—மேகமாக விருக்கிறதே. குடை கொண்டு போனால் நல்லதல்லவா ?

விவே :—பாதக மில்லை. மழை வந்தால் நான் எவ்விதமேனும் சமாளித்துக் கொள்ளுவேன். அதோ சதானந்தரும் வாயிற்படி யண்டை வந்து நிற்கிறார். இவர்களை இரமணி விலாஸத்திற் கனுப்பிவிட்டு அவரை யழைத்துக் கொண்டு போனகம் செய்யச்செல்லுங்கள். மிகவும் ஜாக்கிரதையாகக் காரியத்தை முடிக்க வேண்டும். குமரனைத் தவிர வேறெவருக்கும் இது விஷயம் தெரியக்கூடாது. போய் வாருங்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்

சுரங்க வழியும் நிலவறையும்

அமராவதியம்மாளும் கருப்பாயியும் சென்ற கொஞ்ச நேரத்திற்குப்பின் வசந்த விலாஸத்தின் தலைவாயிற் கதவு மூடப்படுவதைக் கண்ட விவேகநாதன் களிப்பெய்தினவராய் தாமிருந்த விடத்தை விட்டகன்று தென்றல் விலாஸத்தை நோக்கித் துரிதமாக நடந்தார். அம்மாளிகையை யடைந்ததும், சுப்பிரமணிய பிள்ளையும் அவரும் முன் பேசிக்கொண்டிருந்த அறையினுள் நுழைந்து தன்னிடமிருந்த மின்சாரக் கைவிளக்கை யேற்றிக்கொண்டு முன் அத்தியாயத்திற் கூறியுள்ள பெரிய நிலைக்கண்ணாடிபோன்ற கதவையும், அது வைக்கப்பட்டிருந்த அலமாரிபோன்ற நிலையையும் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தார். அவர் கோரி வந்த வஸ்து அவ்விடத்தி லில்லையென்பதை நன்றாகத் தெரிந்தபின் அதற் கெதிர்ப்புறமுள்ள சுவற்றில் பதிக்கப்பட்டிருந்த சிறு கண்ணாடியண்டை சென்று அதை மிகவும் கூர்மையாகக் கவனித்தார். அதில் சேறுபடிந்த கைவிரல் குறிகள் பதிக்கப்பட் டிருந்ததைக்கண்டு புன்முறுவல் பூத்த முகத்தினராய், "சதானந்தன் சேற்றில் வழுக்கி விழுந்ததுமொரு நன்மைக்கே போலும்'' என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டு விளக்கை இடதுகையிற் பிடித்த வண்ணம் தன் வலக்கையால் கண்

ணாடியை மெதுவாக அழுத்தினார். கண்ணாடியும் இலேசாகப் பின்வாங்கிற்று. அதே சமயம் பின்புறத்தில் கதவு திறப்பதுபோன்ற சப்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தார். நிலக் கண்ணாடியாலாய கதவு திறந்திருப்பதைக் கண்டார், உவப்பெய்தினார், அருகிற்சென்று நோக்கினார்.

சிறிய மேடையொன் றிருப்பதையும், அதனிரு மருங்கிலும் அழகான படிக்கட்டுகள் செல்வதையும் பார்த்த விவேகநாதன், அவைகளிருக்கும் திசையை யோர்ந்து கவனித்து ஒன்று வசந்த விலாஸத்திற்கும் மற்றொன்று தென்றல் விலாஸத்திற்கும் போகக்கூடிய தென்பதை யுணர்ந்துகொண்டு முன்னதின் வழியாகக் கீழிறங்கினார். சரியாகப் பத்துப் படிக்கட்டுகளிருந்தன. சமனான நிலத்தில் வந்து நின்றார். சுமார் ஐந்தடி அகலமும் பத்தடி உயரமுமுள்ள சுரங்கவழி போவதைக் கண்டு அதனூடே கொஞ்சதூரஞ் சென்றார். ஆங்கு தன் வலப்புறத்தில் கதவொன் றிருப்பதைக் கண்டு நின்றார். ஒரு விநாடி ஏதோ யோசித்தார். பிறகு கதவைத் தன் விரல் கொண்டு மெதுவாகத் தட்டினார். அதற்குப் பதில் கிடைக்குமென நினைத்தவர்போல் ஒரு நிமிஷம் வாளாவிருந்தார். தான் விடும் சுவாசத்தைத் தவிர வேறெவ்விதமான அரவமுங் கேட்கப்பட வில்லை. மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து பார்க்கவும் அது ஒரு சிங்காரமான சிறிய நிலவறையாயிருப்பதையும், அதன் மத்தியில் வட்டமேஜையும் ஒரு நாற்காலியும் போடப்பட்டிருப்பதையும், ஒருபுறத்திற் கட்டிலொன்று இருப்பதையும் கண்டு வியப்பெய்தினார். மேஜையின் மீது சிறு தோற்பெட்டியொன்று வைத்திருப்பதைப் பார்த்து அதையெடுத்துத் திறந்து அதனுள் அடக்கம் செய்யப்பட்டிருந்த சாமான்களில் இரண்டொன்று தன் கண் பார்வைக் கெட்டினவளவில் திக்பிரமை கொண்டார்; மரம்போல் சலனமற்று நின்றார்; சொல்லொணா ஆச்சரியமடைந்தார். அப்பெட்டியினுள்ளிருக்கும் மற்ற வஸ்துக்களைப் பார்க்க இஷ்டமில்லாதவர்போல் அதையுடனே மூடினார். வெளியில் வந்தார். சுரங்கவழியாகப் பின்னும் கொஞ்சதூரஞ் சென்றார். அத்துடன் அது முடிவு பெறுவதையும், அங்கிருந்து மீண்டும் படிக்கட்டுகள் ஆரம்பித்ததையும் கண்டு, "இதிலேறிச் சென்றால் சரஸ்வதி பீடத்தை யடையலாம் போலும்! இதன் விஷயத்தைப் பிறகு ஆராய்ந்துகொள்ளலாம்" என்று நினைத்துக்கொண்டு திரும்பிவந்து, நிலவறையில் நுழைந்து முன்னுரைத்த பெட்டியை யெடுத்துக்கொண்டு வந்தவழியே திரும்பி விரைவாக நடந்துவந்து படிக்கட்டு வழியாயேறி மேடையை யடைந்து அறைக்குள்வந்து சுரங்கவழியின் கதவை மூடிவிட்டு விளக்கை யணைத்துத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு தென்றல் விலாஸத்தை நீத்து வெளிக்கிளம்பினார்.

தோற் பெட்டியுடன் வெளியேறின விவேகநாதன் மிகவும் வேகமாக நடந்துவந்து தோட்டத்தைக் கடந்து நெல்லிக்குப்பத்திற்குப் போகும் பாட்டைவழியே சென்றார். அவ்வூரை யடைந்ததும் நேராகப் போலீஸ் ஸ்டேஷனை யணுகும் சமயம் அங்கு தெருவாயிலண்டை இவருடைய வரவை எதிர் பார்த்தவன்போல் நின்றிருந்த கான்ஸ்டேபிள் ஒருவன் இவரைக் கண்டவுடன் மிக்க மரியாதை செய்து, "ஐயா! தங்களுக்காகத்தான் இங்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். கொலை நடந்தவிடத்தில் தாங்கள் என்னிடம் இரகசியமாக கவனித்த கடிதத்தை தங்களுடைய உத்தரவுப்படி இன்ஸ்பெக்டரவர்கள் இங்கு வந்தவுடன் அவரிடம் கொடுத்தேன். அதைப் படித்துப் பார்த்து முகமலர்ச்சி யுற்றவராய் சப் இன்ஸ்பெக்டரவர்களிடம் ஏதோ ஆங்கிலத்திற் சில வார்த்தைகள் பேசினார். உடனே என்னை யழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று பிரேதத்தைப் பார்த்துவிட்டு டாக்டரிடம் ஏதோ கொஞ்சம் வார்த்தையாடின பின்னர் வசந்த விலாஸத்திற்குப் போனார். கொலை நடந்தவிடத்தைப் பார்வையிட்டதும் இவ்விடம் திரும்பிவந்தோம். எஜமானரவர்கள் தினசரிக் குறிப்பை யெழுதிவிட்டுத் தாங்கள் வந்தால் வீட்டிற்கு உடனே அழைத்து வரும்படியாக எனக்குக் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார். ஆதலின், வாருங்கள் போவோம்" என்று சொல்லிப் புறப்பட்டான். விவேகநாதனும் பின்தொடர்ந்தார்.

விவேகநாதன் :—சதானந்தர் இங்கு வந்து என்ன செய்தார் ?

கொல்லைக்குப் பல்லி, குடிக்குச் சகுனி.

கான்ஸ்டேபிள் :—அவர் ஒரு சந்தேகப் பெயர்வழி மாதிரி எனக்குத் தோன்றுகிறது. அந்தப் பிணத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் ஓரறையில் வைத்துப் பூட்டும் வரை அதை விட்டகன்றுரில்லை. வேறெவரையும் அதன் பக்கத்தில் விடவுமில்லை. இது தான் அவர் செய்த காரியம். கொலை யுண்டவரைப் பற்றி அவர் அதிகம் விசனப்படுகிற மாதிரியும் எனக்குத் தோன்றவில்லை. அவருடைய முகத்தைப் பார்த்தால் திகிலடைந் திருப்பவராகத் தோற்றுகிருரே யன்றித் துக்கங் கொண்டிருப்பவராகக் காணப்படவில்லை.

விவே :—ஆகவே, அவர் அப்பிணத்தை நிழல் போல் பின் பற்றினதற்கு அந்தரங்கமான காரண மிருக்கவேண்டு மென்பது உம்முடைய அபிப்பிராயம்.

கான் :—அவ்விதந்தான் எனக்குப் புலப்படுகிறது. ஆனல் அதை ஆராய்ந்தறியக் கூடிய திறமை எனக்கில்லை. இதுதான் எஜமானருடைய இல்லம். தாங்கள் தாராளமாய் உள்ளே போகலாம். கூடத்தி லுட்கார்ந்துகொண்டிருப்பார்.

எனவும், விவேகநாதன் வீட்டினுள் நுழைந்து கூடத்திற்குப் போன பொழுது, அங்கு சோபாவில் சாய்ந்த வண்ணம் சமாசாரப் பத்திரிகை யொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆள்வரும் அரவங் கேட்டுத் திரும்பிப்பார்த்ததும் பரபரப்புடன் பத்திரிகையை அருகிலிருந்த மேஜையின் மீது வைத்து விட்டுச் சோபாவினின்றும் எழுந்து வந்து விவேகநாதனுக்கு முகமன் கூறிக் கைலாகு கொடுத்து அழைத்துப்போய் நாற்காலி யொன்றி லமரும்படி செய்து தானும் சோபாவி லுட்கார்ந்துகொண்டு, "தங்களுடைய வரவை ஒவ்வொரு விடிையும் எதிர் பார்த்தவனு யிருந்தேன். தங்களுடைய கடிதத்தில் எட்டு மணிக்கு இவ்விடம் வந்து என்னைச் சந்திப்பதாக எழுதியிருந்தீர்கள். இப்பொழுது மணி ஒன்பதடிக்கப் போவதாலும், தாங்கள் இதுகாறும் வாராததினுலும், குறிப்பிட்ட நேரத்திற்கு வரக்கூடாமல் தங்களைத் தடுக்கவல்ல ஏதேனும் விசேடசம்பவம் நிகழ்ந்திருக்குமோ வென்றும், அது யாதாயிருக்கக் கூடு மென்றும் ஆலோசித்துக் கொண்டிருக்கும் சமயம் தாங்களே வந்து விட்டீர்கள்" என்று சொன்னர்.

விவே :—தாங்கள் உரைத்தது உண்மையாகத் தோன்றவில்லை.

இன்ஸ்பெக்டர் :—தங்களுடைய கருத்தையறிந்து கொண்டேன். பத்திரிகையை என் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன வெனினும் என்மனம் அதன்மீது செல்லவில்லை.

விவே :—சந்தோஷம். வேடிக்கையார்த்தம் கூறினேன். நான் கேட்டுக் கொண்ட பிரகாரம் கொலையுண்ட பிரேதம் டாக்டரால் இன்னும் பரிசோதிக்கப்படாம லிருக்குமென்று நம்புகிறேன்.

இன்ஸ் :—அதிற் சந்தேகமென்ன? தங்களுடைய கடிதத்தைப் பார்க்கவும் எனக்குச் சொல்லொணு மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே ஆஸ்பத்திரிக்குச் சென்று டாக்டரிடம் தாங்கள் இன்னரென்பதையும், தங்களுடைய வேண்டுகோள் இத்தகைய தென்பதையும் தெரிவித்து அவரையும் இணங்கும்படி செய்து வைத்திருக்கிறேன். தங்களுக்கு இஷ்டமுண்டெனின் இப்பொழுதே ஆஸ்பத்திரிக்குச் செல்வோம். வழியில்தான் டாக்டருடைய வீடுமிருக்கிறது. அவரையும் அழைத்துக் கொண்டு போவோம். அவருக்குத் தங்களுடன் வார்த்தையாட வேண்டுமென்னும் அவா மிகுதியுமிருக்கிறது.

விவே :—என் வேண்டுகோளைப் பூர்த்தி செய்ததற்காக என்மனமுவந்த வந்தனத்தைத் தங்களுக்கு அளிக்கிறேன். டாக்டரால் பரிசோதிக்கப்பட்டு இதற்குள் அப்பிணம் தகனம் செய்யப்பட்டிருந்தால் இக் கேஸ் முற்றிலும் கெட்டுப் போயிருக்கும். மேலும், தங்களுக்கு அக்கடிதத்தை யனுப்பினபொழுது இவ் விஷயம் இவ்வளவு அந்தரங்கத்தையுடையதென்பதை அணுவளவு முணரேன். கேட்போர்க்குச் சொல்லொணு வியப்பைத் தரக்கூடிய சம்பவம் நடந்திருக்கிறது.

இன்ஸ் :—குறித்தகாலத்தில் தாங்கள் வாராமலிருந்ததற்கும் இதுதான் காரணம்போலும்.

விவே :—ஆம். தவிரவும், கொலை நடந்த பின்னர் இன்னும் சில விசேட சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இன்னும் சற்று நேரத்

திற்குள் நடைபெறக் கூடியது மொன்றிருக்கிறது. அவைகளையெல்லாம் விவரமாக நாளைய தினம் காலையில் தெரிவிக்கிறேன்.

இன்ஸ் :—ஆகவே, வசந்த விலாஸத்தில் இன்று நடந்த கொலை விஷயமான எல்லாவித உண்மையையும் தங்களுடைய ஆராய்ச்சியால் அறிந்து கொண்டிருக்கிறீர்களென்பது தெரிகின்றது. எனினும் இக்கோரமான கொலையைச் செய்தது ஆதிமூலம் பிள்ளைதான் என்றுரைப்பீராயின் நான் ஒருக்காலும் நம்பமாட்டேன்.

விவே :—தாங்கள் இவ்விதம் கூறுவது பெரிதும் ஆச்சரியத்தைத் தரக்கூடியதா யிருக்கிறது. எவ்வாறு உலக இயற்கையின் தன்மை நிச்சயித்துக் கூற முடியாதோ, அவ்வாறே மனிதரின் மனப்பான்மையும் வரையறுத்துக் கூற வியலாததாகும். ஆதிமூலம் பிள்ளை சாந்தகுண சீலராகவும், ஜீவகாருண்ய முடையவராகவும், சத்தியசந்தராகவும் பாபத்திற்குப் பயந்தவராகவும் இறைவனின் ஆக்கினைக்குக் கட்டுப்பட்டவராகவும் இருந்திருக்கலாம். நன்மார்க்கத்தில் நின்று நற்கருமங்களையே என்றும் புரிந்துவரும் நல்லோர்கள், காலதேச வர்த்தமானங்களின் கூட்டுறவின் தன்மையால், நினைத்தற்குமரிய பாபச் செயலைச் செய்வதும், தீயவழியில் நடந்து தீய காரியங்களையே சதா இயற்றிவரும் தீயோர்கள் சிற்சில சமயங்களில் வியந்து கூறத்தக்க புண்ணிய காரியங்களைப் புரிவதும் அனுபவவாயிலா யறிந்த உண்மையாகும். ஆதலின் சன்மார்க்கத்தைக் கைக் கொண்ட ஆதிமூலம் பிள்ளையும் தன்னுடைய ஊழ்வினைப் பயனின் காரணத்தால் இப்பாபச் செயலைச் செய்திருக்கலாமென மொழிதல் பொருந்தாததாகாது. எனினும், கொலை செய்தவர் ஆதிமூலம் பிள்ளையல்லவென்பதை மாத்திரம் இப்பொழுது தங்களுக்கு நான் உறுதியாகச் சொல்லக்கூடும்.

இன்ஸ் :—தாங்கள் சொல்லிவந்ததிலிருந்து, எங்கு ஆதிமூலம் பிள்ளைதான் குற்றவாளியென்றுரைக்கப் போகிறீர்களோ வென ஐயுற்றேன். அவ்விதமல்லாது அவர் நிரபராதியெனவும் தெரிவித்ததைப்பற்றிச் சந்தோஷப் படுகிறேன். இனி நடக்கவேண்டிய காரியமென்ன?

விவே :—ஆ. வா. க. சு. அருணாசலம்பிள்ளை என்பவர் யார்?

இன்ஸ் :—அவர் இவ்வூர் தனவந்தர்களில் ஒருவர்; எனக்கு மிகவும் வேண்டியவர். அவருடைய மாளிகை ஸ்டேஷனுக்கு எதிரில் தானிருக்கிறது. ஏன்? அவரைத் தாங்கள் பார்க்கவேண்டுமோ?

விவே :—அவர் மூலமாகச் சில விஷயங்களை யறியவேண்டி யிருக்கிறது.

இன்ஸ் :—ஆக்ஷேபனை யில்லையெனின் நாமிருவரும் அங்குச் செல்வோம். இரகசிய சமாசாரமென்றால் சேவக னொருவனைத் தங்களுடன் அனுப்புகிறேன்.

விவே :—தாங்க ளறியக்கூடாத அந்தரங்கமொன்றுமில்லை. நாமிருவரும் போய் அவரைப் பார்த்துவருவோம்; வாருங்கள்.

என்று சொல்லவும், இருவரும் புறப்பட்டனர். விவேகநாதன் தோற்பெட்டியை அவ்விடத்திலேயே வைத்துவிடாமல் கையிற் பிடித்துக்கொண்டு நடந்தார்.

இன்ஸ் :—தங்களுடைய உத்தரவின்பேரில், ஒரு விஷயம் தங்களைக்கேட்க விரும்புகிறேன். நாமிருவரும் வார்த்தையாடிக் கொண்டிருந்த பொழுது தம் கையிலிருக்கும் பெட்டியைத் திறந்து பார்த்தவண்ண மிருந்தீர்கள். இப்பொழுது வீட்டிலேயே வைத்துவிடாமலும், சேவகனிடத்திற் கொடாமலும், தாங்களே அதைக் கொண்டுவருவதால் அதில் ஏதேனும் விசேட மிருக்கக்கூடுமென்று நினைக்கிறேன்.

விவே :—கேட்போரும் காண்போரும் வியப்புறக் கூடிய சாமான்கள் இதிலிருக்கின்றன. இதிலுள்ள ஒரு வஸ்துவின் சங்கதியை அறிவதற்காகவே இப்பொழுது அருணாசலம் பிள்ளையிடம் செல்கின்றோம். இப் பெட்டியை வீட்டில் வைக்காமல் கொண்டு வந்தது நம்பிக்கையின் குறைவினாலன்று. அருணாசலம் பிள்ளையிடம் வார்த்தையாடின பின்னர் ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்குப் பார்க்கவேண்டியவைகளைப் பார்த்தவுடன் நேராக நான் வசந்த விலாஸத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. பெட்டியைத் தங்கள் வீட்டில் வைத்துவிட்டால் அதையெடுத்துப் போவதற்காகத் திரும்பிவரவேண்டும். அதனால் காலதாமத மேற்படக்கூடும். அதன் காரணமாகச் சில காரியங்கள் கேடுறுதலு மியலும்.

நித்தியவிதி

THE ETERNAL LAW

[சதுர்வேதி ஸ்ரீமத் சிவத்தியாநாநந்த மகர்ஷி.]

[225-ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு நான் கற்றுக்கொண்ட படிப்பினை ஒன்றுண்டு. இன்றைக்கு எவ்வளவு கெட்ட நிலைமை எனக்கு ஏற்படினும், இனிவரும் காலத்தில் எவ்வளவு தாங்கமுடியாத நிலைமை எனக்கு ஏற்பட்டாலும், அதனைப்பற்றிக் குறைகூறிக் கொண்டிராமல் அக்கஷ்ட நிலைமையை எதிர்கொள்வேன்; அதனை மனக்கவலையின்றி ஏற்றுக்கொள்வேன்; அது எனக்கு நேரவேண்டியதே யென்றும், இல்லாவிடில் அது எனக்கு நேரிட்டிருக்கமாட்டாதென்றும் அறிந்து, அதனால் வரும் கஷ்டங்களைக் கையேற்பேன். அவற்றின் பிரயோஜனத்தை இப்பொழுது அறிய எனக்குச் சக்தியில்லாது போயினும், அவற்றால் எனக்கு நேரக்கூடிய லாபம் என்ன, அவை ஏன் எனக்கு நேர்கின்றன வென்பவற்றை நான் இப்பொழுது அறியாமற்போனாலும், "ஒரு காலம்வரும், அக்காலத்து நான் அவற்றின் உண்மைகளை யறிவேன்" என்னும் நிச்சயத்தோடு இருந்து, அவ்வுண்மை தெரிந்தபின் அவற்றை எனக்கு அனுப்பிய கடவுளுக்கு வந்தனத்தோடு நன்றியறிவு கூறுவேன்.

* * *

ஒரு அநுபவம் வரும்போது அதனை நன்றாக ஆராய்ந்து மதித்துத் தூக்கி, அதனை நல்வழியில் திருப்பி, அது நல்ல பயனைக் கொடுப்பதாக உபயோகிக்கப் படுமாயின், இவ்வுலக வாழ்க்கையிற் பயனைத் தராத அநுபவமேயில்லை. அநேக சமயங்களில் அப்படி உபயோகிக்கப்பட்ட அநேக காரியங்கள் விலைமதிக்கப் பெறாத லாபத்தை நமக்கு அளித்திருக்கின்றன. பெரும்பாலும் அவை தெய்வபலம் பொதிந்து வந்த ஆசீர்வாதங்களாக முடிந்திருக்கின்றன.

* * *

ஒருவன் தன்னைத் தான் அறியும்படியாகச் செய்யும் உதவியைப் புரிவதைக்காட்டிலும் சிறந்த உதவியே அவனுக்கில்லை. தன்னிடத்து மறைந்து கிடக்கும் சக்திகளை யுணருமாறு செய்தால் அவன் தன்னை நன்கறிந்து கொள்வான். ஈசுவரனுடைய வல்லமையோடும் வாழ்க்கையோடும் அவ்வுணர்ச்சிக்குத் தான் ஒற்றுமைப் பட்டிருத்தலை யுணர்வதே சிறந்த நெறி. இந்நெறியினால் தெய்வ சக்தி தன் துவாரா வேலை செய்யவும் வெளிப்படவும் ஒருவன் தன்னைத் திறந்து வைத்துக் கொண்டவனாகிறான்.

* * *

ஆன்மசக்திகளின் வல்லபத்தை யறிந்து தமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் அச்சக்திகளினாலேயே நடத்தப்படும் நடையில் நிற்கும் ஒரு நண்பர் அடியில் வருமாறு கூறியிருக்கிறார்: "ஒரு காடியின் கையில் அகப்பட்டு அது உன்னை இறுகக்கட்டிக் கொல்லப் பார்க்கும்போதும் நீ யதன் கண்ணை யுறுத்து நோக்கிக்கொண்டிரு. காடி உன்னைக் கிழித்து விடும் என்று நினைத்து அப்பார்வையைத் தளர விடுவாயாயின், நீ காடியைப் பார்க்கவே முடியாதவனாகிவிடுவாய்."

* * *

அதாவது உன்னைப் பீடிக்கும் துன்பங்களுக்குத் தாழ்ந்து படுவாயானால் அத்துன்பங்கள் உன்னை எடுத்து விழுங்கிவிடும். ஆனால் அத்துன்ப நிலையை மாற்றி முன்னேறும் சக்தி யுன்னிடத்திலிருப்பதை நீ தெரிந்து கொண்டு நடப்பாயாயின் அக்கஷ்ட மெல்லாம் நீங்கி நீ சுகப்படுவாய். தாழ்வு வரும்போது அதனை மன அமைதியோடு ஒப்புக் கொண்டு ஏற்று, அது ஏற்பட்டு விட்டதற்காகத் துக்கமும் பயமும் கொண்டு வருந்தும் காலத்தை உனக்குள் உள்ள சக்திகளை வெளிப்படுத்தி உபயோகிப்பதில் செலவிடுவாயாயின், அவ்வல்லல்கள் எல்லாம் வந்த வழி பார்த்துக்கொண்டு தாமே போய்விடும்.

* * *

ஒவ்வொரு புதுவிஷயமும் நமது வாழ்க்கையில் எதிர்ப்படும்போதெல்லாம் தைரியத்தோடும் வலிமையோடும் நின்று அதனையே நமது நன்மைக்கு உபயோகப்படும்படி மாற்றி விடுவோமாக. நம்மால் தாங்கி மாற்றக்கூடிய விஷயங்களைச் சகித்துத்தாங்கி யொழிப்போம். நம்மால் தாங்கமுடியாமல் நம்மை வருத்தப் பார்க்கும் விஷயங்களைப்பற்றி நாம் கவனஞ் செலுத்தா திருந்து விடுவோம். எல்லாருக்கும் பெரிய தெய்வம் ஒன்று இவ்விஷயங்களை நுண்ணிய ஞானத்தோடு கவனித்து ஆட்டுவிக்கிறது. அதனால் நாம் அவற்றைப்பற்றிய கவலையாவது பயமாவது கொள்ளவேண்டிய அவசியமேயில்லை.

கொல்லுகிறதும் சோறு, பிழைக்கிறதும் சோறு.

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் S. ஜேகன்னாதம்.]

நான்கு சங்கீத வித்வான்கள்



1. நாய்.—ஐயா நீர் எங்கு செல்லுகிறீர்!

கழுதை.—நான் கிழத்தன்மை அடைந்தபடியால் என்னால் மூட்டை சுமக்கக் கூடவில்லை என்று என் எஜமானன் என்னை அடித்து ஓட்டிவிட்டான். நான் பட்டணஞ்சென்று எனது நேர்த்தியான குரலால் பாட்டுப் பாடி ஜீவனம் செய்யப் போகிறேன். நீயும் வருகிறாயா?

நாய்: நான் சரியாய் வீடு காக்கிற தில்லையென்று என்னையும் என் எஜமானன் அடித்து ஓட்டிவிட்டான். நான் உமக்குப் பின்பாட்டுப் பாடுகிறேன். நாம் பட்டணம் போகலாம்.

2. பூனை: ஐயா! நீங்கள் எங்கு போகிறீர்கள்?



கழுதை: நாங்கள் பாட்டுப்பாடி ஜீவிக்க பட்டணம் போகிறோம். எங்கள் எஜமான்கள் எங்களை அடித்துத் துரத்திவிட்டார்கள். நீயும் எங்களுடன் வருகிறாயா?

பூனை: ஆம், நானும் உங்களுடன் வருகிறேன். என் வீட்டு எஜமானி நான் வீட்டில் எலிகளை சரியாய்ப் பிடிக்கிறதில்லை யென்று விரட்டிவிட்டாள். நான் உங்கள் பாட்டிற்கு பிடில் வாசிக்கிறேன்.



3. கோழி: ஐயா நீங்கள் எங்குசெல்லுகிறீர்கள்.

கழுதை: நாங்கள் பட்டணம் சென்று பாட்டுப்பாடி வயிறு வளர்க்கப் போகிறோம். நீயும் வருகிறாயா?

கோழி: ஆம், நானும் வருகிறேன். நான் பாட்டிற்குத் தக்க தாளம் போடுவேன், ஒரு சமயம் நாட்டியங்கூட ஆடுவேன்.

கழுதை: பேஷ், வாருங்கள் போகலாம்.

கொட்டிக் கிழங்கு வெட்டுகிறவளுக்கு கோயிலில் வந்து ஆடத் தெரியுமா?



4. நால்வரும் ஒரு காட்டை அடைந்தார்கள் ; இருட்டிவிட்டது. இராப்பொழுதைக் கழிக்க நால்வரும் ஒரு உபாயம் செய்தார்கள். கழுதை பாதையில் படுத்தது. நாய் மரத்தடியில் சயனித்தது. பூனை ஒரு கிளையில் ஏறிக்கொண்டது. கோழி உச்சியில் சென்றது. அங்கிருந்து விளக்கு எரிகிற ஒரு வீட்டைப் பார்த்தது :



5. நால்வரும் அவ்வீட்டை அடைந்து ஒரு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தார்கள். அந்த வீட்டில் சில திருடர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பயமுறுத்த இவர்கள் ஒரு ஏற்பாடு செய்தார்கள். கழுதையின்மீது நாயும், நாயின்மீது பூனையும், பூனையின்மீது கோழியும் நின்று ஒரே சமயத்தில் நான்குவித குரலில் சத்தம் செய்யவே திருடர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். பிறகு நால்வரும் வீட்டுக்குள் சென்று அங்கிருந்த ஆகாரத்தைப் புசித்து அந்த வீட்டையே தங்கள் இருப்பிடமாக்கிக் கொண்டன.

இனமாய்த் தப்பித்துக்கொண்டது

ஒரு கொடுங்கோல் மன்னன் தனியாகப் புறப்பட்டு நகரத்திற்கு வெளியே போகும் பொழுது, ஒருமரத்தினடியில் உட்கார்ந்திருந்த ஒருவனைப் பார்த்து, "அடே தம்பி, இந்த தேசத்து அரசனுடைய குணம் எப்படி? நீதியுள்ளவனு, நீதி இல்லாதவனு?" என்று கேட்டார். உடனே அவன், "ஐயா, இவ்வூர் அரசனைப்போல் கொடுமை செலுத்துகிறவன் வேறு ஒருவனும் இந்த பூலோகத்தில் இல்லை" எனவே, "என்னை உனக்குத் தெரியுமா?" என்று அரசன் கேட்டான். தெரியாதென்று பதில் சொன்னான். அப்பொழுது அரசன், "நான்தான் அரசன்" என்று சொன்னான். அதைகேட்டு அந்தமனிதன் கடுகடுங்கி "நான் யார், தங்களுக்குத் தெரியுமா" என்று கேட்டான். அரசன் தெரியாது என்று சொல்ல, அவன், ஐயா, நான் ஒரு வியாபாரியின் மகன், மாதத்தில் மூன்று நாள் எனக்கு புத்தி ஸ்வாதீனத்தில் இருக்கிறதில்லை ; அம் மூன்று நாட்களில் இன்றையதினம் ஒன்று" என்றான். அரசன் நகைத்து சம்பாஷணையை நிறுத்திச் சென்றான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸத்யவதி

[ஸ்ரீமதி விசாலாட்சி அம்மாள்]

(240-ம் பக்கத் தொடர்ச்சி.)

வெள்ளை மடந்தயரின் அலங்காரமே அழகென்று மயங்குவோர் எத்தனைபேர்? தங்கள் கர்மானுஷ்டானங்களை விட்டு, "தேசத்திற்கு உழைக்கின்றோம், ஒற்றுமையை நிலைநாட்டுகிறோம்" என்று பிதற்றி சகல ஜாதியார்களுடனும் புலால் புசித்துத் திரிபவர் எண்ணிலடங்காத் தொகையே. இதனாலா ஒற்றுமை யுண்டாகும்? முன்காலத்தில் ஒன்றாய் கண்டதையும் உண்ணாமல் ஒற்றுமையற்றவர்களாய் ஓயாமல் சண்டையிட்டுக்கொண்டுதா னிருந்தனர் போலும்! இக்காலச் சிறுமிகளோ தாங்கள் இரண்டு வகுப்பு இங்கிலீஷ் படித்தவுடனேயே சகலகலாவல்லவிகளென நினைத்துப் பாதி ஆங்கிலமும், தமிழுமாய்க் கலந்து மணிப்பிரவாளமாக பேசித் திரிகின்றனர். பெண்களே அவ்வாறிருக்க ஆண்களைப்பற்றி கேட்கவே வேண்டியதில்லை. நம் தாய்ப் பாஷையில் அநேகமாய் சொற்களே கிடைக்காமல் பஞ்சமாகிவிட்டது. பாதி இங்கிலீஷ்பதங்களுக்கு தமிழில் அர்த்தம் கூறுவதற்குக்கூட அவர்களுக்குத்தெரிவதில்லை. கற்பையே சிறந்த ஆபரணமாக அணிய வேண்டிய ஸ்திரீகள் வெளியிற்சென்று பருவமடைந்த பின்னும் அநேக ஆண்களுக்கிடையில் காலேஜில் படிப்பது மிகவும் துணிந்த செயல். ஆடவர்கள்தா னென்ன அறிஞர்களா? ஸ்திரீகள் தானென்ன ஐம்பொறியடக்கிய துறவிகளோ? அப்படி ஸ்திரீகள் ஒருவேளை திடச்சித்தமாக யிருப்பினும் துர்க்குண வாலிபர்களின்முன் அவர்கள் எவ்வாறு துன்பமடையாமலிருக்க முடியும்?

"நடந்தாளொரு கன்னிமாராசகோதரி நாட்டிற்
குடந் தானசை வொயிலாயதுகண்டு கொற்றவரும்
தொடர்ந்தார் சந்நியாசியர் யோகம்விட்டார்—சுத்
[தசைவரெலாம்
மடந்தானடைத்துச் சிவபூஜையுங்கட்டி
[வைத்தனரே

எனச் சாதாரணமாய்க் குலுங்கும்படி ஒரு மாது நடந்து சென்றிடில் அரசர் முதலானோர் மதிமயங்கினரெனின் தங்களைப் புதுமாதிரியாய் சிங்காரித்துக்கொண்டு அங்கம் முழுவதும் தெரியும்படியாக சீலையுடுத்து ஒரு மங்கைப் பருவமுள்ள பெண் பல்லாயிரம் ஆண்களுக்கிடையில் உலவித்திரிந்தால் அவள்கதி என்ன? ஸ்திரீகள் மனதால்கூட கெடுவது மஹாபாபமல்லவா? இவர்களே இவ்வாறு நியமமின்றி வெட்கம்விட்டுத் திரிய வாலிபர்களைப்பற்றி கவலையே வேண்டியதில்லை. கதையை விட்டு விட்டு அடிக்கடி இவ்வாறு என்மனதில் துடிக்கும் ஆத்திரத்தை வெளியிட்டு என்கை எழுதி விடுகிறது. அதற்காக வாசகர்களைப் பன்முறையும் மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நிற்க.

ஸத்யவதி தன் கணவனைத் தன்கையால் தான் தினமும் கொடுக்கும் சாராயத்தைத் தவிர வேறே குடிக்கக்கூடாதென்று வேண்டினாள். அவனும் அதற்கிசைந்து போஜனம் செய்து கச்சேரிக்குச் சென்றான். பேதையாகிய ஸத்யாவின் மனம் சந்தோஷமடைந்தது. ஸ்திரீகளின் மிருதுவான ஸ்வபாவமே இவ்வளவுதான். ஒரு கடிந்த சொல்லைக்கூட எப்படி அவர்களால் தாங்க முடியவில்லையோ அதேமாதிரி ஒரு இன்ப வார்த்தையைக் கேட்டதுமே சந்தோஷமும் அதிகமுண்டாகி விடும். இதுவே பேதமை. அந்த நிமிஷம் எல்லாக் குறைகளும் அவர்களுக்கு மறந்துவிடும்.

பேதமை என்பது மாதர்க்கணிகலம் அல்லவா?

III

நாட்கள் சென்றவண்ண மிருக்கின்றன. சுசீலன் இப்பொழுது தன் பத்னியால் கொடுக்கப்படும் சாராயத்தைத் தவிர வெளியில் குடிப்பதில்லை. ஆனாலும் அதுமாதிரி செய்வது அவனுக்கு மிகவும் கஷ்டமாக யிருந்தது. தன் மனைவியை இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கும்படி வேண்டினான். அவள் அதற்குச் சம்மதிக்கவில்லை. பிறகு அவளை மிரட்டிப்பார்த்தான். அவள் நடுங்கினாள். ஒரு நாள் "எனக்கு இன்று மிகவும் உடம்பு அசௌகர்யமாயிருக்கிறது ஆதலால்; இன்னும் கொஞ்சம் சாராயம் கொடு" என்று கேட்டான்.

அதற்கவள், "நாதா! கோபித்துக் கொள்ள வேண்டாம். நான் உங்கள் மனைவியாயிருந்தும் பிரதிதினமும் உங்களுக்கு விஷத்தை ஊட்டி வருகிறேன். அதைத் தரும்போது என் மனம் துடிப்பதை நீர் எவ்விதம் அறியமுடியும்! வேண்டாம். மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சி மன்றாடினாள்.

சுசிலன் "ஒன்றிரண்டு நாள் அதிகமாய்க் குடித்தால் ஒன்றும் கெடுதல் வந்துவிடாது, கொடு" என்று பிடிவாதம் செய்தான். "அப்படி யல்ல. பிராணேசுவரா! முதலில் கொஞ்சம் அதிகத்தில் ஆரம்பித்து சில ந ளில் அதுவே உம்மைப்பாதாளத்தில் அழுத்திவிடக் கூடும். பிறகு நீங்கள் சாராயத்திற்கு அடிமையாகி விட்டால் உங்களை எப்படி அதிலிருந்து விடுவிப்பது என்றுதான் பயமடைகிறேன்" என்று மிக்க பரிதாபமாய்ப் பகன்றனள்.

சுசிலன் கேட்கவில்லை. அவன் மிக்க கோபத்துடன் நகைத்து 'என்ன! என்னைப் பற்றி உனக்கு ரொம்ப கவலை போலிருக்கே! இரவெல்லாம் தூங்காமல் உட்கார்ந்திருக்கிறாயே! எனக்கு மாத்திரம் மானம், வெட்கமொன்று மில்லையா? சீ! சீ! கொண்டுவா!" என்று விளம்பினான். ஸத்யவதி கற்சிலைபோல் நின்றனள். அவள் கண்கள் கண்ணீரால் நிரம்பின. "நான் என்னுடைய கரங்களால் அப்படிச் செய்ய மாட்டேன். உங்களுக்கு வேண்டிய அளவு நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி சமையலறைக்குள் சென்றனள். அவன் வேண்டியளவு குடித்துவிட்டு எழுந்து போய்விட்டான்.

மறுபடியும் இரவில் வழக்கப்படி அளந்து கொடுத்தாள். அப்பொழுதும் இன்னும் கொஞ்சம் கொடுக்கும்படி கேட்டான். பேதை கொடுத்தனள். இரண்டாவது முறை கொடுத்ததில் அதிகமாய்த் தண்ணீர் கலந்திருப்பதை சுசிலன் அறிந்துகொண்டான்.

மறுநாள் முதல் சுசிலன் புதிதாக ஒரு சாராயப் புட்டி வாங்கி அதைத் தன் அறையில் அலமாரியில் வைத்துப் பூட்டிக் கொண்டான். இதைத் தன் மனைவியிடம் சொல்ல வேண்டாமென்று வேலைக்காரனுக்குக் கண்டிப்பாய்க் கட்டளை யிட்டான். துஷ்டர்கள் மனது போன்ற கொடிய இரவு வந்ததும் சுசிலன் பூராவாகக் குடித்துவிட்டு உள்ளே சென்றான். பேதை ஸத்யா வழக்கப்படி அளந்து கொடுத்த சிறு கரண்டியளவு சாராயத்தையும் அவ்வஞ்சகன் வாங்கிப் பருகிவிட்டு, போஜனம் செய்து சென்றனன். இவ்வாறு நாலைந்து தினங்கள் சென்றன. நாளடைவில் அவன் தனக்குத் தெரியாமல் வேறே குடிப்பதை ஸத்யா அறிந்து மனதிற் குள்ளாகவே மிக்க வருந்தினள்.

இவ்வாறு நாட்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது ஒரு நாள் அவ்வூரில் ஒரு சபை கூடியது. அதில் அன்றையதினம் சுசிலகுமார பாபுவினால் ஓர் அரிய பிரசங்கம் நடத்தப் படுமென ஊர் முழுவதும் தெரியப்படுத்தப்பட்டது. சாயங்காலமும் வந்தது. சுசிலனும் நீதிமன்றத்திலிருந்து வீடு வந்தான். வந்தவுடன் தன்னுடைய தேக அலுப்பை போக்கடித்துக் கொள்ளும் பொருட்டு ஒரு 'க்ளாஸ்' சாராயத்தைப் பருகினான்.

பிறகு அன்று அவன் பேசவேண்டிய விஷயத்தைப்பற்றி சிந்தித்தவண்ணம் தன் எதிரில் மேஜை மேலிருந்த சாராயப் புட்டியைக் காலி செய்து விட்டான். அவனுக்குத் தலை சுழன்றது. உபந்நியாஸம் ஆரம்பிக்க வேண்டிய வேளையும் நெருங்கியது. சபையிலுள்ள ஜனங்கள் பரபரப்பை யடைந்தனர். சுசிலனோ இன்னும் வரவில்லை. இரவு மணி 8 அடித்து விட்டது. அவனை அழைத்து வர சிலரை அனுப்பினார்கள். சுசிலன் தன்னை அழைக்க வந்திருப்பதை அறிந்ததும் மறுபடியும் புத்தி ஹீனத்தினால் ஒரு கிண்ணம் சாராயத்தைக் குடித்துவிட்டு வண்டியில் ஏறிச் சென்றனன். வண்டி சபா ஸதனத்தின் வாசலை அடையும் போது அவன் மனம் அவனிட மில்லை. சிலர் அவனை கை கொடுத்து இறக்கி அழைத்துச் சென்று சபையில் உட்காரவைத்தனர். அவன் பிரசங்கிப்பதற்காக எழுந்து நின்றனன். அவன் தலை சுழன்றது. உடனே அடியற்ற மரம் போல் தன் நினைவற்றுக் கீழே சாய்ந்தனன். வாயில் நுரை தள்ளியது.

சுசிலன் குடியனென்ன அன்றையதினமே யாவரும் அறிந்தனர். சிலர் அவனிடம் அனுதாப மடைந்தனர். சிலர் மிக்க ஆச்சர்ய

கொண்டோர் எல்லாம் பெண்டிர் அல்லர்.

மடைந்தனர். பலர் பரிஹஸித்தனர். கடைசியில் யாவரும் தங்கள் தங்களில்லம் ஏகினர்.

சுசிலனை ஒரு வண்டியில் தூக்கி போட்டுக்கொண்டு வந்து அவன் வீட்டில் விட்டுச் சென்றனர் சிலர்.

அன்று முழுவதும் அவனுக்கு ஸ்மரணையே வரவில்லை. மறுநாள் காலை 9-மணிக்கு விழித்துக்கொண்டு தன் ஆபீஸ் அறையில் கதவைத் தாளிட்டுக்கொண்டு மறுபடி தூங்கலானான். சற்றுநேரங் கழித்து எழுந்து நடந்தான். பிறகு தன் அன்பின் மணியை எப்படிப் பார்ப்பேன் என வருந்தினான். அவன் மனம் அலை கடல் துரும்புபோல் அல்லலுற்றது. தன் மன சஞ்சலம் தீரச் சிறிது சாராயத்தைப் பருகினான். என்ன அவன் மதியீனம்! தன்னை இவ்வித அவமானத்திற் குட்படுத்தியது சாராயமே என அறிந்தும் மறுபடியும் அதையே அவன் விரும்பிக் குடிப்பது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமே. ஆஹா! என்னே! மூட உலகம்.

முதல் நாளிரவு நடந்த விஷயங்களை எல்லாம் சேவகர்களின் மூலமாய் அறிந்த ஸத்யா மிகவும் மனங் கலங்கினாள். “ஜகதீசா! நான் சுகப்படும் நாட்கள் சென்றுவிட்டன. என் கணவனின் மதுபானத்தை நிறுத்த நான் செய்த முயற்சிகள் வீணாயினவே. இனி நான் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல்” என்று மனம் நொந்தாள். ஸத்யாவுக்கு அப்பொழுதே சமீபகாலத்தில் ஒரு சிறு குழந்தை பிறந்தது. “ஐயோ! நான் இறந்தால் இச் சிறு குழந்தைகளின் கதி என்னவாகும்? அவரோ கவனிக்கமாட்டார். என் செல்வங்கள் மூன்றும் தெருவில்நின்று போஜன மளிப்பாரின்றி அலையுமே. ஈசுவரா! இதுவும் சோதனையா!” என இரவு முழுவதும் வருந்தினாள். ஆஹா! தாயினுடைய அன்பே சிறந்தது.

அன்றையதினம் சுசிலன் சாப்பிடவில்லை. ஸத்யாவும் உபவாஸமே. அடுத்த நாள் காலை மூத்த குமாரனான நரேந்திரன் தன் தந்தை இருக்கும் அறைக்கு வெளியே நின்று “அப்பா! அம்மாவுக்கு ஜ்வரம் வந்திருக்கு, படுக்கையிலிருந்து எழுந்திருக்கவேயில்லை. ஒரு தரம் வந்து பாரேன்” என்று கூவினான்.

சுசிலனின் கல்லினும் கடிதான மனது அச் சிறுபாலகனுடைய வார்த்தைகளால்கூட இளகவில்லை. நான்கு வருஷங்களையே கண்ட அச் சிறுவனுக்கு பிதாவின் குணங்கள் எவ்வாறு தெரியும்! அவன் உள்ளே ஓடி முன்போலவே கூறி அவன் மடிமீது ஏறி விளையாடிய வண்ணம் அவன் கழுத்தைக் கட்டிக்கொள்ளப் போனான். ஆனால் அக் கல்நெஞ்சன் அப் பாலகனை அதட்டி அடித்து வெளியில் தள்ளினான். சிறுவன் அழுதவண்ணம் தன் தாயினிடம் ஓடினான்.

இவ்வாறு சுசிலன் இரண்டு நாள் முழுவதும் தன் அறையை விட்டு வெளியில் வாராமலேயே யிருந்தான். மூன்றுவது தினம் காலை ஸத்யா படுக்கையை விட்டு மெதுவாக எழுந்து தன் சிறு குழந்தையை மார்போடு அணைத்த வண்ணம் கூடத்திற்கு வந்தாள். அங்கு வேலையாளை விசாரித்ததில் சுசிலன் இரண்டு நாளாக தன் அறையைவிட்டு வெளியிலேயே வரவில்லை எனத் தெரிந்துகொண்டாள். அவள் கால்கள் தள்ளாடின. ஓயாமல் அழுததால் அவளுடைய கயல்போன்ற விழிகள் மிகவும் சுருங்கி சிவந்து வீங்கி இருந்தன. அவளுடைய மெல்லிய தேகம் காற்றிலசையும் மாந்தளிர்போல் தள்ளாடியது. அவள் மெதுவாக கதவருகில் சென்று ஒரே ஒரு முறை கதவைத் திறக்கும்படி பன்முறை வேண்டினாள். சுசிலன் கதவைத் திறந்தனன். உள்ளே சென்று பார்த்த ஸத்யா அப்படியே நிர்ஜீவனாய் நின்றுவிட்டாள்.

சுசிலனுடைய கம்பீரமான முகமானது இவ்விரண்டு நாளில் மிகவும் வாடி, கறுத்து, கண்கள் குழிவிழுந்து, மிக்க விகாரமான நிலைமையை யடைந்திருந்தது. அதைக்கண்டு ஸத்யா மனந்துடித்தாள். பிறகு ஸத்யா கதவை மூடிவிட்டு தன் கையிலிருக்கும் குழந்தையை அவன் பாதத்தினருகில் கிடத்திவிட்டு அவன் காலில் விழுந்து அவன் பாத மிரண்டையும் தன் கையால் பிடித்துக்கொண்டு அதிதீனமாய் “பிராண வல்லபா! இச் சிறு குழந்தைகளைப் பார்த்தாவது மதுபானத்தை நிறுத்தக்கூடாதா? இனியாவது குல ஹீனமான இககாரியத்தைவிட்டு கரையேற மாட்டீர்களா? எவ்வளவு அவமானம் வேண்டுமோ அவ்வளவும் அடைக்

தாகிவிட்டது. இப்பவும் நீங்கள் மனது வைத்தால் நல்ல வழியில் திரும்பலா''மென பல விதமாகக் கெஞ்சினாள். அத்துஷ்டன் அவைகளைக் கேட்டுக்கொண்டு ஒருவிதமான பதிலும் கூறாமல் அப்படியே மரம்போல் நின்றான்.

IV

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட விஷயங்கள் நடந்து ஆறு மாதங்கள் சென்றன. சுசீலன் வண்டிக் குடியனானான். முன்பு வந்து போய்க் கொண்டிருந்த பெரிய மனிதர்களுக்கு பதிலாக இரவும் பகலும் குடிகாரர்கள் வரத் தலைப்பட்டனர். அவர்களுடன் கூடி இன்னும் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்தான். நீதி ஸ்தலத்திற்கும் செல்வதில்லை. பணமும் வருவதில்லை. கடை வீதியில் எங்கும் கடனே. வீட்டுக்காரன் வீட்டைக் காலி செய்யும்படி தொந்திரவு செய்தனன். வண்டி குதிரையும் விற்று குடித்தாய்விட்டது. சில நாள் சட்டப் புத்தகங்களை விற்றுக் குடித்தான். சாராயக் கடைகளிலேயே யிருந்து குடித்துவிட்டு நடு இரவில் வீடு வருவான். ஸத்யா இரவில் தன் சிறு குழந்தைகளுடன் தனியே யிருந்து தவிப்பாள். சுசீலனுக்கு மனைவி மக்களின் நினைவே கிடையாது. எல்லாப் பொருள்களும் நாசமடைந்தன.

பாவம்! ஸத்யவதியே இதுவரையிலும் தன்னில்லத்தைப் பாதுகாத்து வந்தாள். இப்பொழுது அச்சுமை இன்னும் அதிகபாரமாக அவள் தலையில் இறங்கியது. அவள் தன் நகைகளை எல்லாம் அடகுவைத்து ஜீவனத்தை நடத்திவந்தாள். குழந்தைகள் கந்தைகளையே உடுத்தியிருந்தனர். வேலையாட்கள் யாவரும் நீக்கப்பட்டனர். ஒரு வேலைக்காரி மாத்திரம் ஸத்யாவிற்கு துணையின் பொருட்டு இருந்து வந்தாள். வீட்டு வேலை எல்லாம் ஸத்யவதியே செய்து வந்தாள். தன் குடும்பத்திற்கு நேர்ந்த துர்த்தசையை நினைத்து நினைத்து மனமுருகினாள். வெளியில் ஒன்றும் கூற மாட்டாள். தன்னருமைக் குழந்தைகளின் பொருட்டு உயிரைத் தாங்கி நடைப் பிணம்போல் இருந்தாள்.

கடைசி குழந்தையான சுரேந்திரன் பசியினால் மிகவும் அழ ஆரம்பித்தான். ஸத்யவதியோ பட்டினியினால் உலர்ந்து போயிருந்தாள். பால்காரிக்குப் பணம் கொடுக்கவில்லையாதலால் அவள் பால் விடுவதை நிறுத்திவிட்டாள். ஸத்யா தன் கையிலுள்ள காப்பை விற்றுவிடும்படி தட்டானிடம் கொடுத்திருந்தாள். ஸத்யவதியிடம் அப்பொழுது ஒரு ரூபாயே இருந்தது. அவள் அதைக் கையில் வைத்துக்கொண்டு, "இந்த ஒரு ரூபாயை இடைச்சியிடம் கொடுத்து பாக்கி பணத்தை காப்பு விற்று வந்ததும் கொடுத்து என் அருமைச் செல்வனுக்கு பால் வாங்கிக் கொடுப்பேன்'' என்று நினைத்திருக்கும் வேளையில் சுசீலன் வீடுவந்தான்.

சுசீலன் வீடுவந்து அவளருகில் உட்கார்ந்து பேசி வெகு தினங்களாகி விட்டன. இப்பொழுது அவன் அங்கு வந்து உட்கார்ந்து தன் சிறு குழந்தையை எடுத்து கொஞ்சலானான். அதைக் கண்ட ஸத்யவதி பரமானந்தத்தில் மூழ்கினாள். அவன் இரண்டு நாளாக வீட்டிற்கே வாராமல் கடைசியாக இன்று வந்து இவ்வளவு அன்புடனிருப்பதைக் கண்டு நிர்மல ஹ்ருதயமுள்ள மனைவி ஆனந்த மடைந்தாள். சுசீலன் தனக்கு நிரம்ப பசியாயிருப்பதாகவும், ஏதாவது தின்பண்டம் கொடுக்கும்படியும் கேட்டான். தன் பர்த்தாவுக்கு கொடுக்க வீட்டில் ஒன்று மில்லையே என்று ஸத்யா வருந்தினாள். உடனே அவள் தன் கணவனைப் பரிவுடன் நோக்கி "வேலைக்காரி பால்காரியைக் கூப்பிடப் போயிருக்கிறாள். அவள் வந்ததும் இதோ இந்த ரூபாயைக் கொடுத்து தின்பண்டங்கள் வாங்கிவரச் சொல்லுகிறேன்''என்று அன்புடன் கூறினாள். அதைக் கேட்ட அக்குடியன், "வேலைக்காரி வருவதற்கு மிகவும் நேரமாகும். எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது. பணத்தைக் கொடு, நான் போய் வாங்கி வருகிறேன்'' என்றனன். உடனே பணம் அவன் கையில் சென்றது. அதையடைந்த அவன் பரபரப்புடன் தன் மடியிலிருந்த குழந்தையை கீழே உருட்டி விட்டு வெளியே சென்றுவிட்டனன்.

பிறகு சிறிது நாழிகைக்கெல்லாம் வேலைக்காரி இடைச்சியை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். ஸத்யவதி பால்காரியைப்பார்த்து மிகவும் தீனமாக "அம்மா! நீ முன்போலவே

பால் விட்டுக்கொண்டிரு. என் காப்பு விற்று வந்ததும் உனக்குப் பணம் தருகிறேன். பால் இல்லாமல் என் குழந்தை மிகவும் அழுகிறான். தயவுசெய்து பால் விடமாட்டாயா?'' என்று கெஞ்சினாள். அந்நிலைமையில் அவளைக் கண்ட பால்காரி மனமிளகி அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு அப்போது வேண்டிய அளவு பால் விட்டுப்போனாள். சிறிது நேரத்திற்கெல்லாம் சிறுவன் நரேந்திரன் ஒரு கடிதக் கைக்கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான். அது அவளுடைய தந்தை எழுதிய கடிதம். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது :—

"குமாரீ! ஸத்யா! உனக்கு சர்வமங்களமும் உண்டாகட்டும். வெகு நாட்களாக உன்னிடமிருந்து க்ஷேமசமாசாரமொன்றும் தெரியவில்லை. எனக்கு மிகவும் கவலையாயிருக்கிறது. உங்கள் யாவரையும் பார்க்க வேண்டுமென எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது. நான் இன்னுமிரண்டு நாளில் அங்கு வருகிறேன். உங்களை எல்லாம் என்னுடன் சில நாள் வைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிக்கு
உன்னன்புள்ள பிதா
முகுந்தநாத் பானர்ஜி.''

என்று எழுதியிருந்த கடிதத்தைப் படித்த உடனே ஸத்யாவுக்கு சந்தோஷமும் துக்கமும், ஒரே சமயத்திலுதித்தன. அவள் "என் இரண்டாவது குமாரனை ஹரேந்திரனின் அன்னப்பிராசனத்திற் கல்லவா என் தந்தை கடைசியாக இங்கு வந்தார். அப்பொழுது என் வீடு எவ்வளவு வைபவத்துடன் விளங்கியது. ஐயோ! இப்பொழுது எவ்வளவு தீனதசையை அடைந்துவிட்டது. அப்பொழுது என் வீட்டில் பிரஸன்னமாயிருந்த லக்ஷ்மி தேவியானவள் இப்பொழுது தன் தமக்கையை இங்கு நிறுத்திவிட்டு ஓடிவிட்டனளே. என் மனதிலிருந்த ஆனந்த மெல்லாம் என்னிடமிருக்க பயந்து ஓடிச்சென்று ஆறு மாதங்களாகி விட்டதே. என் பிராணேசர் என்னையும் என் குழந்தைகளையும் கவனிப்பதேயில்லை. என் ஹ்ருதயம் நிராசையினால் உடைந்துவிட்டது. என் சுகமானது அஸ்தமித்து விட்டது. ஐயோ! இவ்வாறிருக்கும் தருணத்தில் என் முகத்தை எவ்வாறு நான் என் பிதாவுக்குக் காண்பிப்பேன்'' என்று வருந்தினாள்.

அடுத்த நாள் மாலையில் முகுந்தர் தன் புத்ரியின் வீட்டை யடைந்தார். வந்ததும் ஆபீஸ் அறைக்குச் சென்றார். அங்கு முன்பிருந்த சாமான்களொன்றும் காணப்படவில்லை. சுசீலனு மில்லை. எல்லாம் ஒரே புழுதியாக இருந்தது. பிறகு வெளியில் வந்து "நரேந்திரா!'' என்று கூப்பிட்டார். உடனே ஸத்யா தன் பிதாவென அறிந்துகொண்டு தன் குழந்தைகளிரண்டுபேருக்கும் நல்ல அங்கிகள் அணிவித்து தன் பிதாவிடம் அனுப்பிவிட்டு, இருப்பதில் கொஞ்சம் கிழியாமலிருக்கிற ஒரு புடவையைத் தானும் கட்டிக்கொண்டு பிதாவைக் காண வந்தாள். வந்ததும் அவரை வணங்கி உள்ளே அழைத்துச் சென்று ஒரு ஆசனத்தில் அமரச்செய்து தானும் கீழே உட்கார்ந்தாள். அவள் உரக்கப்பேசக் கூட சக்தியற்றவளாக யிருந்தாள். கட்டியிருந்த வஸ்திரம் கந்தலாயிருந்தது. கைகளில் சாதாரண கண்ணாடி வளையல்களே இருந்தன. அவள் சரீரத்தில் மற்ற ஆபாணங்கள் ஒன்றுமே யில்லை. அவள் முகம் மிகவும் வாடியிருந்தது.

இவைகளைக் கவனித்த பிதாவின் மனம் புண்ணாகி, "குழந்தாய்! உன்னுடைய அடையாளமே தெரியவில்லையே! ஏன் இவ்வாறு இளைத்து விட்டாய்? உனக்கென்ன நேர்ந்தது? சொல்லம்மா! ஒரு கடிதம் எழுதக் கூடாதா? நான் வந்து கூட்டிச் செல்வேனே?'' என்று அன்புடன் கேட்டார். அதற்கு ஸத்யவதி, "அப்பா! காரணமொன்றுந் தெரியவில்லை, எனக்கு பசியே கிடையாது. ஆதலால் நான் சரியாய் சாப்பிடுவதில்லை'' என்று கூறினாள். "உங்கள் வேலைக்காரர்களெல்லாம் எங்கே?'' என தந்தை வினவினர். "அவர்களை எல்லாம் வேண்டா மென்று போகச்சொல்லி விட்டோம்'' என விடையிறுத்தனள் வனிதை.

✓ **மிகவும் பெரிய பத்திரிகை :—** உலகத்திலேயே மிகவும் பெரிதான பத்திரிகை மெக்ஸிகோவிலிருந்து பிரசுரிக்கப்படுமாம். இதன் நீளம் ஒன்பது அடி; அகலம் ஆறடி. இப் பத்திரிகை யாவரும் படிக்கக்கூடிய வகையில் சுவர்களில் ஒட்டப்படுமாம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

17-வது சென்னை மாகாண கூட்டுறவு மகாநாடு:-இம் மகாநாடு ஜுலை 26, 27உ, சென்னையில் கூடியது. மகாநாட்டின் வரவேற்புத் தலைவராக கூட்டுறவு இயக்கங்களில் பெரிதும் உழைத்து வரும் கனம் வி. ராமதாஸ் பந்துலுவும், மகாநாட்டின் தலைவராக திவான் பகதூர் ஸ்ரீமான் டி. ராகவய்யாவும் நியமிக்கப்பட்டிருந்தனர். பல இடங்களி லிருந்தும் பிரதிநிதிகள் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர். தலைவர் ஸ்ரீமான் டி. ராகவய்யா தமது அரிய பிரசங்கத்தில், தற்போது ஜனத்தொகையில் 50-ல் ஒரு பாகமே கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட் டிருக்கிறார்களென்றும், தொழிலாளர் முதலிய ஏழை ஜனங்கள் கூட்டுறவின் பல நன்மைகளை நன்கு அறியவில்லை யென்றும், அவர்களுக்கு இவ் வியக்கத்தின் பலன்களை விளக்கி அவர்களையும் சேர்க்கவேண்டுமென்றும், மற்றும் இயக்கத்தில் காணப்படும் பல குறைகளையும் நீக்கி சீர்திருத்திப் பொது ஜனங்களை முன்னேற்ற முயலவேண்டுமென்றும் கூறினர். பிறகு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளுள் முக்கியமானவை பின்வருமாறு:—

கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றில் கொடுக்கப்பட்ட கடன் தொகை சரியான கெடுவில் வசூலிக்கப்படாமலிருப்பது கூட்டுறவு இயக்க அபிவிருத்திக்கே பாதகமாக ஏற்படுமாகையால் கிராமங்களைச் சீர்திருத்தி அவற்றைச் சரிவர வேலைசெய்வதற் கவசியமான முயற்சிகளைச் செய்யவேண்டும். மூன்று வருஷங்களுள் அவ்வேலை பூர்த்தியாவதற்கான திட்டம் ஒவ்வோர் ஜில்லாவிலும் தயாரிக்கப்படவேண்டும்.

பின்கண்ட முறைகளை அநுசரித்து உற்பத்தி விற்பனையைப் பெருக்கவேண்டும் (1) விஜயநகரத்தில் இருப்பதுபோல் நூல் நெசவுக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்; (2) பிரைமரி சங்கங்கள் தமது அங்கத்தினர்களுக்கு கதர் வாங்கி விற்பனை செய்தல்; (3) அகில இந்திய நூற்பவர் சங்கத்தைப் போன்ற உற்பத்தி ஸ்தானங்களுடன் ஏற்பாடு செய்துகொண்டு கமிஷனுக்குப் பண்டசாலைகளில் கதர் விற்றல். நகர்ப்புறங்களில் வாங்கிச் சாப்பிடுவோர் பண்டசாலைகளும் கிராமாந்தர சங்கங்களை அண்டிய கடன் விற்பனைச் சங்கங்களும் பரஸ்பரம் ஒத்தாசை புரிந்துகொள்ளவேண்டும்.

கட்டிடக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கும் கடன்மீது 5½ வட்டி வாங்கினால் போதுமென்று கவர்ன்மெண்டை இம்மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

கௌரவ ஊழியர்கள் கூட்டுறவுப் பயிற்சிக்காக வெளிதேசங்கள் சென்றால் அவர்களுக்குக் கவர்ன்மெண்ட் பண உதவி செய்யவேண்டும்.

இம்மாகாணத்திற்கு ஒரு மத்திய நில அடமான பாங்கி ஏற்படுத்துவதில் தாமதம் உண்டாவதைப்பற்றி மகாநாடு வருந்துகிறது. சீக்கிரத்தில் இவ்வேலையை கவர்ன்மெண்ட் ஆரம்பித்து முடிக்கவேண்டும். பிரைமரி நில அடமான பாங்கி அங்கத்தினர்கள் 5,000 ரூபாய் வரை கடன் வாங்க உரிமை இருக்கவேண்டும். 100-க்கு 9 விதம் வட்டியும் தாங்கக்கூடாததாயிருக்கிறது. அதை 100-க்கு 7½ ஆக்கவேண்டும். இந்த பாங்குகளின் கணக்குப் பரிசோதனை இலவசமாகச் செய்யப்படவேண்டும்.

* * * *

சிலந்திக் கூண்டு:—ஒரு பவுண்டு எடையுள்ள கூண்டைக் கட்ட ஏழு லக்ஷம் சிலந்திகள் வேண்டுமாம். ஒரு சிலந்தியால் 33 ஆயிரத்து எண்ணூறு கஜம் நீளமான நூலைத் தயார்செய்ய முடியுமா.

* * * *

புதிய இங்கிலீஷ் பார்லிமேண்ட்:— சில மாதங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் பார்லிமெண்டுக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்றதில், இந்தத் தடவை வெற்றிபெற்றது தொழிற்கட்சி யாகும். இக்கக்ஷியினர் ஆதிக்கம் பெற்றிருப்பதால் இந்தியாவுக்கு அநுகூலமுண்டாகும் என்று கருதப்படுகிறது. இந்தப் புது பார்லிமெண்டில் பதின்மூன்று ஸ்திரீ அங்கத்தின ரிருக்கின்றனர்.

* * * *

எறும்புகளுக்கு நகரங்கள்:—அமெரிக்கா பென்சில்வேனியா மலைகளில் எறும்புகள் வசிப்பதற் கென்று தனிப்பட்ட நகரங்கள் இருக்கின்றன. இவைகளில் மிகப் பெரியது முப்பது ஏக்கா விஸ்தீரண முள்ளதாம்.

* * * *

ப்ரொபஸர் ஜேம்ஸின்

எலெக்ட்ரோ டானிக் முத்துகள்

நரம்பிற்குரிய எல்லா வியாதிகளையும், தூக்கமின்மையையும், ஞாபகசக்திக் குறைவு முதலியவைகளையும் கட்டாயம் குணப்படுத்தும்; மூளை இளைப்பு, படிப்பு அல்லது வேலைக்கோ தருதியின்மை பலவீனம், பருவத்திற்குமுன் தளர்ச்சி இவைகளையும் சீர்படுத்தக்கூடியது.

முக்கியமாக உத்தியோகஸ்தர்கள், கல்வித் தொழிலுடையவர்கள், குருக்கள்மார், உபாத்தியாயர்கள், மாணவர்கள், வக்கீல்கள், குமாஸ்தாக்கள், மல்வர்கள், வியாபாரிகள் முதலியோருக்கும் மனவேலை செய்யும் மற்றெல்லாருக்கும், ஆசாவும் புத்துயிர் அளிக்கும் சக்தியும் உள்ளவை.

கிழத்தனத்தாலும் மற்றெக்காரணத்தாலும் ஏற்பட்ட பலவீனத்தைக் குறைக்கும் விஷயத்தில் இதன் சக்தி மிக்க நன்குய்த் தெரியும்.

இவைகள், எல்லா விபரீத வியாதிகளையும் குணப்படுத்தும்; தளர்ந்து போனவும், களைத்துக் கிடைப்பனவும், ஆயாசமானவுமான சரீரங்களைத் தேற்றிக் குணப்படுத்தும்.

இவைகளை உட்கொண்ட முதநாளிலிருந்தே உத்சாகம், பலம், தைரியம் முதலிய உணர்ச்சிகள் ஏற்படுவதினாலும் இவைகளுடைய பராக்கிரமமுள்ள வியாதியைக் குணப்படுத்தும் சக்தி புலப்படும். இவைகள் ஜீரண சக்தியைப் பலப்படுத்தும், வடிதல்களை மாயம்போல் நிறுத்தும். பசி உணர்ச்சியை அதிசயமாய் அதிகப்படுத்தும். இரோசனங்களை சரிப்படுத்தும், முகத்தோற்றத்தை பிரகாசப்படுத்தும், கண்களை மீண்டும் சோபைபெறச் செய்யும், பார்வையை மேம்படுத்தும், நடையை முன்னிலும் அழகும், காம்பீர்யமுள்ளதாய்ச் செய்யும், குணத்தை மகிழ்ச்சிபெற மாற்றும். மூளையை சுறுசுறுப்புறச் செய்யும், ஞாபக சக்தியை பலப்படுத்தும், சரீர போஷணத்தை அதிகப்படுத்தும்.

இரண்டு நாள் உபயோகிக்கக்கூடிய மாதிரி புட்டி காலணு தபால் தலைகள் அனுப்பினால் ஸாம்பில் போஸ்டில் அனுப்பப்படும்.

விபரம்.		விலை	ரூ.அ.பை.
25 முத்துக்களடங்கிய 1 புட்டி	...	...	1—4—0
40 ,, 1 ,,	...	...	2—0—0

தபாற் செலவு, வி. பி. செலவு வேறு.

விலாசம்:— ஆங்கிலோ இந்தியன் ட்ரக் அண்ட் கெமிகல் கம்பெனி,

போஸ்ட் பாக்ஸ், 2082, பம்பாய், நெ. 2.

திராவிட வேதத்திரட்டு

கயப்பாக்கம் திரு. சதாசிவ செட்டியார், பீ. ஏ., அவர்கள் அழகாய்த் தொகுத்தது.

புதிதாய் வெளிவந்தது :: 570—பக்கங்கள் :: விலை ரூபா 3—8—0

அரிய வெளியீடு

லோகோபகாரி —* * இதில் மூவர் தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் முதலிய பன்னிரு திருமுறைகளிலும் திருப்புகழிலும் திரட்டிய அரிய பாடல்கள் அடங்கியிருக்கின்றன. மூவர் தேவாரத்தில் சிறந்த பாடல்கள் இதில் திரட்டப்பட்டிருக்கின்றன. இதில் (274) இருநூற்றெழுபத்திநாலு தலங்களில் மூவர் பாடிய பாடல்கள் அடங்கியிருக்கின்றன. சிவத்தல யாத்திரை செய்ய விரும்பும் அன்பர்களுக்கு இது சிறந்த துணையாகும். இதனைத் திரட்டிய அன்பர் தமிழறிஞரும், சைவப் பெரியாருமான கயப்பாக்கம் உயர் திரு சதாசிவ செட்டியார் என்றால் இதுபற்றி விரித்துரைத்தல் வீணதும். சைவ சமயத்தில் தோன்றும் பாக்கியம் பெற்ற ஒவ்வொருவரிடமும், நூலின் ஒரு பிரதி இருக்கவேண்டும்.. இது அவர்களுக்கு உயிர்த்துணையாகும். இதன் காகிதம் அச்சு, கட்டடம் அனைத்தும் நேர்த்.

இந்து சாதனம்.—* * உயர்ந்த காகிதத்தில் சுத்தப் பதிப்பாக அச்சிட்டு அழகுறக் கட்டப்பட்டிருக்கிறது. அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியிடும் பிரசுரங்களின் விசேஷத்தைத் தமிழுலகம் நன்கறியுமாதலின் நாம் இங்கே கூறுதல் மிகையாம். சைவாசாரமுள்ள ஒவ்வொருவரிடத்தும் இப்புத்தகம் ஆவசியகம் இருத்தல் வேண்டும்.

கலா நிலயம்.—* * மணிகளுக்குள் மணியைத் தேர்ந்தமைத்தாற் போல, அழகினுள், அழகு தேடிப் பாசுரங்களைத் தொகுத்திருக்கின்றனர். பாடப்பெற்ற இடங்களின் பெருமையையும் பாடவந்த வரலாறும் அங்கங்கே சொல்லியும் வருகின்றார். * உள்ளிருக்கும் உயர்ந்த விஷயத்திற்கொப்ப இப்பதிப்பின் காகிதமும், அச்சும், கில்டுடன் கூடிய மேற்கட்டும் உயர்ந்து இருந்து திருமுறை படித்திராதாரையும் படிக்கும்படி தூண்டத்தக்கவை.

செந்தமிழ்ச் செல்வி—* * தேவாரப் பாடல்பெற்ற திருக்கோயில்களின் பெருமை, இறைவன் இறைவிப் பெயர்கள், அவற்றிற்குச் செல்லும் வழி, வாயில்களின் விளக்கம் முதலியவைகளும் இந் நூலின் இடையிடையே அவ்வப் பதிகங்களின் அடியில் எழுதப்பட்டிருக்கின்றன.

நவசக்தி.—* * ஒவ்வொரு திருப்பதியின் மாண்பும் ஆங்காங்கே சுருங்கச் சொல்லப்பட்டிருக்கிறது. பாராயணத்துக்குரிய பாடல்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருப்புகழ்த் திரட்டும் ஒருபால் ஒளிர்கிறது. க்ஷேத்திர யாத்திரை செய்வோருக்கு எல்லா வழியிலும் வழிகாட்டியா யிருப்பது இத்திராவிட வேதத் திரட்டு.

குமரன்.—* * திருமுறையை நியம பாராயணஞ் செய்பவருக்குப் பெரிதும் உபயோகமாகும் பொருட்டு சைவத் திருமுறை பன்னிரெண்டினும் இருந்து பல அரிய பாக்கள் திரட்டப்பட்டுள்ளது. திருப்புகழி லிருந்து சில பாக்களும் சேர்க்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு தலத்தின் புராணக் குறிப்புகளும், இருக்குமிட விவரமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த காகிதத்தில் திறம்பட அச்சிடப் பட்டிருக்கின்றது. விலை ரூ. **3-8-0.**

சுதேசமித்திரன் —* * ஸ்தல மான்மியத்தில் அந்தந்தத் தலமிருக்கும் இடமும், யாத்ரீகர்கள் சுலபமாய் அடைவதற்கு ரயில்வே ஸ்டேஷனும் குறிக்கப்பட்டிருப்பது வெகு உபயோகமானவைகளே. திருவிழாவில் திருக்கூட்டத்தார் ஓதுவதற்கு இது தக்கதாயிருக்கும்.

ஊழியன்.—* * நல்ல காகிதம். அச்சு அழகாகவும் சுத்தமாகவும் இருக்கிறது. தேவாரம் ஏழு திருமுறையையும் தல வரிசையாகவும்; பின்னர் எட்டாவது திருமுறையாகிய திருவாசகந் தொட்டு, பன்னிரண்டாவது திருமுறையாகிய தொண்டர் புராணம் வரையும், ஈற்றில் திருப்புகழையும் கிரலே திரட்டி யமைக்கப்பட்டிருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, ஷண்முக விலாஸம், மயிலாப்பூர், சென்னை.

80-வருஷ காலமாக உலகப் பிரசித்திபெற்ற

அசல்

காரம் மணம் நிறம் மணம் வாடை உள்ளது

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

டிரேட் மார்க்

ஷண்முகம் பட்டணம்பொடி

தபால் செலவுடன் 4 பலம் அல்லது 12 தோலா	0-13-0
„ 8 பலம் அல்லது 24 தோலா	1-6-0
1 புட்டி டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள்	0-9-0
3 புட்டிகள் ஷை	0-14-0

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்,
தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

லோகோபகாரி

— முப்பத்தி ஐந்து ஆண்டுகளாய் நிலவும் —

வாரப் பத்திரிகை

பத்திராதிபர்:— பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டுவரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடையவேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும் அன்புநெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய் 4—0—0 :: வெளி நாட்டுக்கு ரூபாய் 6—0—0

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

திருப்பேரூர்

சந்நிதி முறைத் திரட்டும், அரும்பதவுரையும்

[ஸ்ரீமத் - சிதம்பர சுவாமிகள் அருளியவை.]

நால்வர் சரித்திரம், மங்கையர்க்கரசி, விசாரசன்மர் முதலிய
நன்னூல்களின் ஆசிரியர் மா. துரைசாமி முதலியார் தொகுத்தது.

இதிலுள்ள பாடல்கள் நமது கல் நெஞ்சைக் கரைக்கும் ; அன்பைப் பெருக்கும் ; அருளைக் கூட்டும். பத்திச் சுவை சொட்டும் இந்நூல் ஆண், பெண், சிறுவர் ஆகிய எல்லோருக்கும் பயன்பட வேண்டிப் பதங்கள் பிரிக்கப் பட்டன ; கடின பதங்களுக்குப் பொருளும் எழுதப்பட்டது. ஸ்ரீமத் - சிதம்பர சுவாமிகளுடைய சுருக்க வரலாறும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அணா **5**.

கிடைக்குமிடம் :— முருகவேள் புத்தகசாலை,
ராயப்பேட்டை, சென்னை.

திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை

இந் நூல், இத்தமிழ் நாடெங்கும் திருப்புகழ் என்னும் தேனை மாரியாகப் பொழிபவரும், திருப்புகழடியார் திருவடிச்சென்னியார் என்னும் காரணப்பெயர் வாய்ந்தவருமாகிய ப்ரும்மஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா அவர்களால் தொகுக்கப்பட்டதொன்றாகும். இந்நூல், முருகப் பெருமானது அருளைப்பெறும் நோக்கத்தோடு முறைமைப்படுத்திப் பாராயணம் செய்வதைத் தெரிவிப்பதால், பிரதிதினம் திருப்புகழ்ப் பாராயணம் செய்யும் திருப்புகழடியார்களுக்கும், திருப்புகழ் சங்கங்களுக்கும் இன்றியமையாததாகும். கண்ணைக் கவரும் இரண்டாம் பதிப்பு விலை உயர்ந்த காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டது. கண்ணைக்கவரும் பல ஆப்டோன் படங்கள் கொண்டது. அழகிய அட்டை பைண்ட் விலை ரூ. 1.

ஷை புஸ்தகம் அழகிய கலிகோ பயிண்ட் செதது விலை ரூ. 1—4—0

"The Problem of Life for Young Men"

Price Re. 1—8—0

ORDER FOR A COPY AT ONCE

Address :— **The Alliance Co., Myiapore, Madras, S.**

டிரெயினிங் ஸ்கூல் ஆரம்ப கணிதம்

லோயர் கிரேட் மாணவர்களுக்கு

:: A TRAINING SCHOOL ARITHMETIC ::

(By Mr. P. SITARAMAN, B.A., L.T., Subordinate Educational Service.)

Prepared in accordance with the departmental scheme of work for Training Schools with notes on the teaching of each topic at the beginning of each chapter with nearly thousand graduated examples with hints and solutions for difficult questions, copious mental exercises and with three appendices containing. (A) Solutions to T. S. L. C. Examination papers in Arithmetic (B) Notes of Lessons for important topics in Space and Number Work & (C) Scheme of lessons in Space and Number Work for all the classes of Elementary Schools.

போதனுமுறைப் பாடசாலைகளில் பயின்றுவரும் எலிமெண்டரி கிரேட் மாணுக்கர்களின் உபயோகத்திற்கென சென்னை வித்யா இலாகா டைரக்டரவர்களால் பிரசுரிக்கப்பட்ட பாடக்கிரமத்தை (ஸிலபஸ்) யொட்டி கவர்ன்மென்ட் போதனுமுறைப் பாடசாலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் அநேக வருஷங்களாக கணித ஆசிரியரான ஸ்ரீமான் பி. சிதாராமன், பி.ஏ., எல்.டி., அவர்களால் இயற்றப்பட்டது.

அநேக போதனு முறைச்சாலைகளின் தலைமை ஆசிரியர்களாலும், கணித ஆசிரியர்களாலும், மற்றும் கல்வி இலாகாவிலுள்ள இதர உத்தியோகஸ்தர்களாலும் நன்கு மதிக்கப்பட்டது.

இந்நூலின் முக்கிய அம்சங்கள் :—

(1) சென்னை வித்யா இலாகா டைரக்டர் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட பாடக்கிரமம் அல்லது ஸிலபஸ் பிரகாரம் ஒவ்வொரு விஷயமும் வரிசைக் கிரமமாக விவரிக்கப்பட் டிருக்கிறது.

(2) பிறர் உதவியின்றி மாணுக்கர்கள் தாமே சுலபமாய்க் கற்றுக்கொள்ளும்படியான எளிய நடையில் எழுதப்பட் டிருப்பதுடன் விஷயங்கள் தெளிவாகும்பொருட்டு அநேகவிதமான மாதிரிக் கணக்குகள் வழியுடன் செய்து விளக்கப்பட்டிருக்கின்றன. தவிர, அப்பியாசத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் கணக்குகளுள் கொஞ்சம் கடினமாயிருப்பவைகளுக்கு ஆங்காங்கே குறிப்புகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

(3) ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்தில் விளக்கப்பட்டிருக்கும் மாதிரிக் கணக்குகள் நன்றாய் மனதில் பதியும்வண்ணம் அநேக இலேசான மனக் கணக்குகளும் போடப்பட்டிருக்கின்றன.

(4) 1915-ம் வருஷ முதல், 1929-ம் வருஷம் முடிய **T. S. L. C.** பரிக்ஷையின் கணக்கு கேள்விகள் வழியுடன் போடப்பட்ட ஒரு அநுபந்தம் சேர்க்கப்பட் டிருக்கின்றது.

(5) ஆரம்ப கணிதத்தில் முக்கியமான விஷயங்களுக்கு 20 பாடங்கள் ரூபமாக கிரமமான மாதிரிபாடக் குறிப்புகள் எழுதியிருக்கிறது. தவிர, படங்கள் மூலமாக அநேக விஷயங்கள் திருஷ்டாந்தப் படுத்தப்பட்டிருக்கின்றன.

(6) எலிமெண்டரி பாடசாலைகளின் ஒன்றுமுதல் ஐந்தாவது வகுப்புகளுக்கு கணிதபாடக் கிரமம் அல்லது ஸிலபஸ் ஒன்று சேர்க்கப்பட் டிருக்கிறது.

(7) க்ஷேத்திரகணித விஷயங்கள் வேண்டிய அளவு, படங்கள் மூலமாகவும், கட்டப்பட மூலமாகவும் விவரிக்கப்பட் டிருக்கிறது.

(8) கூடியவரையில், பெருக்கல் வகுத்தல் செய்வதற்கு சுருக்கமான வழிகளும், கணக்குகள் செய்ய சுலபமான முறைகளும், பின்னங்கள், தசாம்சபின்னங்களை யறிந்துகொள்வதற்கு எளிய முறைகளும் ஏராளமாய்க் கையாளப்பட் டிருக்கின்றன.

(9) சிறிது ஊக்கமுள்ள மாணுக்கர்கள் தாங்களே முழுவதும் கற்றுக்கொள்ளும்படியான எளிய நடையிலும் உற்சாகம் ஏற்படக்கூடிய விதமாயும் எழுதியிருப்பதுமல்லாமல், இதை முற்றும் ஒருதரம் படிப்பவர் பிரயாசையில்லாமல், கணித பரிக்ஷையில் கட்டாயம் தேறலாம். பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களுக்கும் படித்துவிட்டவர்களுக்கும் இன்றியமையாதது. ஆகையால் ஒவ்வொரு மாணவரும் இப்புத்தகத்தின் உபயோகத்தை முற்றிலும் அடைவார்களென்று நம்பப்படுகிறது.

[இரண்டாம் பாகம்.—ஹையர் கிரேட் மாணவர்களுக்கு, இரண்டாவது வருஷம் உபயோகத்திற்காக, முப்பத்தேழு படங்களுடன் தயாராகிறது. வெகு விரைவில் வெளிவரும்.]

விலாசம் :— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

☞ பாராயணத் திருப்புகழ் :: பாக்கட் அளவு :: விலை அணு 2 :: 50-பிரதிகள் விலை ரூ. 4.

கீழ்க்கண்ட அரிய நூல்கள், சந்தாதார்க்கு மாத்திரம், குறைந்த விலைக்குக் கிடைக்கும்

	ரூ.	அ.
ஆரியமத உபாக்கியானம், I	0	8
ஆரியமத உபாக்கியானம், II	0	10
தேசிங்கு ராஜன்	0	10
ஸ்ரீமத் ராமாயண ஸாரம், I	1	0
ஸ்ரீமத் ராமாயண ஸாரம், II	1	0
ஸ்ரீமத் பாரத ஸாரம்	1	2
ஸ்ரீமத் பாகவத ஸாரம்	1	0
இயற்கை அற்புதங்கள்	0	10
வியாச விதானம்	0	12
ஐரோப்பிய மஹா யுத்தம்	1	4
பீஷ்மர் சரித்திரம்	0	6
குஹன் சரித்திரம்	0	4
திருமயிலைச் சிறப்பு	0	2
தேடாத செல்வம்	0	3
மனுநீதிச் சோழன்	0	8
விசாரசன்மர்	0	3
மங்கையர்க்கரசி	0	6
குண்டலகேசி	0	6
நீலி வசீகரம்	0	10
ஷேக்ஸ்பியர் சரிதை	0	8
பாண்டவ சரித்திரம்	2	4
திருமூலர் திருமந்திரம்	2	4
பஞ்சரத்தினம்	0	12
மரகதவல்லி	0	12
ராஜம் ஐயர் சரிதை	0	8
டிரெயினிங் ஸ்கூல் ஆரம்ப கணிதம்	1	2
ருக்மணி அல்லது பதிபக்தி	0	8
திரௌபதி	0	10
சகுந்தலை	0	6
கமலாகாந்தன்	0	2
ஸ்ரீகிருஷ்ணாவதார சரித்திரம்	0	8
கன்றுங் கனியுதவும்	0	7
முரளீதரன்	0	10
திராவிட வேதத் திரட்டு	3	8
சிறுத்தொண்டர் (நாடகம்)	அச்சில்.	
ஷண்முக விஜயம்	0	12
நால்வர் சரித்திரம்	0	12
கந்தரலங்காரம், கந்தரனுபூதி	0	3
திருப்புகழ் ரத்தினமாலை	0	3
திருக்குறள் நீதிக் கதைகள்	0	10

	ரூ.	அ.
தசகுமார சரித்திரம்	0	6
பாதாள வாசி	0	6
மூர்த்தி நாயனார் சரித்திரம்	0	3
மாணிக்க வாசகர்	0	2
திருநாவுக் கரசர்	0	2
சுந்தரர்	0	2
திருஞான சம்பந்தர்	0	2
பால ஷண்முக விஜயம்	0	8
ஸ்ரீ பால ராமாயணம்	0	8
ஸ்ரீ பால பாரதம்	0	8
தஞ்சாவூர் ஜில்லா வரலாறு	0	8
அக்பர் சக்கரவர்த்தி	0	12
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்	1	0
தஞ்சை நாயகர் தாழ்வு	1	0
ஷண்முக சுந்தரம்	2	0
தனபாக்கியம்	2	0
அம்பலவாணன்	3	0
மோகனாங்கி	1	4
சிவகுமாரன்	1	0
விஜய பாஸ்கரன்	2	0
அறநூல் (புதியதாய் வெளிவந்தது)	0	12
மைதிலி, முதல் பாகம்	0	12
மைதிலி, 2-ம் பாகம்	(அச்சில்)	
திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை	1	0
பரதன் (நாடகம்)	0	12
ஸ்ரீமத் ராமாயண வினு விடை	1	8
ஸ்ரீமத் பாரத வினுவிடை II	1	4
ஸ்ரீமத் பாரத வினுவிடை III	1	4
ஸ்திரீ ரத்னம்	1	4
சக்கிநிதி அல்லது செல்வராஜன்	0	12
சற்குண சந்திரன்	0	10
பிமலா அல்லது திவான் மகள்	0	8
புலவர் சரித்திரத் திரட்டு	0	12
ஹிமார்ஜுனை	0	8
பூதத்வ போதினி	0	10
கிரிஸெல்டா	0	3
ஹனுமப் பிரபாவம்	0	3
பிரபாவதி	0	4
ஜகஜ்ஜோதி	0	10

மானேஜர், விவேக போதினி காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

Aletris Cordial

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப்படுவது. ருது அடைய நிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு :— தேயிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ள வேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்து கொண்டால் விசேஷ குணம் உண்டு. (A. No. 963)

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்கட்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமின்மை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடாலாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்கலமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய மிகவும் கவனத்துடன் செய்யப்பட்டது

இப்பிரசித்தபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்,

—— RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY. (U. S. A.) ——

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

மணித் தைலம்

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட கூந்தல் தைலம். மண்டையை குளிர்ந்திருக்கச் செய்து, தலைமயிரை உதிராமற் தடுத்து பளபளப்பாயும் நீளமாயும் வளரச் செய்யும்.

5 துலாம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 1.

விபரங்களுக்கு எங்கள் ஆரோக்கிய கிரந்தத்தை வாசியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.

வெகுமதி ! .500 ரூபாய்கள் !!

ஸதா சௌக்ய ஸஞ்சீவி (யூனினி ஹல்வா)

எல்லாக் காலங்களிலும் பத்திய பேதமில்லாமல் உபயோகிக்கலாம்

இதில் சிறந்த விலையுள்ள உலோக பஸ்பங்களும், அசல் கஸ்தூரியும் சேர்க்கப்பட்டுள்ளது. இது ரத்தத்தை சுத்தி செய்து தாதுபுஷ்டியைக் கொடுத்து மனோவுல்லாசத்தைத் தரவல்லது. பசியை உண்டாக்கி திட சரீரத்தைக் கொடுக்கும். அஜீரணம், பித்தம் சர்வ மேகங்கள், வாத ரோகங்களைக் குணப்படுத்தும். இந்திரிய நஷ்டம், நீர் எரிச்சல், வெட்டை வெள்ளை, மேககிரந்தி முதலிய காரணங்களினால் ஏற்படுகின்ற தூர்வியாதிகளைக் குணப்படுத்தும். ரச பிடிப்பு, இருமல், சுவாசகாசம், கபம் முதலிய மூல வியாதிகளையும், மூலை சம்பந்தமான சகல வியாதிகளையும் குணப்படுத்தும். கண்ணோய்களை நீக்கும். நல்ல ஞாபக சக்தியை கொடுக்கும் ஓர் திவ்விய ஔஷதம். இது பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கு மிகச் சிறந்தது. ஸ்திரீகளுக்கு வெள்ளை, மாதவிடாய் காலத்தில் உண்டாகும் வயற்றுவலி, சூலை, மற்ற கர்ப்பாய ரோய்களையும் குணப்படுத்தும். மலபந்தங்களை குணப்படுத்தி பிரதி காலையிலும் சுகமாக மலப்பிரவர்த்தியாகும். இந்த ஹல்வா பல மூலிகைகளால் தயாரிக்கப்பட்டு நல்ல விலையுள்ள உலோக முதலிய பஸ்பங்களும், அசல் கஸ்தூரியும் சேர்ந்துள்ளது. அப்படியில்லை இதில் ரஸம், விஷம், கந்தகம் கலந்திருக்கும் என்று நிரூபிக்கின்றவர்களுக்கு ரூபாய் 500 இனும் கொடுக்கப்படும். எல்லாரும் உபயோகிக்கும்படி குறைந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதை சாப்பிட்டு இதின் அற்புத குணத்தை அறிந்த ஒவ்வொருவரும் இந்த 12 துலாம் லேகியம் 100 துலாம் பொன்னுக்கு சமமென்று சொல்லுவார்கள். இதை உபயோகிக்கும்போது யாதொரு பத்தியமாவது அனுபானமாவது கிடையாது.

12 துலாம் லேகியம் ரூ. 2—8—0. தபால் செலவு வகையரா அணா 8 தனி.

தி யூனினி மெடிகல் ஹால், 46, டாணா தெரு, புரசைவாக்கம், சென்னை.

தேசிங்கு ராஜன்

சரித்திர ரூபமான வசனம்

மிகவும் அழகாய், எளிய நடையில் சதாவதானம் T. கிருஷ்ணசாமி பாவலர் அவர்கள் இயற்றியது. தேசபக்தியைப் புகட்ட வல்லது. ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு பிரதி அவசியம் இருக்கவேண்டுவது.

4 போடோ படங்களுடன் கூடியது, விலை அணா 10

அல்லயன்ஸ் கம்பெனி, ஷண்முக விலாசம், மயிலாப்பூர், சென்னை.

அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொரி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து. (விலை அணா பத்து). அமிர்தாஞ்சனம் எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்பு செட்டி தெருவு, ஜார்ஜ் டௌன்,

சென்னைப்பட்டினம்,

Reg. No. M. 759] 56 [Vol. XXI, July, 1929

கண்கவரும் கூந்தலே :: பெண்களின் உரிமை ::

ஸ்திரீகள் ஒவ்வொருவருக்கும் அழகிய கூந்தல் அவசியமாகும்; அதுவே அவர்க்கு முடிசூட்டும் பிரசாபம். தலைமயிரிடம் மாதர் எவர்க்கும் அசிரத்தை கூடாது. அது மன்னிக்க முடியாத மாபெரும் பாபம். அழகல்லவா மயிர்த்தோகைக்கு மலிந்து மாட்சிமை தருவது? அதுவே யன்றோ சாயலுக்குச் சௌந்தர்யமும் இனிமையுந் தருவது? எனவே, மடந்தையர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் காலை ஐந்து நிமிஷ நேரமாவது

காமினியா தைலம்

(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

உபயோகித்து தமது கேச விருத்தியைக் கவனிப்பது முதல் தருமமாகும்.

இது பண்டையிற் சுண்டைப்போக்கி, மயிர்க்கால்களுக்கு உணவூட்டி படிப்படியாய்ச் செறிந்து நீண்டு ஓங்கு மயிரை வளர்க்கும். உன் தலைக்கு மயிர்த்தோகையே மாட்சிமை தருவது. அம்மாட்சிமையைக் காமினியா தைலத்தால் ஓங்கச் செய். அவ்வாறு செய்தால், மண்டையில் சரியான ரத்தஓட்ட முண்டாகிக் கேசங்களுக்குச் சௌக்கியந்தரும். மேலும் காமினியா தைலம் மிக மெல்லிய மனோஹரமான ஸுவாஸனை யுடையது. ஸ்திரீகளின் அழகிற்கு மூலம், அவர் முடிமேல் விளங்கும் கேசத்தோகையே; அதுவே அவர்க்கு ரமணீயமான சயமும், சௌபாக்கியமும் அதி சுந்தரமான வடிவமும் தருவது.

இந்த அத்தாட்சியைக் கவனியுங்கள்

இங்கிலாந்து, க்ரோஹில் என்னுமிடத்திலிருந்து ஏ. கோ என்பவர் எழுதியது:—இரண்டு பெட்டிகளும் செவ்வனே வந்து சேர்ந்தனவெனச் சொல்ல நான் சந்தோஷிக்கிறேன். எனக்கிது வரை தெரிந்தவற்றுள் உமது தலைமயிர்த் தைலங்களே மிகச் சிறந்தனவெனக்கூற நான் சந்தோஷமடைகிறேன்.

{ விலை புட்டி 1-க்கு ரூ. 1—0—0 (வி. பி. சார்ஜ் அணா 6 பிரத்தியேகம்.)
{ மூன்று புட்டிகளுக்கு ரூ. 2—10—0 (வி. பி. சார்ஜ் அணா 12 பிரத்தியேகம்.)

மணத்திற்கு மன்னன் ! வாசனைக்கு வாசவன்

ஆட்டோ டில்பஹார் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இந்தியா முழுதும் இதை அடையக் குறைபாடோங்கு விருப்பமே இதைப்போல் மற்றொன்று மிதற்குணையாகச் செய்யமுடியாச் சிறப்பை விளக்கும். சில சொட்டுகள் கைக்குட்டையில் விட்டால், ஜாதிமல்லி இவற்றின் அழிவற்ற மிக்க மனோஹரமான மணத்தை எங்கும் வீசும்.

விலை விபரம்:— { $\frac{1}{2}$ அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ 2 0 0
{ $\frac{1}{4}$ அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ 1 4 0
| டிராம் புட்டி 1-க்கு ரூ. 1 0 0
| (வி. பி. சார்ஜ் அணா 6 பிரத்தியேகம்.)

குறிப்பு:— இரண்டணா தபால் பில்லை அனுப்புவித்தால் மாதிரி புட்டி ஒன்று அனுப்பப்படும்.

ஆங்கிலோ இந்தியன் டிரக் அன்ட் கெமிகல் கம்பெனி,

போஸ்ட் பாக்ஸ் 2082, பம்பாய்

Printed at the PADMA PRINTING WORKS & Published by The Alliance Company, Mylapore, Madras.